# பவிஷு

## 1

இந்த வீடு இத்தனை அம்சமாகவும், அமைதியாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பதற்கு ஒரு காரணம் உண்டு.

ஐம்பது வருடத்திற்கு முன்னால் இந்த வீட்டிற்கு இத்தனை வசதியில்லை. இன்று இருப்பது போல், இவ்வளவு பெரிய மாளிகையாகவும் இந்த வீடு இல்லை. ஐம்பது வருடங்களுக்கு முன் இந்த வீடு இரண்டு கட்டு ஓட்டு வீடாகத்தான் இருந்தது. வீட்டின் இரண்டு பக்கமும் மழமழப்பான சிகப்புத்திண்ணைகள் இருந்தன. இடது பக்கத்திண்ணையில் மரச்சட்டமடித்த மறைப்பில் பெண்கள் படுத்துக் கொண்டிருப்பார்கள். வலது பக்கத்திண்ணையில் ஆண்கள் படுத்துக்கொண்டிருப்பார்கள். திண்ணையிலிருந்து பதினாறு தப்படி நடந்தால் தோட்டக்கதவு வரும். பதினாறு தப்படி பின் பக்கமாக நடந்தால் கொல்லை வேலி வரும். நெடுகே முப்பது தப்படி அகலமிருக்கும். முதல் கட்டு முற்றத்தோடு எல்லோரும் புழங்குகின்ற இடம். இரண்டாவது கட்டு சமையலறை.சாமான்கள் அறை, விறகு, வரட்டி வைக்கும் இடம். வீட்டில் இல்லாத நாளில் பெண்கள் தளர்ந்து தூங்க ஒரு காற்றோட்டமான அறை. பின் பக்க வராண்டா பிறகு கிணறு, வாளி, கொல்லை.



முன் பக்கத்தோட்டம் முழுக்க இடது பக்கம் பூச்செடியும், வலது பக்கம் காய்கறியுமாய் இருக்கும். நிறைய கீரைகள் வளரும். எப்போதும் காய்க்கின்ற முருங்கை மரங்கள் மூன்று இருக்கும். வீடு ஒட்டினாற் போல் வேப்பமரம். பின் பக்கம் சரக்கொல்லை. வீட்டு நடமாட்டங்களை வெளியே காட்டாத நந்தியாவட்டை. கொல்லையின் இடது பக்க மண்தரை முழுக்க வெள்ளைப் பூசணி. வேலி மீது பீர்க்கன், பாகன். பந்தலிட்டு அவரை டபுள் பீன்ஸ் என்று வீடு சுற்றி ஏதாவது வளர்ந்திருக்கும். காய்த்திருக்கும்.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்திருந்து அப்பா. அண்ணன், அண்ணி, ரங்கசாமி நால்வரும் தண்ணீர் ஊற்றுவார்கள்.

அண்ணனுக்கு அப்போது இருபத்தி எட்டு வயது, ரங்கசாமிக்கு இருபத்தியாறு வயது. அப்பாவிற்கு ஐம்பது வயசு. அண்ணன் கிணற்றில் தண்ணீர் சேந்த அப்பா வீடு சுற்றி வாசற்பக்கம் போய் தண்ணீர் ஊற்றுவார்.அண்ணி கொல்லைப்பக்கம் போவார். ரங்கசாமி இடது பக்கம் சுற்றிக்கொண்டு பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவார்.

பாதி வேலை நடக்கும் பொழுது அம்மா செடிகளை பரிசோதிக்க ஆரம்பிப்பார், எல்லாப் பூக்களும் காய்களும் பறித்து முடிக்க முக்கால் மணிநேரம் ஆகிவிடும். அன்று பறித்த காய், அன்று பறித்த கீரை என்று ஏதாவது உணவில் இருக்கும். சில சமயம் ஆளுக்கு ஒரு பப்பாளி சாப்பிட வேண்டியிருக்கும்.

இரண்டு மூன்று பெரிய பூசணிகள் காய்ந்து விட, தெரு முழுக்க விநியோகம் நடக்கும்.

அப்பா மாடு வளர்க்க வேண்டாம் என்று சொல்லி விட்டார். அது பாடு என்பது மட்டும் காரணமில்லை.

மாட்டுக்கு ஏதாவது சிரமம் வந்தால் மனசு தாங்காது என்பதும் காரணம்.

வீட்டில் இரண்டு நாய்கள் இருந்தன. ஒரு மான் இருந்தது. புறாக்கள் வளர்க்கப்பட்டன.

புடவைகள், வேட்டிகள் வாங்கி விற்பதுதான் முக்கிய தொழிலாக இருந்தது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னால் வாழ்க்கை அமைதியாக இருந்தது. சுபிட்சமாக இருந்தது. எல்லா வியாபாரிகளிடமும் அமைதி இருந்தது. அமைதிக்கு அடிப்படையான நேர்மை இருந்தது.

இத்தனை விளக்குகள் இல்லை. இவ்வளவு பகட்டு இல்லை. இவ்வளவு விளம்பரமில்லை. இத்தனை பொய்களுமில்லை.

தேவையானதை தேவையானவர்கள் வாங்கினார்கள்.

வயலில் வேலை செய்கிறவர்கள் 'எனக்கு பட்டுப் புடவை எதற்கு' என்று ஒதுங்கிக் கொண்டார்கள். 'வீடு தவிர எனக்கு நிலம் எதற்கு' என்று பிராமணர்கள் அடக்கமாக இருந்தார்கள். வைசியர்களுக்கு புத்தகங்களோ, பெரியபடிப்போ தேவைப்படவேயில்லை. வியாபாரத்தைத் தவிர சிறந்த தொழில் வேறு எதுவுமேயில்லை என்று வைசியர்கள் நினைத்தார்கள்.

ஆள அரசே இல்லாத க்ஷத்ரியர்கள்தான் என்ன தொழில் செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள்.

பெரிது பெரிதாக நிலம் வளைத்துப் போட்டார்கள். ஆனால், உடம்பு வணங்கி விவசாயம் செய்யமுடியவில்லை. நிலங்கள் விற்று தொழிற்சாலை ஆரம்பித்தார்கள். வியாபாரம் செய்யும் தெளிவில்லை.



அள்ளிக்கொடுத்த கை கிள்ளிக் கொடுக்கத் தெரியவில்லை. அதிக செலவு, வருமானமின்மை. அரசகுலத்தோர் தெருவுக்கு வந்தார்கள். கடலில் மூழ்கி வேறு ஊருக்கு குடிபெயர்ந்தார்கள்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு அரசகுடும்பம் மைசூரில் காவல் வேலை செய்தது. சோழமன்னர் பரம்பரை அது, ஆனால், எத்தனை வறுமை வந்தாலும், மதம் மாறவில்லை. பெண்களை வேலைக்கு அனுப்பவில்லை. வருஷத்திற்கு ஒருவருக்காவது தானமளிப்பதை நிறுத்தவில்லை. பொங்கலின் போது மாடுகளைக் கும்பிடுவதை நிறுத்தவில்லை.

இதைத்தவிர, அந்த சோழக்குடும்பம் மஹாளய அமாவாசையன்று வாளுக்கு படையல் போடும். வெட்டி வெட்டி நடுவே தேய்ந்து போன வாள் அது அதை மரபீடத்தில் நிற்க வைத்து, எண்ணெய் தடவி மாலை போட்டு, சந்தனம் குங்குமம் இட்டு, சமைத்த உணவை, சப்தமெழாமல் பரிமாறி.

''ஐயா, சாப்பிடுங்கோ.... அம்மா சாப்பிடுங்கோ...! தேவர்களே...சாப்பிடுங்கோ'' என்று வீட்டிலுள்ள அத்தனை அங்கத்தினர்களும், கைகூப்பி வாய்விட்டு கெஞ்சுவார்கள்.

இப்படி கேட்க வெட்கப்படக் கூடாது. வெட்கப் பட்டாலும் விடமாட்டார்கள்-

'சொல்லு சொல்லு. வாய் விட்டு சொல்லு. மனம் விட்டுப் பேசு என்று வற்புறுத்துவார்கள்,

கடவுளின் கோபத்திற்குக்கூட ஆளாகலாம். பித்ருக்களின் சாபத்திற்கு ஆளாகக் கூடாது.

தலையில் முடிசூடி, கையில் கோளேந்தி அரசாட்சி செய்த காலம் அழிந்ததற்கு பித்ருக்களின் கோபம்தான்

காரணம். அவர்கள் கட்டளையை மீறி உறவுக்குள்ளே, பகைமை வளர்த்து கொலை செய்ததுதான் காரணம்.

அந்த சோழ குடும்பத்தில் ஒரேயொரு ஆள் போலீஸ் சப்இன்ஸ்பெக்டராக இருக்கிறான். அந்தப் பையன் உடுப்போடு வந்து வீட்டில் சல்யூட் அடித்ததும், அரச பதவியே கிடைத்தது போல் சந்தோஷமடைந்தார்கள்.

ரங்கசாமியின் குடும்பமும் அரசகுடும்பம்தான். ஆனால், தொண்டை மண்டலம். வடஆற்காடு மாவட்டம்.

அவர்கள் வீட்டிலும் வாள் இருக்கிறது. புலி இலச்சினை பொறித்த கத்தியும், மூன்று குறு வாட்களும் இருக்கின்றன. நீண்ட பிடியுள்ள குத்தீட்டி ஒன்று இருக்கிறது. பிடியும் ஈட்டியும் தனியே கழட்டி வைத்திருப்பார்கள். பூஜையின் போது இரண்டையும் பொருத்தி சாய்த்து வைப்பார்கள். இவை ஐந்தும் மிகமிகப் பழமையானவை. ஆயிரம் வருடத்தியவை. இது தவிர, நீண்ட அரிவாட்கள் இரண்டு இருக்கின்றன. அவை இரண்டிற்கும் முந்நூறு வயது இருக்கலாம்.

கை சிலம்பும், மானும் இருநூறு வயதுடையவை. கோணல் மாணலாக பட்டை தீட்டிய ஒரு சிகப்புக்கல் ஒரு வெள்ளி டப்பாவில் வைக்கப்பட்டிருக்கும். அதன் வயதும் சொல்ல முடியவில்லை,

நடுநாடு என்றழைக்கப்பட்ட தொண்டை மண்டலம் முழுவதும் ஒரு காலத்தில் ஆட்சி செய்து மிஞ்சியது இவைகள்தான்.

ஆனால், சில திருமணங்களில் நெருங்கின உறவு வகை கல்யாணங்களில் மாப்பிள்ளை தலையில் பாகைக் கட்டி, அதற்கு மேல் தங்கத்தில் பட்டம்கட்டி, கழுத்தில்



தங்கச்சங்கிலி போட்டு நடந்து வரும் பொழுது, ஆயிரம் வருஷத்து முகம் லேசாய் தெரியும்.

உயரமும் அழகும் உள்ள வாலிபர்கள் இப்படி திருமண உடை உடுத்திக் கொண்டு வரும்போது, அங்குள்ள பெரியவர்களுக்கு மிகுந்த மனமயக்கம் ஏற்படும்.

அவர்கள் ஆதிகாலத்தில் சோழ தேசதது முத்தரையர்கள். சோழ எல்லையை பலப்படுத்துவதற்காக தொண்டை மண்டலத்திற்கு குடி பெயர்ந்தவர்கள். முதன்மையாய் இருந்ததால் முதலிகள் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஆனால், பழமையே பேசித் திரியாமல், கனவுலகத்தில் வாழாமல், அதிகம் அழிவு தராத வியாபாரத்தில் இறங்கினார்கள். ஆறு தலைமுறைகளுக்கு முன்னரே துணிகள் வாங்கி விற்றார்கள்,

நகரி நாகலாபுரம் வழியாக புடவைகளும், மர பொம்மைகளும், நெல்லும் வண்டிகளில் கொண்டு வந்தார்கள். புகையிலை எடுத்து வந்தார்கள். ஜார்ஜ் டவுன் என்றழைக்கப்படும் சென்னைப் பட்டணத்தில் விற்றார்கள்.

''ஒரு அரசபரம்பரை சட்டென்று வியாபாரத்தில் எப்படி இறங்கியிருக்கமுடியும்.''ரங்கசாமி தன் தகப்பனாரைக் கேட்டார்.

அவன் தகப்பனார், அவன் தாத்தாவை இதே கேள்வி கேட்டதை நினைவு கூர்ந்தார்.

''ஏழு தலைமுறைகளுக்கு முன்னால் வணிக குலத்தோருக்கு காவல் துணையாகத்தான் நமது முன்னோர்கள் இருந்தார்கள். மழைக்காலம் வரை வீட்டோடு இருப்பார்கள். மார்கழியின் போது விரதமிருப்பார்கள். பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்கள். தை

மாதம் வயலில் அறுப்பு வேலைகள் இருக்கும். விருந்து உபசாரங்கள் நடக்கும். மாசி மாசம் குளிர் குறைந்து வெய்யிலில் ஆரம்பிக்கின்ற வசந்த பொழுதில், பூக்கள் அதிகம் பூக்கிற காலத்தில், நீரும், புற்களும் நிரம்பக் கிடைக்கின்ற நேரத்தில், பத்து பத்து வண்டியாய் பயணப்படுவார்கள். தெற்கே மேற்கே வடக்கே என்று மாறிமாறிப் போவார்கள்.

பத்து வண்டிகளுக்கு இருபது இருபத்தைந்து படை வீரர்கள் காவலுக்கு இருப்பார்கள்.

இங்கிருந்து இரும்பு சாமான்கள், கருவிகள், கப்பலில் வந்திறங்கிய கண்ணாடி பொருள்கள், தங்க நகைகள், ஜாடிகள், பீங்கான் பாத்திரங்கள் போன்றவை அங்கு போகும்.

அங்கிருந்து புடவைகளும் அரிசியும் வரும், சாய வேட்டியும் கொண்டு வருவார்கள்.

அந்த வியாபாரிகளுக்கு துணையாகப் போனால், ஒரு வருடத்திற்கு வீட்டிற்கு வேண்டிய உணவு, தானியம் கூலியாக கிடைக்கும்.

ஒரு முறை வியாபாரி நோய்ப்பட்டு இறந்தபோது, அவர் மனைவியின் சார்பாக நமது மூதாதை காசு கொடுத்து பொருட்கள் வாங்கி வந்தார். தனக்காகவும் பொருள்கள் வாங்கி சென்னைப் பட்டினத்தில் விற்றார்.

அரச குடும்பம் வியாபார குடும்பமாகியது.

அழுகும் பொருள் விற்காமல், இரும்பு, தோல் வியாபாரம் செய்யாமல் மானம் காக்கும் ஆடைகள் மட்டுமே வாங்கி விற்றார்கள்.

இப்போது இந்த வீட்டுப் பெயரே புடவைக்கார வீடு, எங்கோ காவல் காப்பதைவிட, சேற்றில் இறங்கி ஏர் உழுவதைவிட, வட்டிக்கு விட்டு பணம் சம்பாதிப்பதை



விட இது உத்தமம். நாமும் நம் பெண்களை வேலைக்கு அனுப்புவதில்லை திருமணம் ஆனவுடனே தனிக் குடித்தனம் போவதில்லை.

ஆனால், இன்னமும் நாம் மாறவில்லை. சென்னைப் பட்டிணத்தில் வடஇந்திய வியாபாரிகள் நுழைந்து விட்டார்கள். அவர்கள் காசுக்கு முன்னே நமது புடவை வியாபாரம் எடுபடாது. பாஷை தெரியாத காரணத்தால் வியாபாரம் சிறக்க வில்லை. பிராமணர்களை மொழி பெயர்க்க வைத்து கொண்டு, கணக்கு எழுதவிட்டு, தட்டுத் தடுமாறி வியாபாரம் செய்கிறார்கள்.

அவர்கள் அடுத்த தலைமுறையில் தமிழ் கற்றுக் கொள்வார்கள். அப்போது நம் புடவை வியாபாரம் பெரிதும் பாதிக்கும். பம்பாய் துணிகளுக்கு முன்னால் ஆந்திரா சரக்கு எடுபடாது. பம்பாய் இந்தியாவின் வாசல், உலகத்தின் பல்வேறு விஷயங்கள் அங்கு வந்து இறங்குகின்றன. எனவே, நம் புடவை வியாபாரத்தை நாம் நிறுத்தியாக வேண்டும்.''

''தோல்வி ஏற்படும் என்று தெரிய வரும்போதே போட்டியிடாமல் விலகிவிட வேண்டும். ரங்கசாமி, உன்னோடு புடவை வியாபாரம் முடிய வேண்டும். உன் குழந்தைகள் பிராமணக் குழந்தைகள் போல் வெகு நன்றாய் படிக்க வேண்டும். இனி, படித்தவர்களுக்குத் தான் காலம்,

இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்து விட்டது. பல்வேறு வகையில் இந்தியா முன்னேறப் போகிறது. நிறைய கட்டிடங்கள் கட்டப் போகிறார்கள். ஊர் ஊராய் குடிபெயரப் போகிறார்கள். புகையிலும், தூசிலும் வேலை செய்யப் போகிறார்கள். நோய்ப்படப் போகிறார்கள். பம்பாயிலிருந்து நிறைய மருந்துகள்

வருகின்றன. தலை வலித்தால் பத்துப் போட வேண்டாம். மாத்திரை முழுங்கினால் போதும்.

பல் தேய்க்க உமிப்பொடி தேவையில்லை. இனிப்பு கலந்த மூலிகைப் பொடி அழகு டப்பாவில் வருகிறது. வெள்ளை வெளேரென்ற மல் வேட்டிகள் வருகின்றன. உத்திரமில்லாமல் வீடு கட்டும் முறை பம்பாயில் செய்கிறார்கள். கம்பி பின்னி, கலவை ஊற்றி கெட்டிப்படுத்துகிறார்கள். இதெல்லாம் சென்னையிலும் நடக்கப் போகிறது.

இனி, மண் சுவர் இல்லை. சிமெண்ட் என்கிற பொடி வருகிறது. தண்ணீரில் குழைத்து செங்கல் வைத்தால் இறுகிக் கொள்கிறது. வால்டாக்ஸ் ரோடில் ஒரு கோடவுன் முழுக்க அடுக்கி வைத்திருக்கிறார்கள். இனி, நகரத்தார்கள்கூட வியாபாரத்தில் முதன்மை பெற முடியாது. இது பனியாக்கள் காலம், நம் பிள்ளைகள் படிக்க வேண்டும்.

எதையாவது விற்று, ஏதாவது செய்து மிகச்சிறப்பாய் படிக்க வைக்க வேண்டும். படிக்கிற சூழ்நிலையை நம் குழந்தைகளுக்குத் தரவேண்டும். சிறு வயதிலிருந்தே புத்தியை, அந்த பிடிப்பை ஊட்டிவிட வேண்டும்.

நீ பணக்காரர்களோடு ஸ்நேகம் வைப்பதற்கு பதில், பள்ளிக்கூட வாத்தியார்களோடு ஸ்நேகம் கொண்டிரு. உன் குழந்தைகள் படித்து, மிகப்பெரிய அளவில் வர வேண்டுமென்றால், உன்னை நீ அதற்கு தயார் செய்து கொள்.

பொங்கலுக்கு படையலிட்டு கும்பிட்டால் மட்டும் போதாது. சுவடிகளை வைத்து சரஸ்வதி பூஜையும் கொண்டாட வேண்டும். உனக்கு ஆண் குழந்தை பிறந்தால் வீட்டில் முல்லைக் கொடி வளர்க்கப் போகிறேன். உன் பிள்ளை சரஸ்வதி கடாக்ஷம் பெற வேண்டுமென்று பூக்கள் கொய்து, நமது குலதேவதைக்கு



போடப் போகிறேன். இதை நீயும் மனசில் வாங்கிக் கொள்.'' அப்பா சொல்ல ரங்கசாமி தலையசைத்தார்.

மதுராந்தகத்திலிருந்து மறுநாள் செய்தி வந்தது.

'நாலு நாட்கள் முன்பு சுப ஜனனம். ஆண் குழந்தை. ஸ்வாதி நட்சத்திரம் தாயும் சேயும் நலம். அந்த ஆண் குழந்தை பிறந்த பத்து நாட்களுக்குப் பின்பு, ரங்கசாமியின் மனைவியின் அண்ணனுக்கு உத்திரமேரூரில் மூன்றாவது ஆண் குழந்தை பிறந்தது, அங்கும் தாயும் சேயும் நலம்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள பிரபல ஜோதிடரிடம் இரண்டு ஜாதகங்களும் கணித்து, விவரமாய் பலன் எழுதி, மதுராந்தகம் அனுப்ப வேண்டும்.'

அப்பா சைக்கிள் ஏறி, பல இடங்களுக்கு அலைந்து திரிந்து முற்றிய முல்லைக் கொடியாய் பார்த்து வாங்கி வந்தார். மண்ணை பதப்படுத்தி திதி பார்த்து, யோகம் பார்த்து, மேல்நோக்கு நாளில் பூமியில் நட்டார்.

ஆறு மாதம் பொறுத்து குழந்தை வீட்டுக்கு வரும் போது, முல்லைக் கொடி பூத்துக் குலுங்கியது. பையனுக்கு அப்பா சுகவனம் என்று பெயரிட்டார்.

சுகவனம் மிகச்சிறந்த வைத்தியனாவான் என்று ஜாதக பலனில் எழுதியிருந்தது.

## 2

ரங்கசாமிக்கு முதல் குழந்தையாக சுகவனம் பிறந்த பிறகு அண்ணனும், அண்ணியும் ஆடிப்போய் விட்டார்கள். அவர்களுக்கு குழந்தை பிறக்காதது பற்றி அதிகம் கவலைப்பட்டார்கள்.

''எனக்கு குழந்தை பொறக்கலையேன்னு கவலை இல்ல. என் கொழுந்தனுக்குப் பொறந்த குழந்தைய என் குழந்தையா நான் வளர்ப்பேன். ஆனா, குழந்தை இல்லாதவ தொடக் கூடாதுன்னு சொல்லிடுவாங்க ளோன்னு ஒரு பயம். குத்திக் காட்டி நோகடிச்சிடுவாங்க ளோன்னு ஒரு கலவரம், மனசு காயம் தாங்காத நான் ஏதோ வாயை விட்டுருவேனோன்னு ஒரு அச்சம்.''

''நான் அப்படி சொல்ல மாட்டேன் அண்ணி. என் பொண்டாட்டியையும் சொல்ல விட மாட்டேன். அதுவும் தவிர, உங்களுக்கு குழந்தை பொறக்காம இருக்காது. அப்படி பொறக்கலைன்னு வெச்சுக்கோங்க. எனக்கு பிறக்கிற ரெண்டாவது குழந்தை உங்களுக்கு. நம்ம மூதாதையர் மேல சத்தியம்.'' ரங்கசாமி வாக்கு கொடுத் தான்.

''பெரியவங்க பிள்ளைய பாத்துக்கறேங்கிறாங்களா... நல்லா பாத்துக்கட்டும், நான் பால் கொடுத்துட்டு தூங்கப்போறேன் எங்க வீட்ல பகல் முழுக்க வேலை. ராத்திரி முழுக்க ரகளை. எனக்கு தூக்கமே சுத்தமா இல்ல உங்க அண்ணனும் அண்ணியும் நல்லா பாத்துக்கட்டும். எங்க விட்டுல ஏற்கனவே இந்தப்பேச்சு வந்தது. 'பிள்ளைய விடாதடி'ன்னு தான் பேசினாங்க நான் சுள்ளுன்னு சொல்லிட்டேன்.''

''அவங்களுக்கு குழந்தை பிறந்தா வீடும் தோட்டமும் அவங்க பிள்ளைகளுக்கு போகும். இப்போ, பங்கு பிரிக்காத மொத்தமா நம்ம குழந்தைகளுக்கே வரும்னு சொன்னேன்.''

''அண்ணன் ஆகாது அண்ணன் சொத்து மட்டும் வேணும்னா நல்லாருக்குமா. அதையும் தவிர, அவருடைய அண்ணி நல்ல மாதிரி. நாம கொஞ்சம் பிரியமா இருந்தா அவங்க ரொம்ப பிரியமாயிடுவாங்க.'' ரங்கசாமியின் மனைவி சுந்தரி சொன்ன வண்ணம் செய்தாள்.



''ஏங்க பெரியவங்களே... இங்கே வாங்க. இப்படி உக்காருங்க.'' குழந்தைக்கு முலைப்பால் கொடுத்தபடியே ரங்கசாமியின் அண்ணியை அழைத்தாள்.

''அடிமனசுலேருந்து சொல்றேன். இவன் உங்க குழந்தை. நமக்குள்ளே சண்டை மூட்டிவிடுறதுக்கு, தெருவுல போறவன் வர்றவன் எவனாவது முயற்சி செய்யத்தான் செய்வான். 'சுந்தரி உன்னப்பத்தி தப்பா பேசுனுச்சு'ன்னுதான் ஆரம்பிப்பான். 'அடப்போடா துடப்பக்கட்டை'ன்னு மல்லாக்கத் தள்ளிட்டு வந்துருங்க,''

''நீங்க என்னைவிட எட்டு வயசுதான் பெரியவங்க. ஆனா, உங்களை என் அம்மா மாதிரி பாக்கறேன். நமக்குள்ளே கோபம், முணுமுணுப்பு, சண்டை, சச்சரவு எல்லாம் இருக்கும். ஆனா, வெறுப்பு வராது. இந்த உறவு அறுந்து போகாது.''

யார்கிட்ட சண்டை போட முடியும். தெரிஞ்சவங்க கிட்டதானே... ஒத்துமையா நாம இருக்கிறதை தாங்காத வங்க குழப்பறதுக்கு வருவாங்க. 'ஆமாம் ஆமாம்'னு கேட்டுட்டு விட்டுறணும்,

இந்தாங்க... பிள்ளைய பிடிங்க. குந்த வெச்சு கொஞ்ச நேரம் ஆட்டுங்க. ரெண்டு விரல் பால் கக்கும். துடைச்சுப் போட்டுட்டு, படுக்க வைச்சிடுங்க. நான் சாப்பிட்டுட்டு தூங்கறேன்.''

அண்ணியிடம் பிள்ளை ஒட்டியது. அவள் தூக்கினால் தான் அழுகையை நிறுத்தியது. அண்ணனின் முகம் பார்த்து மலர சிரித்தது.

அப்பா யார் யாரையோ பார்த்து வந்து, அண்ண னுக்கு நாகதோஷம் என்று சொன்னார். நாடிஜோஸியம் படித்துவிட்டு பரிகாரம் எழுதிக் கொண்டு வந்தார். நவநீதம் என்று சொல்லப்படும் வெண்ணெயை நெல்லிக் காய் அளவு நாள் தவறாது அண்ணனை சாப்பிடச் சொன்னார். அண்ணிக்கு ரத்தவிருத்திக்காக பழங்களும், காய்கறிகளும், மூலிகைகளும் உண்ணக் கொடுத்தார்.

அண்ணி துளசி மாடத்தை காலையும், மாலையும் இருபத்தோரு முறை வலம் வந்தாள். அதே சமயம், சுந்தரி எந்த சிரமமுன்றி மறுபடியும் சூலுற்றாள்.

''தலைச்சனுக்கு ஒருவயசு ஆகலை. நான் முழுகாம இருக்கேன். என் உடம்பு என்னதுக்கு ஆவறது என் வீட்டுக்குப் போய் நின்னா, 'என்னடி... வருஷா வருஷம் வயித்தை சாய்ச்சுகிட்டு வந்துடுறேன்னு கேக்கறாங்க. அந்த நாட்டுப்புறத்துல போய் குளிக்கிறதுக்கும், துவைக் கிறதுக்கும் அல்லாடணும்.'' ரங்கசாமி மனைவி அலுத்துக் கொண்டாள்.

''வேணாம். நீ எதுக்குப் போகணும். போகாதே, எதிர்லடாக்டர் வீடு இருக்கு. கிட்டக்க கோஷாஆஸ்பத்திரி இருக்கு. தெருக்கோடியில நர்ஸம்மா இருக்காங்க. கூட மாட ஒத்தாசைக்கு நான் இருக்கேன். எல்லாத்தையும் விட்டுட்டு ஏன் போறே...''

''ஏங்க...நீங்களும் சுந்தரிய இருக்கச் சொல்லுங் களேன்.'' அண்ணனை பிடித்து இழுக்க, அண்ணனும் சுந்தரிக்கு எதிர் பக்கம் இருக்கும் சுவர் பார்த்து கேட்டுக் கொண்டார்.

''இந்த தடவை என்ன குழந்தை பிறந்தாலும் அவங்களுக்கு தத்து கொடுத்துடணும். அவசியம்னு பட்டா இந்த விஷயத்தை உங்க வீட்டுக்கு எழுது. பின்னால, தொந்தரவு பண்ணப் போறாங்க.''

ரங்கசாமி மனைவியிடம் பேசினான்.



''அவங்க யாரு பண்றதுக்கு, பிறந்தது. பிறக்கப் போறது எல்லாத்தையும் கொடுப்போம். யார் நம்மள கேக்கப் போறா. காலையில ஆறே முக்கா வரைக்கும் எந்த வீட்டுல தூங்க முடியும். மத்தியானம் ரெண்டு மணி நேரம் எந்த வீட்டுல புருஷன் கூட படுக்க முடியும். என்னைவிட குழந்தைங்கள அவங்க நல்லா பாத்துப்பாங்க. எல்லா குழந்தைங்களையும் அவங்ககிட்டேயே கொடுத்துட லாம்.''

தெருமுனையில் உள்ள நர்ஸ்தான் பிரசவம் பார்த் தாள். அண்ணி தான் உதவி செய்தாள். குழந்தைகளையும் கவனித்து, சுந்தரியையும் சீராட்டி, அப்பாவிற்கும். அம்மாவிற்கும் கவனமாக சோறு போட்டு தோட்டத்தை சீர் செய்து...என்று பல வேலைகள் அண்ணிக்கு இருந்தன. அண்ணி அசரவேயில்லை.

இந்தியப் பெண்களின் உடைகளில் மாறுதல் வந்தது. பிரா அறிமுகமாயிற்று.

''வட இந்தியன் ஊர் விட்டு ஊர் வந்து வியாபாரம் செய்கிறானே. நாம் போய் வாங்கி வந்தாலென்ன...''

அண்ணனும் தம்பியும் பம்பாய்க்கு ரயிலேறினார்கள்.

தைத்த உள்ளாடைகள் வாங்கி வந்தார்கள். வெள்ளை, சிகப்பு உள்பாவாடைகள் மூன்று விதமான 'பிராக்கள்' ஷிம்மிகள், ஜட்டிகள் என்று பெண்கள் சமாச்சாரமாய் வாங்கிவந்தார்கள்.

சென்னைக்கு வந்து விலை வைக்கிற போதுதான், சௌகார்பேட்டை வியாபாரி ஒன்றுக்கு மூன்று விலை வைப்பது தெரிந்தது.

நூறு ரூபாய் சரக்கை கடனாக இருந்தால் முந்நூற்று ஐம்பது ரூபாய்க்கும் பணமாக இருந்தால் முந்நூறு ரூபாய்க்கும் விற்பது புரிந்தது.

'கடனே கிடையாது பணம் இருநூத்தம்பது வை' என்று அதே பிராண்டை வியாபாரிகளுக்கு விற்றார்கள்.

சரக்கு வாங்க சில்லறை வியாபாரிகள் சௌகார் பேட்டைக்கு போக வேண்டி இருந்தது. அண்ணனும் தம்பியும் சில்லறை வியாபாரி நோக்கிப் போனார்கள்.

குழந்தைக்கு பால் மறக்கடிக்கின்ற ரப்பரை ஆறு மூட்டை வாங்கி வந்தார்கள். வெள்ளை டிரேஸ் பேப்பரில் சுற்றி, உள்ளூரில் செய்த அட்டை டப்பாவில் போட்டு, நல்ல விலைக்கு விற்றார்கள்.

இந்த வியாபாரத்தில் அண்ணனின் பங்குதான் அதிக மாக இருந்தது, வெளியூரிலிருந்து வந்தவுடன் உள்ளூரில் அலைய அவரால் தான் முடிந்தது.

ஆண்கள் ஊரில் இல்லாத போது அப்பா காவலுக்கு இருந்தார், அண்ணி நிர்வாகம் செய்தாள். சுந்தரி எல்லா இடத்திலும், எல்லோருக்கும் துணை நின்றாள்.

தோட்டத்தை மறைத்து வாசற்பக்கம் கடையாக்கச் சொன்னாள். அவள் வீட்டில் சொத்து பிரிக்கிறார்கள். என்று கேள்விப்பட்டு உடனே பஸ் ஏறி, மதுராந்தகம் போய் தன் பங்கை தன் உறவுகளுக்கே விற்று காசும், நகையுமாய் திரும்பினாள்.

'இதையும் வியாபாரத்துல போடுங்க' என்று மொத்தக் காசும் கொடுத்தாள்.

இந்த முறை கண்ணாடி பாவாடை என்கிற துணி, கண்ணாடி சில்லு, வைத்து எம்பிராய்டரி செய்த துணி ஐந்து கலரில் இரண்டாயிரம் மீட்டர் வாங்கி வந்தார்கள். வீட்டிலேயே வைத்து வியாபாரிகளுக்கு அளந்து விற்றார்கள்.

மீட்டருக்கு பத்து ரூபாய் லாபம் கிடைத்தது. முன்னே கட்டிடம் எழுப்பினார்கள்.



ஒரு பக்கம் அலுவலகமும், மறுபக்கம் கோடவுனும் வடிவமைத்தார்கள். இரண்டு டெலிஃபோன் இணைப்பு வாங்கிக் கொண்டார்கள். 'சுந்தரி எண்டர்பிரைஸஸ்' 'சுகவனம் அன்கோ' என்று பெயரிட்டார்கள். அண்ணி, அப்பா, அம்மா எல்லோரையும் பாகஸ்தர்களாக்கிக் கொண்டார்கள்.

கணக்கு எழுதவும், கடைகளுக்கு போய் வரவும் ஆட்களை நியமித்தார்கள். பம்பாயில் எந்தத்துணி புதிதாக வந்தாலும் சென்னையில் பரப்ப, தமிழகத்தின் எல்லாப்பகுதிகளிலும் ஊடுருவ அவர்கள் உதவி தேவை யாக இருந்தது.

அடுத்த குழந்தைக்கு அப்பா மணி வண்ணன் என்று பெயர் வைத்தார். தொட்டிலிலிட்டு பெயர் வைத்த மறு நாளே, வக்கீல் வைத்து சட்டப்படி குழந்தை மணிவண் ணனை ரங்கசாமி அண்ணனுக்கு தத்து கொடுத்தார்.

தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு எதிராய், மிக வேகமாய் ஒரு இயக்கம் வளரத்துவங்கியது. திராவிட முன்னேற்றக் கழகம் என்று அந்த இயக்கத்தை அழைத்தார்கள்.

''இவனும் நல்லா படிப்பானாப்பா. இவனுக்குன்னு ஏதாவது செடி நடேன்'' ரங்கசாமி அப்பாவை ஆவலோடு கேட்டார்.

அப்பா சைக்கிள் ரிக்ஷா ஏறி அடையாறிலிருந்து பவழமல்லி வாங்கி வந்தார். நல்ல நாள் பார்த்து, மணி வண்ணன் பார்க்க வீட்டின் வலப்புறம் நட்டார்.

இடப்புறம் முல்லைக்கொடியும் வலப்புறம் பவழமல்லி யும் உரமும், நீரும் உறிஞ்சி ஓங்கி வளர்ந்தன. வாசனை பரப்பின.

''பசங்கள எங்கேப்பா சேர்க்கறது. நம்ம வீட்டு கிட்டக்க நல்ல பள்ளிக்கூடம் இல்லியே...மாநகராட்சி பள்ளிக்கூடம் தானே இருக்கு,''

''அங்கே வேணாம். சாந்தோம்கிட்ட பாதிரியாருங்க நடத்தற பள்ளிக்கூடம் இருக்கு. ஆரம்பத்திலேருந்தே பசங்க அங்கதான் படிக்கனும்.''

''ரொம்ப தொலைவாச்சேப்பா.''

''ஒரு சைக்கிள் ரிக்ஷா வாங்கிடு. கார்த்தாலயும். சாயங்காலமும் பாசங்களுக்காக அவன் பள்ளிக்கூடம் போகணும் வரணும் நம்ம வீட்டு பொம்பளைங்க கடை கண்ணி போக, மத்த நேரத்துல அவன் வண்டி ஒட்டிக்கி லாம்.''

முத்து என்கிற இளைஞன் தாம்பரத்திற்கு அருகேயுள்ள முடிச்சூர் என்ற கிராமத்திலிருந்து வந்தவன், சைக்கிள் ரிக்ஷா ஒட்ட வந்தான்.

''சைக்கிள் ரிக்ஷாக்காரனுக்கு சவாரியே பள்ளிக்கூட பசங்கதான். உன் பசங்கள பள்ளிக்கூடம் கொண்டு போய் விட்டா, நான் வேற என்ன சவாரி ஒட்ட முடியும். நான் உன் வீட்டிலேயே இருக்கேன். சோறு போட்டு கூலி கொடு.''

''உன்னப் பாத்தா குடிகாரன் மாதிரி இருக்கு. உன்னை எப்படி வீட்டுக்குள்ள சேக்கறது.'' முத்துவின் கோரிக்கையை அப்பா மறுத்துப் பேசினார்.

''என் தாய் மேல சத்தியம் குடிக்கிறவங்களோடகூட சேரமாட்டேன்.''

அந்த முத்து உள்ளங்கையை சுவரில் அறைந்து பேசியது. வீட்டில் எல்லோருக்கும் வேடிக்கையாக இருந்தது.

இடுப்பில் லுங்கியும், சிகப்பு பனியனும் கழுத்தில் கைக்குட்டையும் கட்டி காலில் செருப்பு போட்டு நடப்பதை அந்தத் தெருப் பெண்மணிகள் வேடிக்கையாக பார்த்தார்கள்.



பார்ப்பதற்கு முரடாக இருந்தாலும் அந்த முத்துவிடம் பல நல்ல குணங்கள் இருந்தன.

''என்னடா...முண்டாவுல தாயத்து கட்டி இருக்கே என்ன தாயத்து அது.'' ரங்கசாமியின் அப்பா வியப்போடு முத்துவைக் கேட்டார்.

''அது ஒண்ணும் இல்லீங்க சும்மா ஒரு ஸ்டைலுக்கு கட்டியிருக்கேன்.''

''ஸ்டைலா?''

''அப்பதான் முண்டா எடுப்பா தெரியும். பாக்கறவன்லாம்,அட. எவ்வளவு வலிவு'ன்னு தெகைச்சுப் போய் நிப்பாங்க.

''அடச்சீ...அவுருடா அந்த தாயத்தை.''

''அவன் இஷ்டம் என்னமோ கட்டிகிட்டுப்போறான். அத்தப் போய் நீங்க ஏன் அவுக்க சொல்றீங்க. கோயில் தாயத்து, குடும்பதாயத்துன்னு பொய் சொல்லியிருக்கலாமில்ல. அதெல்லாம் சொல்லாம உண்மை சொன்னான் இல்ல. சின்னப்பையன்.எதுனா செய்துட்டுப் போகட்டும். அண்ணி அவனுக்கு வக்காலத்து வாங்கினாள்.

முத்து சட்டென்று அண்ணியின் கால்களுக்கு முன்னால் பணிந்தான்.

''தாயே...நீங்கள் என் உயிர் காத்தீர்கள். தமிழ் நாட்டின் மானம் காத்தீர்கள். அதை இந்த மனோகரன் உயிர் இருக்கும் வரை மறக்கமாட்டான்.''

''அது யாருடா மனோகரன்'' அண்ணி வியப்போடு கேட்க, முத்து ரகசியமாக பேசுவான்.

''ஐயா காலையில பஜாருக்கு போயிடுவார் இல்ல... 'அப்போ நடிச்சுக் காட்றேன்.''

மேல் துணியில் தன்னைத் தானே பிடித்துக் கொண்டு, மிகப் பெரிய வீர வசனம் பேசி, அவன் நடிக்க நடிக்கத் தான், அந்த வீட்டிற்கு, சினிமா பற்றிய ஞானமே வந்தது.

''பரதன் படைகளோடு வந்து விட்டான். அண்ணா... ஆணையிடுங்கள். அவனை நிர்மூலம் செய்து விட்டு வருகி றேன். அதோ... தேர்படை வருவதற்குண்டான தூசு தெரிகிறது. ஆயிரமாயிரம் காலாட்படை வீரர்கள் வருவ தும் தெரிகிறது. யானைகளும், ஒட்டகங்களும் வருகின் றன. நம்மைச் சுற்றி வளைத்து, கொன்று போட, பரதன் திட்டம் தீட்டியிருக்கிறான், அவன் எண்ணத்தை வேரறுப் பேன். நான் யாரென்று அவனுக்குக் காட்டுவேன்.'' முத்து லட்சுமணனாய் துடிப்பான்.

அடுத்து சகோதரனை சமாதானப்படுத்தும் ராமனாய் நடிப்பான்.

''ஆறுதல் சினமே அந்தோ லட்சுமணா. ஆத்திரப் படல் நன்றோ...'' என்று ராமர் மிக நிதானமாய் தம்பியை நோக்கி பாடுவார். அணைத்து ஆறுதல் சொல்லுவார்.

சில சமயம் சில கட்டங்களில் ரங்கசாமியின் அம்மா விற்கு அழுகையை கொடுத்து விடும். அண்ணி ராமனை எண்ணி உறைந்து போவாள்.

''நாங்க வயல்ல புல்லு பிடுங்கிற ஜாதிங்க. பள்ளர்னு சொல்லுவாங்க. ஆனா, எங்க அப்பா கூத்து கட்டுறதுல ரொம்ப கெட்டிக்காரரு. பாய்ஸ் கம்பெனி டிராமா பார்த்து பார்த்து, அந்த மாதிரி டிராமா, போடுவாரு. நிறைய கை வேலை செய்வாரு.

வீட்டுல எல்லாரும் உக்காந்து ஆயிரம் பிள்ளையார் குடை பண்ணுவோம். நாலணா குடையை எட்டணா வுக்கு விப்போம். நவராத்திரிக்கு தோரணம் கட்டித் தருவோம். இப்போ மீட்டிங்கெல்லாம் ஜாஸ்தி நடக்குது



யில்ல. எங்க அப்பா மேடை செட் வச்சிருக்காரு. வித விதமா கட்சிக் கொடி வச்சிருக்காரு. அந்தக் கட்சிக்கும் மேடை போட்டுத் தருவாரு.

தாம்பரம், செங்கல்பட்டு தொடங்கி திண்டிவனம் முட்டும் மேடை போடுறதுக்கு அப்பாவத்தான் கூப்பிடு வாங்க.

எங்க அப்பா துட்டு பாக்கி வாங்கினு வர அனுப்பிச்சாரு. ஒரு கட்சிக்காரன் எங்கிட்ட, 'கையெழுத் துப் போடு பணம் தர்றேன்'னான். நான் கையெழுத்து போட்டதும் காணாமப் போயிட்டான். அப்புறம் எங்க அப்பா போய் கேட்ட போது, 'முத்துகிட்ட துட்டு கொடுத்து, கையெழுத்து வாங்கிட்டேன்'னான் அவன் எதிர்க்கயே என்னை நாயடி பேயடி அடிச்சாரு, நான் என்ன சொல்லியும் நம்பலை. அவனும் உள்ளே புகுந்து, 'எங்கேடா நான் கொடுத்த துட்டுன்னு' தலையில அடிச்சான்.

நான் கத்தி எடுத்து, அவன் காதை அறுத்துட்டு, பயத்துல மெட்ராஸ் ஓடியாந்துட்டேன். ஒரு வருஷம் குப்பைக் காகிதம் பொறுக்கினு இருந்தேன். பிள்ளையார் கோயில் வாசல்ல தேங்காய் கடை போட்டு, சூறைத் தேங்காய் குத்தகை எடுத்தேன்.

ஐயருங்க பங்கு கேட்டானுங்க. தரமாட்டேன்னுட் டேன். உடனே, மௌனப் பிள்ளையார்னு பேரு மாத்திட்டான்.

பிள்ளையார் தியானம் பண்றாரு. சூரைத்தேங்கா உடைச்சு, சத்தம் போடக்கூடாதுன்னுட்டான். ஆனா, வீட்டிலேயே உடைச்சு கோயிலுக்கு கொண்டாரலாமாம். அப்படி கொண்டாறதுல பாதி முடி பாப்பானுக்காம். எனக்கு ஆத்திரம் தாங்கல.

அந்த ஐயரையும், அந்தத் தெருவுல இருக்கிற பொம்பளையப் பத்தியும் போர்டுல அசிங்க அசிங்கமா எழுதிட்டு ஓடி வந்துட்டேன். அந்த ஐயரை கோயில விட்டு துரத்திட்டாங்க.

உலகத்துல யாரை வேணா நம்பலாம். பிராமின்ஸை நம்பக்கூடாது.

அந்த ஐயருக்கு கோயில்ல சம்பளம். தட்டுல துட்டு, கடைக்காரங்க மாமூல், தண்ணி பாலை அபிஷேகம் பண்ணி அதுல காசு. தெவசத்துக்குப் போனா அரிசி, வாழைக்கா, ஒண்ணேக்கால் ரூபா... இத்தினி விதமா சம்பாதிச்சும் ஆசை அடங்கலை. மாசம் நூறு ரூபாய் கொடுன்னு சொல்றான் என்னை.

என்னை பேரம் பேசவே வுடலை. அதிகாரம் பண்ணினான். 'எனக்கு காசு கொடுக்கலேன்னா, கடை போட முடியாதுன்னான். நான் அவன் கதையையே கந்தல் பண்ணிட்டு வந்துட்டேன்.

மறுபடி சொல்றேன். எனக்கு பாப்பான்னாலே பிடிக்காது.'

''ஏண்டா...ஒரு நாளைக்கி எங்களயும் இப்படித் தானே பண்ணிட்டுப் போயிடுவே...'' ரங்கசாமியின் அம்மா கேட்டாள்.

"செய்ய மாட்டேம்மா. நீங்க எம் மேல கொஞ்சம் அன்பு காட்டினாக்கூட போறும். நான் உங்கமேல உயிரா இருப்பேன். நீங்க, முத்துன்னு பேர் சொல்லி மதிச்சாப் போறும். எட்டி உதைச்சாலும் தாங்கிக்குவேன். ஜாதிபேர் சொல்லி இழிவு படுத்தறாங்கம்மா. எனக்கு அது தாங்காது."

''ஜாதி முக்கியமே இல்ல. ஒரு மனுஷன் நல்லவனா கெட்டவனா, அதான் முக்கியம். முத்து நல்லவன். நாம



அவனுக்கு ஏதாவது செய்யணும்.'' ரங்கசாமியின் அப்பா முன் மொழிந்தார்.

''நாங்க கார் வாங்கலாம்னு இருக்கோம்டா. நீ கார் கத்துக்கயேன்...எதிரே இருக்கிற ஓட்டு வீடு விலைக்கு வருது. அதையும் மடக்கிப் போடலாம்னு இருக்கோம். முன்னால இடிச்சு கார் ஷெட் ஆக்கலாம். பின்னால தங்கிக்கலாம்.'' அண்ணன் கட்டளையிட்டார்.

''கார் கத்துக்கிட்டு ஓட்ட ஆரம்பிச்சா மத்த விஷயங்களும் மாறணும். பேப்பர் படிக்கணும். எது டெலிவரி சலான், எது பில்லு, என்ன சரக்கு வெளியே போகுது, என்ன சரக்கு உள்ளே வருதுன்னு தெரியணும்.''

''இந்த மாதிரி அரை டிராயரோட அலையக்கூடாது. காக்கி பேண்ட், வெள்ளை சட்டை, கால்ல செருப்பு, தலையில எண்ணெய் போட்டு படிய வாறணும். வெத்தலைக் காவியா இருக்கக்கூடாது. மூணு வேளை பல்லு தேய்க்கணும். நெத்தியில விபூதி குங்குமம் வைக்கணும். இந்தா...இது என் வாட்ச். கட்டிக்க... மணி பாத்து வேலை செய். ரங்கசாமி கடிகாரம் பரிசளித்தார்.

அப்புறம், ஒரு முக்கியமான விஷயம். இந்த கூத்தாடுறதை நிறுத்து. ஏதோ ஒரு தமாஷுக்கு நம்ம வீட்ல ஆட்றே. ரைட்டு. கூத்தாடுறவன் வியாபாரியா இருக்க முடியாது. அப்படி கூத்து முக்கியம்னா முழுநேரக் கூத்தாடியா இரு. நாடகம், சினிமான்னு போயிடு. இதுல பாதி, அதுல பாதி இருக்காதே. என்னா சொல்றே...'' அண்ணன் அதட்டினார்.

முத்து சில நொடிகள் யோசித்துவிட்டு, 'உங்களோடேயே இருந்துடறேன்' என்று பதில் சொன்னான்.

அவன் நன்றாக கார் ஓட்ட கற்றுக் கொண்ட பிறகு, ஒரு பழைய ஃபியட் கார் வாங்கப்பட்டது.

இந்த முறை பம்பாயிலிருந்து பிளாஸ்டிக் ரெயின் கோட்டும், நைலக்ஸ் புடவைகளும், ஹிமாலயா புக்கே பவுடர் டின்களும் லாரியில் சென்னைக்கு வந்தன. எதிர் வீட்டில் வாசனை பவுடர் அடைத்துக் கொண்டது.

'பூவுக்கே சமானமாய், மாறிலாத புது மலர்ச்சி வந்திடவே. நேரிலாத மேனியெழில் தந்திடவே, மாறிலதா சாதனம் ஹிமாலயாவுக்கே. ஹிமாலயா ஹிமாலயா ஹிமாலயாவுக்கே.' ரேடியோவில் சினிமாப் பாட்டுகளுக்கு நடுவே பவுடர் விளம்பரம் பாடியது. ஊர் முழுவதும் இந்த அழகான டியூன் பரவியது. பவுடர் வியாபாரம் அதிகரித்தது.

எதிரே இருந்த ஓட்டு வீட்டை இடித்து கீழே கோடவுனும், மேலே அலுவலகமுமாய் கட்டினார்கள். மூன்று லாரிகள் உள்வைக்க இடம் வைத்துக் கொண்டார்கள். ஒரு லாரி வாங்கினார்கள்.

சுகவனத்தை பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று அண்ணி அண்ணனிடம் சொன்னாள்.

அண்ணன் அடுத்த தெருவிலுள்ள கல்யாணசுந்தரம் வாத்தியாரைத் தேடிப் போனார். அவர் வீட்டுப் பெண்களுக்கு நிறையப் பழங்களும், அரை டஜன் பவுடர் டப்பாக்களும், ஸ்னோ பாட்டில்களும் பரிசளித்தார்.

''பள்ளிக்கூடத்துல சேக்கிற வயசாகலையே. இன்னும் ஒரு வருஷம் போகட்டுமே...''

''அவன் பள்ளிக்கூடத்துக்கு போறதுக்கு முன்னாடி, தினம் உங்க வீட்டுக்கு வந்துட்டு போயிட்டு இருக்கட்டும். என் பொண்ணும் பள்ளிக்கூடம் முடிச்சிட்டு சும்மாதான் இருக்கா. விளையாட்டோட விளையாட்டா அவங்களுக்கு எல்லாம் சொல்லித்தருவா. என்ன சொல்றீர்.''



''ரொம்ப சந்தோஷம். என்ன சம்பளம்.''

''ஆறு பவுடர் டப்பா கொடுத்திருக்கேளே... போறாதா.''

''மாசம் பத்து ரூபா தரேன். நவராத்திரிக்கும், தீபாவளிக்கும் உங்க பொண்ணுக்கும், அவ அம்மாவுக்கும் புடவை ரவிக்கை எடுத்துத்தரேன். சுகவனம், மணிவண்ணன் ரெண்டு குழந்தைகளுமே கெட்டிக்காரர்களாகணும்.''

அங்கேயே, அப்பொழுதே 'தோடுடைய செவியன்' என்று பாடம் துவங்கியது.

கல்யாணசுந்தரமய்யரின் குடும்பம் எளிமையான, இனிமையான குடும்பம். மகன் டெல்லியில் மத்தியசர்க்கார் உத்தியோகத்தில் வேலை செய்ய, மகள் திருமணத்திற்காக காத்திருந்தாள்.

உறவிலே உள்ள பையன் வங்கி உத்யோகம் கிடைத்து, எடுத்தவுடன் திரிபுராவில் தூக்கிப்போடப் பட்டான்,

''எடுத்தவுடனே மூணு வருஷம் வடக்கே வேலை செய்துட்டோம்னா, அப்புறம் தெற்கேதான் போடுவான், அப்படி, வடக்கே வேலை செய்றபோது, கல்யாணம் பண்ணிக்காம பிரம்மச்சாரியா இருந்தா, கூட ரெண்டு பேங்க் சம்பந்தப்பட்ட பரீட்சை எழுதலாம்.'' அங்கிருந்த படியே உறவுக்காரப்பையன் தன்னை வளர்த்துக் கொள்ள, கல்யாணசுந்தரம் அய்யரின் மகள் இங்கே தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டாள்.

புடவைக்கார முதலியார் வீட்டுக் குழந்தைகள் அவள் தன்னை வளர்த்துக் கொள்ள உதவியாக இருந்தன.

ஆறு டப்பா வாசனைப் பவுடர் கொடுத்தது அவளை நெகிழச் செய்திருந்தது. அவள் மிக சந்தோஷமாக சுக வனத்தையும், மணிவண்ணனையும் கொண்டாடினாள், மிக அக்கறையாக தனக்குத் தெரிந்ததெல்லாம் சொல்லிக் கொடுத்தாள்,

ஆங்கிலம், தமிழ், ஹிந்தி மூன்று பாஷையிலும் பரிச்சயம் ஏற்படுத்தினாள். கண்மூடி, தேவாரம் பாட குழந்தைகள் கற்றார்கள்.

மறுவருடம் கல்யாணசுந்தரம் அய்யரே அவர்களை சாந்தோம் ஆங்கில பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் சேர்த்துவிட்டார்.

அக்கறையுள்ள ஒரு பெண்ணால் அடிப்படை படிப்பு கற்றுக் கொடுக்கப்பட, டீச்சரைப் பற்றிய பயம் போக குழந்தைகள் இரண்டு பேரும் வெகு நன்றாய் படித்தார்கள்.

மனனம் செய்யும் திறமையும். ஊன்றி கவனிக்கும் வித்தையும், பதட்டப்படாத சாந்தமும் அவர்களுக்கு அழகாக ஊட்டப்பட்டன. அந்தக் குழந்தைகள் மிதமாக பாராட்டப்பட்டார்கள். மிதமாக கண்டிக்கப்பட்டார்கள்.

தாயும், தந்தையும் ஒற்றுமையாக இருந்தும், பெற்றவர்களை விட இன்னும் இணக்கமாய் பெரியப்பா பெரியம்மா இருந்ததும், கதை சொல்ல தாத்தாவும் பாட்டியும் கிடைத்ததும் அந்த குழந்தைகளின் அதிர்ஷ்டம்.

அவர்கள் வளர வீட்டின் நிதி நிலையும் வளர்ந்தது.



அந்த தொண்டை வளநாட்டு அரசர்கள் வியாபாரிகளாக மாறி, நேர்மையாக சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள்.

அது வைசியர்களின் காலம், வியாபாரிகளுக்கு முதன்மை வரத்துவங்கிவிட்ட நேரம். ஒரு முறை சரக்கு கடனாக வாங்கிப் போய், மறுமுறை அந்த சரக்குக்கு உண்டான காசை பாக்கி வைக்காமல் பைசல் செய்தால் பம்பாய் வியாபாரிகள் மிகுந்த மரியாதை செலுத்துவார்கள்.

''எல்லா ரெயின்கோட்டையும் விற்று விட்டாயா. எட்டாயிரத்து ஐநூறு வாங்கிக் கொண்டு போனாயே...''

''ரெண்டாயிரம்தான் விற்றது. இன்னும் ரெண்டாயிரம், அங்கங்கே கடைகளில் தேங்கி நிற்கிறது. மீதி நாலாயிரத்து ஐநூறு அப்படியே போட்டு வைத்திருக்கிறேன்.''

''பிறகு, மொத்தக் காசையும் எப்படிக் கொடுக்கிறாய்.''

''உன் கடனை அடைக்க வட்டிக்கு கடன் வாங்கினேன்.''

''ஹரே பாப்ரே...ஏன் இப்படி,''

''இந்த வட்டிக்காசை அடுத்த மழைக்காலத்தில், ரெயின்கோட்டில் வைத்து விற்றுவிடுவேன்.''

''அடுத்த மழைக்காலத்திலும் விற்க முடியவில்லை என்றால்...''

''விற்க முடியும்.'' கடவுள் ஏதாவது வழி காட்டுவார்.

ரங்கசாமியின் அண்ணன் திடமாகப் பேச, அந்த பனியா அவரை கடவுளாய் பாவித்து கைகூப்பினான்.

பிளாஸ்டிக் வேகமாக புழங்கிய காலம் அது. தலைக்கு, காதுக்கு, கழுத்துக்கு...என்று பல அலங்காரப் பொருட்கள் விற்கப்பட்டன. வளையல்கள் விதம் விதமாய் தயார் செய்யப்பட்டன.

எடைக்கு வாங்கி வந்தால் ஒரு பொருளுக்கு முக்காலணா நின்றது. மூன்றணாவுக்கு விற்றார்கள். தெருவில் நான்கணாவிற்கு இந்த பிளாஸ்டிக் பொருள் கிடைத்தது.

பழக்கமானவர்கள் என்பதால் பம்பாய் வியாபாரிகள் அவரை லாட்ஜில் சந்தித்து சாம்பிள் காட்டி, பொருள்களை லாரியில் அனுப்பினார்கள்.

பெண்பிள்ளை சமாச்சாரங்கள் என்ன கிடைத்தாலும் ரங்கசாமியின் அண்ணன் அதில் ஆர்வம் காட்டினார்.

ஏனெனில், அது பெண்களிடம் காசு புழங்க ஆரம்பித்த காலம். பெண்களே கடைக்குப் போய் தங்களுக்கு வேண்டியவற்றை, தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளத் துவங்கிய காலம். டீச்சராக, நர்ஸாக, அரசு உத்யோகமாக பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்தார்கள்கள்.

வேலைக்குப் போகாத பெண்களிடமும் அவ்வப்போது காசு புழங்கியது. அதுவும் தவிர, இந்த பிளாஸ்டிக் அணிகலன்கள் அவர்களை மிக அழகாய் காட்டின.

ரெண்டு ரூபாய்க்கு முத்துக் குடை ஜிமிக்கியும், ஆறு ரூபாய்க்கு ஒற்றைவடை முத்து மாலையும், பதினைந்து ரூபாய்க்கு மிகப் பெரிய முத்துச்சரமும் கிடைத்தன.

பூப்போட்ட புடவை அத்தோடு இயைந்த ரவிக்கை, விம்மலாக காட்டும் உள் கச்சை, மேலே படரும் முத்து ஆரம், குலுங்கும் குடை ஜிமிக்கி மிகக் குறைந்த செலவில் சுமாரான பெண்களெல்லாம் பேரழகிகளாக மாறினார்கள்.



வாசனைப் பவுடர்கள் இந்தியாவிலேயே மேல்நாட்டிற்கு இணையாய் தயாரிக்கப்பட்டன.

வாரப்பத்திரிகை மூலமாய் மரிக்கொழுந்து சென்ட் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழர் வாழ்க்கையில் அலங்காரப் பொருட்கள் அத்தியாவசியமாயின.

மஞ்சள் பூசிக் கொள்வதும்,தானே சாந்து தயாரித்துக் கொள்வதும் போய், குங்குமம், மை, ஸ்நோ, பவுடர் என்று பலதும் விலை கொடுத்து வாங்கப்பட்டது.

இவைகளை விளம்பரம் செய்ய வானொலியும், பத்திரிகையும் மிகவும் உதவி செய்தன.

மெல்ல மெல்ல வாழ்க்கையில் பரபரப்பு கூடியது.

பம்பாயிலிருந்து நாலு நாட்களில் வேண்டுமென்ற பொருள் லாரியில் வந்து இறங்கியது. வழித் தடங்கள் நல்ல முறையில் போடப்பட்டன. மக்களின் எண்ணெய் வடிந்த முகங்கள் மாறி ஒரு அழகு கூடியது.

"ஐயா... நீங்கதான் ரங்கசாமியா."

"உங்களை சின்னவரு கூப்பிடுறாரு."

"யாரு சின்னவரு...

வந்தவர் பெயர் சொன்னார். ரங்கசாமி வாயடைத்துப் போனார். 'அவரா... அவரா...அவரா...' என்று வியந்தார்.

அண்ணனும் தம்பியும் வெள்ளை சட்டை வெள்ளை வேட்டி அணிந்து, நெற்றியில் திருநீறு குங்குமமிட்டுப் போனார்கள்.

''அவரு சாமியில்லாத கட்சியாச்சே... இப்படி சபரி மலைக்கு போற மாதிரி போறீங்களே...'' அண்ணி கேள்வி கேட்டாள்.

''இப்படி போகட்டும். இதுதான் சரி, அது சாமி இல்லேன்னு சொல்ற முகமா தெரியலை. ஒரு அமைப்புக்கு கட்டுப்பட்டு, இது பேசிருப்பாங்க. உள்ளுக்குள்ளே கடவுள் நம்பிக்கை அவங்களுக்கு இருக்கு. அவரு என்ன கேட்டாலும் மறக்காம செய்யுங்க. ''அப்பா சொல்லி அனுப்பினார்.

கூட்டிப் போக வந்தவர் கையில், நூறு ரூபாய் காசு வைத்து, செலவுக்கு வெச்சுக்கோங்க என்று சொன்னார். வந்தவர் வேகமாக மறுத்த போது, 'இது என் கட்டளை' என்று கையை பிடித்துக் கொண்டார்.

''எனக்கு ஆயிரம் ரெயின்கோட்டு வேணும். ரிக்ஷா ஓட்டறவங்களுக்கு கொடுக்கணும். ஏழை எளியவங் களுக்கு இலவசமா வழங்கணும். ஆயிரம் ரெயின்கோட்டு உடனடியா கிடைக்குமா.''

''கொடுக்கலாங்க.''

''அதுல சின்னவரு பேர் போட்டு தர முடியுமா.'' கூட வந்தவர் கேட்டார்.

''செய்ய முடியுங்க.''

''எத்தினி நாளாகும்.''

''பாம்பே போக வர அஞ்சு நாளு, அங்கே ரெண்டு நாளு, சரக்கு வர அஞ்சு நாளு, ஏழும் அஞ்சும் பன்னெண்டு, இன்னிக்கி காசு கொடுத்தா, ஒரு ரெண்டு வாரத்துல ஏற்பாடு பண்ணலாங்க.''

''இப்போ காசு தர்றேன்.''



சின்னவர் ஒரு பழக் கூடையில் மாதுளம் பழங்களுக்கு நடுவே, கரன்ஸிகள் அடுக்கப்பட்டிருந்த கூடையை கொடுத்தார்.

''எவ்வளவு இருக்குன்னு தெரியல. எண்ணிக்கங்க. நான் மழைக்கோட்டு வியாபாரம் பண்ணலை. இலவசமா கொடுக்கப் போறேன். அதை மனசுல வெச்சுகிட்டு எத்தினி மழைக்கோட்டு வாங்க முடியுமோ அத்தினி மழைக்கோட்டு கொண்டாந்துருங்க.''

''அதுல நிச்சயமா ஐயாவோட பேரு இருக்கணும். கட்சிக்கொடி இருக்கணும். பேரு இல்லாத மழைக் கோட்டை வாங்க மாட்டோம். இந்த மழைக்கோட்டு கொடுக்கறதே பேருக்காகத்தான். ''அருகே இருந்தவர் இடைவிடாது வற்புறுத்தினார்.

''அட நீ ஒண்ணு. எதுக்குப்பா பேரு. ஏழை ஜனங்க வாயார வாழ்த்தினா போறாதா.''

''வாழ்த்துவாண்ணேன். தலை மேல வச்சு ஆடுவான், தெய்வமே'ன்னு கால்ல விழுவான். அவன் உங்களை. மறக்கவே மாட்டான். நம்ம எதிரியுங்க நாம யாருன்னு தெரிஞ்சுக்கணும். அதுக்குத்தான் நாம பேர் போடுறோம்.''

''சரி உன இஷ்டம்'' சின்னவர் புன்னகை செய்தார்.

அவர் அமைதியம், சிரிப்பும் சகோதரர்களை சிறங்க டித்தன.

''டிரெய்ன்ல போனா லேட்டாகும். பிளேன்ல போங்க இந்த தடவை மழை சீக்கிரம் வந்துரும். முடிஞ்சா, பிளேன்லியே சரக்கை கொண்டாந்துருங்க.

''இந்தா... இதுக்கு தனியா காசு கொடு,'' சின்னவர் உதவியாளரை அதட்டினார்.

இரண்டு பேருக்கும் போக, வர என்று மூவாயிரம் ரூபாய் தரப்பட்டது.

பெங்களூரில் இறங்கி, கோவாவுக்கு திரும்பி, பாம்பேய்க்கு விமானம் பறந்தது.

கோவாவில் மழை துவங்குவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

"மழைக் கோட்டை இலவசமாக தருகிறார்களா. டிஸைனில் பெயரடித்தால் என்ன தெரியும். டிரான்ஸ் ஃபரண்ட் என்ன தெரியும். டிரான்ஸ்ஃபரண்ட் பிளாஸ்டிக் ஷிட், இதில் மூன்றெழுத்துக்கள், கட்சிக் கொடி ஒரு ஆள் பிடித்து நிற்பது போல... பூப்போட்ட ரெயின்கோட்டை விட இது விலை குறைவு. மூன்றுநாள் ராப்பகலாய் வேலை செய்யச் சொல்கிறேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு அனுப்புகிறேன்."

எழுநூத்து ஐம்பது மழைக் கோட்டுகளை இறுக்க மான பண்டிலாக்கி, எட்டு பண்டலாக கட்டி, விமானத்தி லேயே போட்டு,சென்னைக்கு கொண்டு வந்து அங்கிருந்து அவர் இருக்கும் ஸ்டூடியோவிற்குப் போய், ஒரு பண்டல் பிரித்துக் காட்டினார்கள்.

ஒரு வெள்ளை சட்டை போட்டவருக்கு அணிவித்து நடக்கச் சொன்னார்கள், முதுகில் சின்னவர் பெயர், கட்சிக் கொடி அட்டகாசமாய் தெரிந்தது.

சின்னவர் சந்தோஷமாய் ரங்கசாமியையும், அவர் அண்ணனையும் கட்டித்தழுவிக் கொண்டார்.

"ஏன் உடம்பு கொதிக்குது." அண்ணனை கேட்டார்.

"ஜுரம். ரெண்டுநாளா சாப்பாடு, தூக்கம் இல்ல. இதே வேலையா உக்காந்துட்டோம். சொன்னபடி ஆயிரம் கொண்டார முடியலியேன்னு ஒரு வருத்தம். தயவு செய்து மன்னிச்சுக்கணும். இன்னும் ரெண்டு நாள்ல வந்துரும்." அண்ணன் கண்ணில் ஜலம் துளிர்க்க மன்னிப்பு கேட்டார்.



சின்னவர் நெகிழ்ந்து போய், அண்ணனை அருகே அமர்த்தி, தானே உணவு பரிமாறினார். வீடு குடும்பம் பற்றியெல்லாம் விசாரித்தார்.

அண்ணனுக்கு குழந்தை இல்லாததையும், ரங்கசாமி யின் குழந்தையை தத்து எடுத்துக் கொண்டதையும் ஆவலுடன் கேட்டார்.

"நீங்க சோழர் பரம்பரையா, தொண்டை நாட்டு சிற்றரசர்களா, முத்தரையர்கள் பற்றி நான் படிச்சிருக் கேன். ஆனா, இப்போதான் எல்லாரும் எல்லாரையுமே முதலியார்ங்கிறாங்களே... திருச்சியில பிள்ளைமாருன்னு சொல்றாங்க. இங்கே வந்தா முதலியாருங்கிறாங்க. எங்க ளையும் சேர வம்சம்னு எங்க அம்மா சொல்லுவாங்க,சேர தேசத்திலேருநத சிங்களத் தீவுக்குப் போனவங்க.

இந்த மணிக்கட்டு இருக்கே... இது அகலத்தை வச்சு தான், ஒருத்தன் ராயல் ஃபேமிலியா இல்லையான்'னு ஓரளவுக்கு சொல்லலாம். எனக்கு எவ்வளவு அகலமான மணிக்கட்டு பாருங்க... உங்களுக்கும் அகலமாத்தான் இருக்கு. வாள் பிடிச்சு வாள்பிடிச்சு, தடிமனாயிப்போச்சு.

இவர் கை பாருங்க. இவரு ஐயர். எழுத்தாளி. மெல்லீசா இருக்கு பாருங்க. பல விஷயங்களை ஆர்வ மாகப் பேசினார்.

மழைக் கோட்டு கொடுப்பதை பெரிய போஸ்டராக அச்சடித்து, ஊரெங்கும் ஒட்டச் சொன்னார். ஆறு இடங் களில் இதற்காகவே தனித் தனியே கூட்டங்கள் நடத்தி னார்.

ஆயிரத்தி எழுநூறு மழைக்கோட்டுகள் அவர் கொடுத்த காசுக்கு கிடைத்தன.

''கூட இருந்த காசுக்கு அப்படியே மழைக்கோட்டு வாங்கிட்டீங்களா. போகவர செலவுக்கு காசு.''

''அதான் மூவாயிர ரூபா கொடுத்தீங்களே...''

''லாரி டிரான்ஸ்போர்ட், தங்கற செலவு ஆகலையா. எட்டு மூட்டை ஏரோபிளேன்ல கொண்டு வந்து இறங்கியிருக்கீங்க, அந்தக்காச கேக்கவேயில்ல,''

''அது எங்க நன்கொடையா இருக்கட்டும்.''

''ரங்கசாமி...என்ன சொல்றாரு உங்க அண்ணன்.''

''அது எங்க நன்கொடையா இருக்கட்டும்னு சொல்றாருங்க.''

''நீங்க ஏன் செலவு பண்ணனும். இது ஒருவகை கட்சிப் பிரச்சாரம். நீங்க எங்க கட்சி இல்லியே...கடவுள் நம்பிக்கை உள்ளவராச்சே...''

''நாங்க உங்களுடைய கட்சியில இல்லே...உங்க கட்சியில இருக்கோம். எங்களுக்கு இங்க ஒரு இடம் கொடுங்க.'' சின்னவரின் இதயத்தை அண்ணண் தொட்டுக் காண்பித்தார். சின்னவர் ஆடிப்போயிருப்பது அவர் முகத்திலிருந்து தெரிந்தது.

''மழை பெய்யலியே மழை பெய்யலியேன்னு எல்லாரும் சொல்றாங்க. பெய்யாதோன்னு பயப்படுறாங்க. உங்களை மாதிரி நண்பர்கள் இருக்கிறவரைக்கும் மழை பெய்யும். நிச்சயம் பெய்யும். இன்னிக்கே பெய்யும்.''

அன்று மாலை பள்ளிகள் விடும் நேரத்தில், பரபரப்பான சமயத்தில் மழை அடித்துப் பெய்தது.



வீட்டில் திரும்பத் திரும்ப, எல்லோரும் சின்னவர் பற்றியே பேசினார்கள்.

கார் எடுத்துக் கொண்டு, அதில் வீட்டுப் பெண்களை கூட்டிக் கொண்டு, சுகவனத்தையும், மணிவண்ணனையும் அழகாக உடை உடுத்தி மழைக்கோட்டு வழங்கும் கூட்டத்திற்கு கூட்டிக் கொண்டு போனார்கள்.

சின்னவர் பத்தடி முன்வந்து, வீட்டுப் பெண்களுக்கு வணக்கம் சொன்னார். அப்பாவின் கால் தொட்டார். அம்மாவின் கைகளை எடுத்து கன்னத்தில் வைத்துக் கொண்டார். மணிகண்டனையும், சுகவனத்தையும் இரண்டு பக்கமும் சேர் போட்டு நிறுத்தி, அவர்கள் தோள் மீது கை போட்டு, ஃபோட்டோ எடுத்துக் கொண்டார், அப்பாவையும், அம்மாவையும் உட்கார வைத்து அவர் பின்னால் சகோதரர்களோடு நின்று, பெண்கள் போர்த்திக் கொண்டு நிற்க, குடும்பப் படம் எடுத்துக் கொண்டார்.

டிரைவர் முத்து கதிகலங்கிப் போயிருந்தான். அவரைப் பார்க்கும் போதெல்லாம், 'தெய்வமே... தெய்வமே...' என்று கத்தினான். அவனை அருகே அழைத்து, 'இப்படி கத்தாதே' என்று அவர் கட்டளையிட, அவன் வாயை இறுக பொத்திக் கொண்டான்.

'ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொள்ள வேண்டும்.' என்று அவன் நடித்துக்காட்ட, முத்துவை ரெயின்கோட் அணியச் சொல்லி, அவன் பக்கத்திலே நின்று ஃபோட்டோ எடுத்துக் கொண்டார்.

மழைக்கோட்டு வழங்கும் விழா பிரமாதமாக நடந்தது.

''ஒரு நாள் வீட்டுக்கு சாப்பிடவா தம்பி.'' அம்மா சம்பிரதாயமாய் அழைத்தாள்.

''நாளை காலையில டிபனுக்கு வரேன். சாப்பாடு இன்னொரு நாள் வச்சுக்கலாம்.'' சின்னவர் சொல்லி விட்டு, கூட்டத்திற்கு நடுவே புகுந்து கார் ஏறினார்.

சின்னவர் தொட்ட முத்துவை எல்லோரும் தொட்டுத் தொட்டு பார்த்தார்கள். முத்து சந்தோஷம் தாங்காமல் விம்மி விம்மி அழுதான். 'யாரோ கட்சியில் சேர்ந்துவிடு' என்று சொல்ல, ஐம்பது ரூபாய் கொடுத்து ஆயுள் உறுப்பினரானான்.

மறுநாள் எட்டேகாலுக்கு ஒருகார் தோட்டத்திற்குள் நுழைந்தது. சின்னவர் கீழிறங்க, வீடு மொத்தமும் ஓடி வந்து வரவேற்றது.

''கதவு சாத்திருங்க. நான் வந்தது யாருக்கும் தெரியாது.''

''முத்து, நீ வாசல்லியே இரு. யாரையும் விடாதே.''

முத்து வாசலுக்கு ஓட, சின்னவர் ஒவ்வொரு செடி யாக பார்வையிட்டார். பவழ மல்லி செடிக்கு கீழே நிற்க, அப்பா செடியைத் குலுக்கி, பூவை பொழியச் செய்தார்.

சின்னவர் முகமெல்லாம் சந்தோஷம் நிரம்பி வழிந்தது.

வெல்லக் கொழுக்கட்டையும், குழி அப்பமும், இட்லியும், எலுமிச்சம்பழ சேவையும், நெய் பொங்கலும் கேட்டுக் கேட்டு சாப்பிட்டார். காஃபி வேண்டாமென்று, டீ குடித்தார்.

குழந்தைகளை அருகே அழைத்து, ஆளுக்கு இரண்டு பவுன் தங்கச் சங்கிலி அளித்தார்.

''வந்தோமா சாப்பிட்டோமான்னு இல்லாத என்னாத்துக்கு இதெல்லாம்...'' என்று அம்மா செல்லமாய் அதட்ட. சிரித்துக் கொண்டார்.



''உங்க பசங்க எனக்காக நிறைய செலவு பண்ணிருக் காங்க. ஜீரத்தோட பாம்பே போய், எனக்காக மழைக் கோட்டு வாங்கிட்டு வந்திருக்காங்க. நான் வந்தது. டிஃபன் சாப்பிடறதுக்கு இல்லே...இதுக்குத்தான்.

வர்ற பொங்கலுக்கு நீங்க எல்லாம் என் வீட்டுக்கு வரணும். என்கூட உக்காந்து சாப்பிடணும்.''

குழந்தைகளை கொஞ்சி விட்டு, அவர் போனதும், ஏதோ கனவு போல் இருந்தது.

''ராஜ அம்சம்தான். சந்தேகமேயில்ல. அளவான மூக்கு. துறுதுறுன்னு கண்ணு. சூரியகாந்தி மாதிரி முகம், தாமரை மாதிரி கை. அவரு ராஜாதான்.'' அப்பா புதியதாய் பேசினார்.

''அவரு ராஜா இல்லேப்பா, ராஜா வேஷம் கட்டுறவரு.'' ரங்கசாமி மறுத்துப்பேசினார்.

''இல்லை. இது அரசாளும்.''

''என்னப்பா சொல்றே...''

''இவரு ரொம்ப உச்சிக்கு போப்போறாரு. அவரே நினைக்காத உச்சிக்கு போப்போறாரு.'' அப்பா திடமாக சொன்னார்.

''ஐயா-சொன்னாங்களா அப்படி...நான் வந்துட்டுப் போன பிறகு, அப்படி பேசினாங்களா...ஏன் அதை எங்கிட்ட உடனே சொல்லல...பொங்கலுக்கு வான்னா பொங்கலுக்குதான் வரணுமா. முன்னாடி வரக்கூடாதா. இப்போ சொல்றேன்...நீங்களும், ரங்கசாமியும் எப்ப வேணா வரலாம். இடம் காலம் முக்கியமேயில்ல. நான் தூங்கிகிட்டிருந்தாக்கூட எழுப்பலாம்.

உங்கிட்ட ஒண்ணு சொல்லட்டுமா ரங்கசாமி, அப்பா சொன்னது கரெக்ட். ஒரு காலகட்டத்தில் நான்

அரசாளுவேன். இது நடக்கும். எனக்கு அப்படியொரு எண்ணம் உண்டு, ஆனா, நான் சொல்றத வெளியே சொல்லாதே. எத்தனை நாள் நடிகனாகவே இருக்க முடியும். நடிகன் ரிடையர்யாயிட்டா தூக்கிப்போட்டுரு வாங்க. நேத்திக்கி வந்த சின்னப்பசங்க பந்தா பண்ணு வாங்க. என்முன்னாடி பந்தா பண்ணினா எனக்குத் தாங்காது.

நான் ஒண்ணு கேக்கறேன். நீ தொண்டை மண்டல சிற்றரசன். உனக்கு அரசாளணும்னு ஆசையில்ல...''

'இல்லை' என்று அண்ணன் மறுத்தார். தொடர்ந் தார்.

''நல்லவனா இருக்கணும் நாலுபேருக்கு நல்லது பண்ணனும். ஊருஜனம் கஷ்டப்படுற காலத்துல ஓடி ஓடி உதவணும். கோயில் கட்டணும். குளம் வெட்டணும். பிள்ளைப்பேறு ஆஸ்பத்திரி எல்லா வசதியோட ஒண்ணு ஆரம்பிக்கணும். நல்ல வாத்தியாருங்களோட நிறைய பசங்க படிக்கிறபள்ளிக்கூடம் ஆரம்பிக்கணும். ஏழைப் பசங்களுக்கு பள்ளிக்கூடத்திலேயே மத்தியானம் சாப்பாடு போடணும் இந்த மாதிரி எண்ணம் இருக்கே தவிர, அரசாட்சி பண்ணனும்னு எண்ணமில்லை.''

''அடப்பாவி மனுஷா...'' சின்னவர் ஆதங்கத்தில் கத்தினார்.

''இதுக்குப் பேரு என்ன...இப்போ சொன்னீயே... இது யாரால பண்ணமுடியும்.இந்த புத்தி ஒரு ராஜாவைத் தவிர வேறு யாருக்கு வரும்.

ராஜாவா இருக்குறதுன்னா ஏதோ தப்புக்காரியம்னு உனக்கு தோணிப்போச்சு. அதனால வேணாங்கறே... ஏன்னா...ராஜாவா இருந்தவன் எல்லாம் தப்பு பண்ணி னான். மது, மாதுன்னு கேவலமா இருந்தான். அப்படி இல்லாத சந்நியாசியா ராஜாக்கள் இருந்திருக்காங்க.



எனக்கு துறவியாகணும்னு ரொம்ப ஆசை. துறவி யான பிறகு அரசனாகணும்னு ஆசை.''

''கடவுளே...கடவுளே...உங்க ஆசை எல்லாம் நிறை வேறட்டும்.

அண்ணன் அவரை நோக்கி கைகூப்ப, சின்னவர் நெகிழ்ந்து அண்ணனோடு கைகோர்த்துக் கொண்டார்.

சுகவனம் எட்டாவது படிக்கும் போது, மணிவண்ணன் ஆறாவது சேர்ந்தான்.

வியாபாரம் உச்சிக்கு வந்தது.

துணி உற்பத்தியில் இந்தியா நல்ல நிலைக்கு வளர்ந்தது. அரசு தீர்மானத்தினால் தங்க வியாபாரம் தடுமாற, வட இந்திய பனியாக்கள் வேறு வியாபாரத்தில் குதித்தார்கள். பேப்பரிலும், மருந்திலும்,பிளாஸ்டிக்கிலும் துணியிலும் மெல்ல மெல்ல புகுந்தார்கள். வகையாய் விளம்பரப்படுத்தினால் எதையும் விற்றுவிடலாம் என்று நம்பினார்கள்.

விளம்பர யுகம் துவங்கியது. விற்பனை ஒரு செயலாக இல்லாது, ஒரு தந்திரமாக மாறியது. ஒரு கலைத்தன்மை ஏறியது.

கலை என்பது ஒரு தந்திரமான வடிவம். எல்லா தந்திரமும் கலை வேடம் பூண்டு கொள்ளும்.

அதிக சக்தி பெற கரைத்து குடிக்கின்ற பானங்களுக் கும். உறைந்த தாவர எண்ணெய்களுக்கும் விளம்பரங்கள் அதிகம் செய்யப்பட்டன.

ரங்கசாமியின் அண்ணன் உன்னதமான ஒரு சாக்லேட்டுக்கு தமிழ்நாடு முழுவதும் ஏஜென்ஸி எடுத்

தார். அதற்கு முன்பணமாய் மிகப்பெரிய தொகை தேவைப்பட்ட போது, சின்னவரிடம் போய் நின்றார்.

"அஞ்சு லட்சமா...ஒருவாரத்திலேயா...சரி தர்றேன்."

சரியாக ஒருவாரம் பொறுத்து சிறிய கையெழுத்து கூட இல்லாமல், அஞ்சு லட்ச ரூபாய்காசு தகரப்பெட்டியில் வைத்து கொடுக்கப்பட்டது.

அந்த சாக்லேட் கம்பெனி மகிழ்ந்துபோய், சென்னை முழுவதும் விதம் விதமாய் விளம்பரப்படுத்தியது.

சுகவனம் எஸ். எஸ். எல். சி முடித்தபோது, தமிழகத்தின் வாழ்க்கை முறையே மாறிப்போயிருந்தது, காங்கிரஸ் கட்சி அறவே அழிந்துபோயிருந்தது. சின்னவர் இருந்தகட்சி ஆளுமைக்கு வந்து, அதன் பேச்சால் ஊரை கட்டிப்போட்டிருந்தது.

கல்யாண சுந்தரமய்யரின் மகளுக்கு திருமணமானது. அவர் மருமகன் அவர்மகளோடு லண்டனுக்கு போய்விட்டான். இரண்டு வருடத்தில் திரும்பி வந்தான்.

"லண்டனை விட ஜெர்மனி பெட்டர். ஜெர்மனியை விட அமெரிக்கா பெட்டர்."

மெட்ராஸ்ல பேங்க் எம்ப்ளாய்ஸுக்கு ரெண்டாயிரம் ரூபா சம்பளம். பாம்பே கல்கத்தாவுல மூவாயிரம்ரூபா சம்பளம். அதே வேலைக்கு லண்டன்ல பத்தாயிரரூபா சம்பளம். ஜெர்மனியில பதினைஞ்சாயிரம் ரூபாசம்பளம். அமெரிக்காவுல இருபத்தாறாயிரம் ரூபா சம்பளம். ஸோ...என் லட்சியமே அமெரிக்கா போய் அமெரிக்காவிலேயே தங்கிடறதுதான்.

"ஏன்னா...இங்கே படிச்சவனுக்கு பெரிய மதிப்பு இல்லே. ஜாதி பாக்கறாங்க. ஜாதிதான் முக்கியம் கிறாங்க. எங்களை இழிவு படுத்துறாங்க."



"நீங்க இழிவு படுத்தலையா."

"உண்மைதான். எங்க தாத்தா செஞ்சதுக்கு நானா பொறுணை. பதில்பேசினா வீண் விவாதம் வளரும். எனக்கு ஜாதி முக்கியம் இல்லைன்னு சொன்னா நம்ப மாட்டாங்க. என்னை மதிக்க மாட்டாங்க. ஸோ..., என்னை மதிக்கிற அமெரிக்காவுக்கு நான் போறேன். எப்பவாவது அந்தப்பக்கம் வந்தா, தயவுசெய்து வீட்டுப் பக்கம் வாங்க. எனக்கு போறதுக்கு இஷ்டமில்லை. ஆனா, வேற வழி இல்லியே..." அவன் நிர்வாகம் படித்து விட்டு மிகப்பிரகாசமான எதிர்காலத்திற்காக இந்தியாவை விட்டு வெளியேறினான்.

முதலியார் வந்தால் கதவுக்குப் பின்னாலிருந்து வெட்கப்பட்டுப் பேசுகிற அந்த ஐயர் பெண், லண்டனுக்குப் போய்வந்த பிறகு 'ஹலோ' என்று தலையாட்டிப் பேசினாள். சுகவனம், மணிவண்ணன் கைகளை பற்றிக்குலுக்கினாள். அவர்கள் இருவரும் வெட்கப்பட்டார்கள்.

"என்னடா அக்கா ஒருமாதிரி ஆயிட்டாங்க. "தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

பள்ளி இறுதியில் மிக அதிகமான மதிப்பெண்கள் சுகவனம் வாங்கியிருந்தான். தமிழிலும், கணிதத்திலும் மாநிலத்திலேயே முதலாவதாக வந்தான். அவன் படமும் அவனைப் பற்றிய செய்தியும் 'தினத்தந்தி'யில் வெளியாயிற்று.

ரங்கசாமியின் அப்பா, இதற்காகவே தனியாய் படையல் போடவேண்டும்" என்று சொல்ல, வாட்களும், குத்தீட்டிகளும் வெளியே எடுக்கப்பட்டன.

இந்தமுறை அவைகளை கையில் வைத்துப்பார்க்கவும் இடுப்பில் கைகட்டிக் கொள்ளவும் தாத்தா அனுமதித்தார்.

“நிஜமாவே நாம ராஜாக்கள்தானா. அப்போ நம்ம தலைநகர் எது. நம்ம அரண்மனை எங்கே இருக்கு. என்னை ஏன் படிக்க சொல்றீங்க. “மணிவண்ணன் கேட்டபோது எல்லோரும் சிரித்தார்கள்.

மதுராந்தகம் ஏரிகாத்தராமர் கோயிலுக்கு குடும்பத்தோடு போகலாமென்று தாத்தா சொன்னார்.

அப்பாவின் அங்கவஸ்திரத்தை தலைப்பாகையாக கட்டி, அதன் மீது முத்துமாலையை இறுகப் பிணைத்து, பிளாஸ்டிக் வளையலை காதில் வளையமாக மாட்டி, பைஜாமா ஜிப்பாவிற்கு மேல் நிறைய பிளாஸ்டிக் மாலைகள் அணிந்து, மெல்லிய மீசையும், குங்குமத் திலகமுமாய் சுகவனம் அதற்குள் வேஷம் போட்டுக்கொண்டு வந்தான்.

அந்த வாளை தோளில் சாய்த்துக்கொண்டு போஸ் கொடுத்தான். அவன் மெல்லிய உடம்பும், உயரமும், கள்ளமறியா முகமும், உதட்டுச்சிவப்பும் அந்த அலங்காரத்திற்கு மெருகூட்டின. ஒரு ஜில்லிப்பைக் கொடுத்தன.

அந்த வீடு மயங்கிப்போய் வாயடைத்து நின்றது,

“அம்மா. அண்ணனைப் பாரும்மா. அசல் ராஜா மாதிரியே இருக்காம்மா. நிஜமாவே ஒரு சிம்மாசனம் இப்போ இருந்துட்டா, அண்ணனை அதிலே உக்கார வைக்கலாம்.

“சிம்மாசனத்துல உக்காரவச்சு என்ன பண்றது சொல்லு. ஆமாம் ஆமாம்னு நாம் சொன்னா, அவன் ராஜாவாயிடுவானா.” ரங்கசாமியின் அண்ணன் அலுத்துக் கொண்டார்.

“அவன் ஏன் ராஜாவாகணும். அவன் சாதாரண ஆளாவே இருக்கட்டும்.ஜனங்க நீதிநியாயத்துக்கு கட்டுப்பட்ட போது, ராஜாவா இருக்கிறதுல ஒரு அர்த்தம் இருக்கு. ஜனங்களுக்கு தர்மத்துல பிடிப்பு போயிடுச்சு.



எல்லாரும் நடிக்கிறாங்க. எப்பவும் நடிக்கிறாங்க, சின்ன விஷயத்தை எல்லாம் பெருசாக்கி நடிக்கிறாங்க. தமிழ் மொழி நல்ல விஷயம்தான். அதை வளர்க்கிறதுக்கு கத்தி கம்போட அலையறான். ‘ஹிந்தி ஒழிக’ன்னு ஹிந்தி பேசறவனை அடிக்கிறான், எங்கியோ பெரிய தப்பு இருக்கு. ஜனங்களுக்கு எதுவும் பரபரப்பா நடக்கணும்.

அமைதியா பேசறவனை பிடிக்கல. ஆரவாரமா பேசறவனை ‘தலைவா’ ங்கிறாங்க. பேசாம மௌனமா இருக்கிறவனை போலியான ஆளுங்கிறாங்க. கபட வேடதாரிங்கிறாங்க, யார் கபடம் யார் வேடம்னு என்னிக்காவது ஒருநாள் தெரியத்தான் போவுது. ஆனா, அன்னிக்கி வாழ்க்கையே வேறவிதமா மாறிடும்.”

“வாழ்க்கை மாறும்னா என்ன சொல்றீங்க. சாப்பிடுறது தூங்கறதுதானே செய்யப் போறோம்.” ரங்கசாமி கேட்டார்.

“ஆமாம் அதுதான், ஆனா, என்ன சாப்பிடப் போறோம், எப்படி தூங்கப் போறோம். எவ்வளவு நேரம் தூங்கப் போறோம் எதிலே தூங்கப் போறோம். இதெல்லாம் முக்கியம்.”

“இதோ...ராத்திரி எட்டுமணி ஆச்சு. நம்ம வீட்ல எல்லாரும் சாப்பிட்டுட்டோம். நான் நாப்பது வருஷமா இந்த திண்ணையிலதான் படுக்கறேன். ராத்திரி நியூஸ் கேட்டுட்டு இன்னும் அரைமணி நேரத்துல தூங்கிடுவேன். காலையில நாலரை மணிக்கு எழுந்திருவேன். வேப்பங்குச்சியில பல்லு துலக்கிட்டு, அஞ்சு மணிக்கு சின்ன வெங்காயம் நாலு. ஒரு ஜோடுத்தவலை நீராகாரம் சாப்பிடுவேன். எட்டரை மணி வரைக்கும் தோட்டவேலை. எழுபத்திமூணு வயசாச்சு, களைப்பே தெரியலை.

இதெல்லாம் உடையப் போகுது. சாப்பாடு தூக்கம் எல்லாம் கலையப் போவுது, பம்பாய்லேருந்து பிளாஸ் டிக் கொண்டாந்தா மாதிரி, வெளியூர்லேருந்து என்னென் னமோ பம்பாய்க்கு வரப்போவுது. இத்தாலிக்காரன் சாப் பாடு, அமெரிக்காகாரன் டிரஸ், பிரெஞ்சுக்காரன் சென்ட் டுன்னு நமக்கு தேவையில்லாதது எல்லாம் இறங்கப் போவுது. ஜனம் கண்டதும் வாங்கும். கண்டபடி அலை யும்.

வியாபாரிங்க பொய்யா விளம்பரப்படுத்துவாங்க. சத்தியம் பண்ணி ஏமாத்துவாங்க. கடவுள் விப்பாங்க.

''கடவுள் விக்கிறதா...''

''ஆமாம். எனக்கு கடவுள் தெரியும். காட்றேன் பார் அப்படின்னு சொன்னா. அது கடவுள் விக்கிறது தானே...''

''கடவுள் வித்தா யார் வாங்குவாங்க தாத்தா.'' சுக வனம் கேட்டான்.

''வெள்ளைக்காரன் வாங்குவான். நம்ம ஊரு சாமி யாருங்க விப்பாங்க. அவனை ஏமாத்துவாங்க.''

''இதெல்லாம் நீ எப்படி சொல்றே தாத்தா.''

''ஒரு மூணு வருஷமா ராத்திரி தூங்கறபோது, நடக் கப்போறதெல்லாம் கனவா வருது,''

''நான் மறுபடியும் ராஜாவாவேனா...'' சுகவனம் கேட்க தாத்தா சிரித்தார்.

''இல்லேடா ராஜா. நீ வைத்தியன். ஆனா. ராஜ வைத்தியன். பெரிய மனுஷாள்லாம் உன் கைபட்டு குண மாவாங்க. நீ வாளை இடுப்பிலே கட்டல. தரையில ஊனல. எதிரே இருக்கிறவன் மூஞ்சிக்கு நேரா நீட்டல. தோள்ல வைச்சுகிட்டே...வைத்தியர்கள் தமது கருவியை



வலது தோளில் வைக்க வேண்டும். இடது தோளில் வைக் கக்கூடாது.

அந்த ஸ்டெதஸ்கோப்பை கழுத்துல மாட்டிக்காதே. வலது தோள்ல போட்டுக்கோ.''

''தாத்தா...நான் பிஎஸ்சி படிச்சு, அதுல ஃபர்ஸ்ட் க்ளாஸ் வாங்கி, அதுக்குப் பிறகு மெடிக்கல் காலேஜ்ல இடம் கிடைச்சு, அஞ்சுவருஷம் படிப்பு முடிஞ்சு, அப் புறம்தான் டாக்டர்.''

''ஆமாம். நீ நிச்சயமா டாக்டர். அதுக்கு மேலேயும் பல படிப்பு படிச்ச டாக்டர். அந்த ஐயர் மருமகனுக்கு புது வருஷம் வாழ்த்து லெட்டர் போடு. அவன் வந்தா போய்ப்பாரு. இன்னும் கொஞ்ச நாள்ல அவன் செல்வாக் கான ஆளாயிடுவான்.''

''சின்னவரை செல்வாக்கான ஆளாயிடுவாருன்னு சொன்னீங்க. பாவம் அவரை எல்லாரும் ஓரங்கட்டு றாங்க.''

''ஒருத்தனும் அவரை ஓரங்கட்ட முடியாது. அந்த ஆள் சீறி எழுந்திருக்கப் போறாரு. அப்போ தெரியும் சேதி.''

நாலு நாட்கள் கழித்து முத்து எதிரே வந்து நின்றான். வீட்டில் எல்லோரும் காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

''வா முத்து, டிபன் சாப்பிடுறியா.'' அண்ணன் அவனை அன்போடு அழைத்தார்.

''இந்தாம்மா...அவனுக்கு அந்த காசி அல்வா ரெண்டு எடுத்துக்கொடு. நேத்தே தரணும்னு நினைச்சேன். சௌகார் பேட்டையில ஒரு பம்பாய்காரன் போடறான். சாப்பிட்டு பாருடா.''

முத்து அல்வாவை தயக்கத்தோடு வாங்கிக் கொண்டான். சாப்பிடாமல் கையிலேயே, வைத்திருந்தான்.

"என்ன முத்து...என்னமோ தயங்கறா மாதிரி தெரியுது."

"உங்க எல்லார்கிட்டயும் முக்கியமா ஒரு விஷயம் பேசணும்."

"அடி சக்கை. கல்யாணம் நிச்சயம் ஆயிடுச்சா. யாரையோ நீ லவ் பண்றதா சொன்னாங்க. அந்தப் பொண்ணா..." ரங்கசாமி ஆவலோடு கேட்டான்.

"இல்ல...இது வேற விஷயம்."

"ஏண்டா...வேலைய விட்டு நிக்கப் போறியா." அப்பா கேட்டதும், எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது.

முத்து மௌனமாக நின்றிருந்தான்.

"அதெல்லாம் இருக்காது." அண்ணி சமாதானப் படுத்தினாள்.

"அதாத்தான் இருக்கும். சொல்லுடா."

"நான் சின்னவர்கிட்டே வேலைக்கு சேந்துட்டேங்க."

"சேர்ந்துட்ட பிறகு இங்க சொல்ல வர்றியா." ரங்கசாமியின் குரலில் கோபம் இருந்தது. அண்ணன் அவர் தோளைத் தட்டி அடக்கினார்.

"நான் இன்னும் சேரலீங்க. வேலைக்கு சேந்துகிட்டுமானு சின்னவரை கேட்டேன். 'சரி...உன் இஷ்டம்'னு சொன்னாரு. ஆனா, உங்ககிட்ட சம்மதம்



வாங்கணுமாம். நீங்க சரின்னு சொன்னாதான் அவரு வேலை தருவாராம்."

"ஏன்...இங்க உனக்கு என்ன குறைச்சல்," அண்ணி கேட்டாள்.

"ஒரு குறைச்சலும் இல்லேம்மா."

"பின்னே ஏன் அங்கே போறே..."

"நான் பார்ட்டி ஆளும்மா. பார்ட்டியில ரெண்டு மூணு குரூப்பு இருக்கு. அதிலே சின்னவரை எதிர்த்து, ரெண்டு குரூப்புமே முரட்டுத்தனமா பேசுது. தட்டிக் கேட்டா அடிக்க வருது.

நேத்து ராத்திரி ஏழெட்டு பேரு கத்தி கம்போட அவரை அடிக்க வந்துட்டாங்க. சின்னவரு சிரிச்சுகிட்டே நிக்கிறாரு."

"உங்க எல்லாருக்குமே நான் தனித்தனியா உதவி செய்திருக்கேன். அக்கா கல்யாணம். அம்மா செத்துட்டாங்க. கை எலும்பு முறிஞ்சு போச்சு. கால்வாய்ல குழந்தை விழுந்து உயிருக்கு போராடிகிட்டிருக்குன்னு என்னென்னமோ சொல்லி, காசு வாங்கிட்டுப் போயிருக்கீங்க.

நான் நிஜமா பொய்யான்னுகூட கேட்டதில்லே... நீங்க கேட்ட காசை கேட்ட நேரத்துல கொடுத்திருக்கேன். என்னை அடிக்க சொன்னாங்களே...அவங்க. உங்களுக்கு அஞ்சு ரூபா காசு உதவி செய்வாங்களா.

வட்டச் செயலாளர் பதவி தரேன். அவனை கொலை பண்ணிட்டு வாங்கன்னா வந்துடுறதா...வட்டச் செயலாளர் பதவி கிடைச்சா காசு சம்பாதிச்சுடலாம்னு சொல்லிக் கொடுத்திருக்காங்களா. வாங்க வந்து அடிங்க'ன்னாரு."

''எங்கே நடந்தது இது?''

''லாயிட்ஸ் ரோடுல, இந்த நேரத்துல தலைவரோட இருக்கிறதுதான் சரி அப்படின்னு தெளிவா முடிவு பண்ணிட்டேன். அவர் வீட்லியே அவருக்கு காவல் இருக்கப் போறேன். அவர் கூடவே இருக்கப் போறேன். அவர் கார் ஓட்டப் போறேன்.''

''சரி முத்து. நீ எடுத்தது நல்ல முடிவு.'' அப்பா எழுந்து கை கழுவினார். மேல் துண்டால் கை துடைத்தார். காசி அல்வாவை டப்பாவோடு எடுத்து வந்து, முத்துவின் கையில் கொடுத்தார்.

''பொட்டியில எத்தனை துண்டு அல்வா இருக்கு.''

''பதிமூணு துண்டு.''

''கையில எவ்ளோன வெச்சிருக்கே...''

''ரெண்டு துண்டு.''

அந்த ரெண்டு துண்டு அல்வாவை என் முன்னாடி இப்போ சாப்பிடு, பொட்டியில இருக்கிற அல்வாவை வீட்டுக்கு எடுத்துட்டுப் போய் நிதானமா சாப்பிடு. இன்னிக்கே சாப்பிடு. ஒரு துண்டு அல்வா ஒரு வருஷம். பதினைஞ்சு துண்டு அல்வா பதினைஞ்சு வருஷம். முத்துவை யாரும் அசைச்சுக்க முடியாது. ரொம்ப உசந்த இடத்துக்கு வருவீங்க. காரு பங்களா தோட்டம்னு ரொம்ப பணக்காரரா ஆவீங்க. உங்களுக்கு பேர் மாறும், தொழில் மாறும், சின்னவரை கடைசிவரைக்கும் விடாதீங்க, இப்போ, வைச்சுக்கிட்டு ருக்கிற பொம்பளையையும் விடாதீங்க. அவங்க விதவையா இருந்தாலும் பரவாயில்ல. விவரம் தெரிஞ்ச பொம்பளை.''

''ஐயா...உங்க மனசு புண்படும்படி பேசி இருந்தா...'' முத்து கை கூப்பி விம்மினான்.



''உனக்கு உப்பு இனி இங்கேயில்ல...முடிஞ்சு போச்சு. இங்கே இருந்த வரைக்கும் நீ ரொம்ப உண்மையா இருந்தே... சுகவனமும், மணிவண்ணனும் நீ வளர்த்த குழந்தைங்க. உதவி தேவைப்பட்டா அவங்க உங்கிட்டே வருவாங்க. முடிஞ்சா செய்.''

''கடவுளே... நான் என்னங்க உதவி செய்யறது...'' முத்து கை கூப்பினான்.

''அப்படி ஒரு நிலைமை வரும்.''

''நான் நிச்சயம் செய்றேன் ஐயா, என்னால என்ன முடிஞ்சதோ, இந்த குடும்பத்துக்கு மறக்காம செய்றேன் ஐயா.''

''ஐயா... ''அப்பாவிடம் தாழ்ந்த குரலில் பேசினான்.

''எங்க தலைவருக்கு தொந்தரவு ஒண்ணும் வராதுல்லீங்க.''

''வரும், போகும். பயப்படாதே. அவர் நினைக்காத உயரத்துக்கு அவர் போவாரு.''

முத்து வேலைக்குப் போன மறுமாதமே சின்னவர் சுடப்பட்டார்.

தமிழ்நாடு கொதித்தது. அவர் முன்னைவிடவும் முக்கியமான ஆளாக மாறினார்.

சுகவனம் ஆங்கிலப்பள்ளியில் படித்ததால் பிஎஸ்சி முதல் வகுப்பில் தேறுவது எளிதாக இருந்தது. மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் போட்டு காத்திருந்தான். எளிதாய் இடம் கிடைத்தது.

ஒரு பழைய மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுக்க, சுகவனம் ஆர்வமாக படிக்க ஆரம்பித்தான்.

வீட்டின் முன் பக்கத்தை இடித்து ஓடான இடத்தை தளமாக மாற்றி, மாடியில் இரண்டு பிள்ளைகளுக்கும் இரண்டு அறைகள் படிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். பிறகு, இரண்டாவது கட்டையும் தளமாக மாற்றினார்கள். திண்ணையை கம்பி போட்டு காபந்து செய்தார்கள். எதிர்பக்க கட்டிடத்தை முன்பக்கம் அப்படியே வைத்துவிட்டு, முன் பக்கம் லாரி ஷெட்டில் காங்கிரிட் தூண்கள் இறக்கி நாலு மாடி கட்டிடம் எழுப்பினார்கள்.

இந்த முறை இருமல் சிரப், தலைவலி மாத்திரை, சளிக்குத் தடவும் தைலம் என்று பம்பாயிலிருந்து புதிய ஏஜென்ஸி எடுத்தார்கள். வீட்டுப் பெண்களை கூட்டிப் போய் விமானத்தில் பம்பாய், டெல்லி கல்கத்தா என்று சுற்றினார்கள்.

காசியில் அப்பாவோடும், அம்மாவோடும் ஐந்து நாள் தங்கி கோயில் கோயிலாக பார்த்தார்கள்'

''நம்ம அரச பரம்பரையில மாடு தானம் பண்ணியே ஆகணும் மாடும் கன்றுமா நல்லதா வாங்கிட்டு வா. தமிழ்நாட்டு ஐயருங்க மூணுபேர் காசியில இருக்காங்களாம். வாங்கிட்டுவா. இருக்கிற ஐயருங்களுக்கே கொடுப்போம்.''

பிறகு, சிவானந்த ஆஸ்ரமம் போய் அங்கு மூன்று நாட்கள் தங்கினார்கள். அம்மாவின் பெயரிலும், அப்பாவின் பெயரிலும் தனித்தனியே தங்குமிடம் கட்டிக் கொடுக்க, அண்ணன் காசு கொடுத்தான்.

அங்கே தங்கிய மூன்று நாளும் அப்பாவின் கைகளாலேயே சாதுக்களுக்கு ரொட்டியும் பருப்பும் தரப்பட்டன.

அதற்குமேல் மலையேற அப்பா சம்மதிக்கவில்லை.

''பத்ரிநாத், கேதாரிநாத் எல்லாம் அடுத்த ஜென்மம் தான். இப்போ, கார்ல போனாக் கூட மூச்சு அடைச்சு



செத்துருவேன். நம்ம ஊருக்கு போலாம் வா. ஹாரிங்டன் பிரிட்ஜ் தாண்டி, கிருஷ்ணாம் பேட்டையில எரிச்சாதான் எனக்கு மோட்சம்.''

அப்பா அதற்குப்பிறகு வீட்டை விட்டு வெளியே போவதை குறைத்துக் கொண்டு விட்டார். அண்ணன் வெளியூர் போவதை சுருக்கிக் கொண்டார். ரங்கசாமி உதவியாளர்களுடன் பம்பாய் வியாபாரத்திற்கு போய் வந்தார்.

மணிவண்ணன் பள்ளி இறுதி வகுப்பு தேர்ந்தான் அவன் தேறும்போது பிளஸ் டூ முறை அமலுக்கு வந்திருந்தது,

அவன் பௌதிகத்தில் முதன்மையாக வந்தான். மாநிலத்தில் இரண்டாவதாக வந்தான்,

அப்பாவின் ஃபியட் காரை எடுத்துக்கொண்டு, தானே ஓட்டிக் கொண்டு போய் கிண்டி எஞ்ஜினியரிங் காலேஜில் சேர்ந்தான்.

சுகவனம் ஒல்லியாய் உயரமாய் இருந்தான், மணிவண்ணன் உயரமாய் தடிமனாய் இருந்தான்.

''ரங்கசாமி பசங்க தொழில் படிப்புல சேர்ந்துட்டாங்க. வெளிநாடு போய் இங்க வேறவிதமா கலக்குவானுங்க. உன் சோப்பு சீப்பு வியாபாரத்தை அவங்க தலையில கட்டாதே. பசங்களுக்கு ஏத்தபடி பொண்ணு கிடைக்கிறதா பாரு. அஞ்சு வருஷ படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் பண்ணி வைச்சிரு.

படிக்கிற இடத்துல வேற ஜாதிப் பொண்ணுங்க ஸ்நேகிதம் ஏற்படும். அவனுக்கு பிடிச்சுப் போச்சுன்னா, நம்ம பசங்களுக்கு நம்ம வீடு ஒட்டாது. அதனால, நம்ம ஜாதிப் பொண்ணுங்கள்ளியே நல்ல பொண்ணுங்களா பாரு.

பொண்டாட்டிக்கு அண்ணன் ஒருத்தன் உத்திர மேரூர்ல இருக்கானே... அவங்க பொண்ணு திருச்சியில படிக்கிறதாமே... என்ன படிப்பு எப்படி குணம்னு விசாரி. நல்லதாப்பட்டா பேசி முடிச்சிடு. கல்யாணம் பின்னால நடக்கட்டும் பாக்கு வெத்தலை மாத்திடு.''

''ஏம்பா அவ்ளோ அவசரம்?''

''பொண்ணுங்க சிதறிப் போற காலம்டா. படிச்சிட்டா பெரிய கொம்புன்னு நினைச்சுகிட்டிருக் காளுங்க. படிப்பு, அழகு, பணம் எல்லாமே குடித்தனம் பண்ணத்தான்டா. குடித்தனம் பண்ண வேணாம்னு நிறைய பொம்பளைங்களுக்கு தோணுது. இதுக்கு ஆம்ப ளைங்களும் காரணம்.

இப்பமே அதுங்களுக்கு குடித்தன ஆசையை தூண்டி விட்டுட்டா, ரெண்டு மூணு வருஷத்துல அதுங்க நல்லா பக்குவமாயிடும்.''

சின்னவரை ரங்கசாமியின் வீடு முழுக்க பார்த்து, ஒரு முறை மரியாதை செய்து விட்டு வந்தது.

ஆறு வருடத்திற்கு முன் வாங்கின கடனை வட்டியும் முதலுமாகப் போட்டு, பெருந் தொகையாய் அவரிடம் நீட்டியது.

''அடடா... எனக்கு இது மறந்தே போச்சே...'' சின்னவர் வியந்தார்.

''உங்களுக்கு மறந்து போச்சுன்னு எங்களுக்குத் தெரியும். நாங்க மறக்க மாட்டோம்.''

''என்ன வட்டி. என்ன கணக்கு'' சின்னவர் ஆராய்ந்து பார்த்து, காசை எடுத்துக் கொண்டார்.



'நீங்க வட்டி அதிகம் கொடுத்திருக்கீங்க. பேங்க்ல கொடுக்கிற வட்டி கொடுத்தாப் போறும். கிட்டத்தட்ட ரெண்டரை லட்ச ரூபா அதிகம். பரவாயில்லை... எனக்கு காசு வேணும். ரங்கசாமியை அடுத்தவாரம் ஆரம்பிக்கிற படத்திலே, பாகஸ்தரா சேர்த்திருக்கேன். என்னங்க பெரியவரே... என் அடுத்த படம் எப்படி ஓடும்.''சின்னவர் அப்பாவை விளையாட்டாகக் கேட்டார்.

''கெட்டவங்களை சவுக்கால அடிங்க. நல்லவங்களை கட்டிக்கிட்டு கொஞ்சுங்க. படம் ஓஹோ...'ன்னு ஓடும்.''

''புரியலியே... என்ன சொல்றீங்க.

''உலகத்திலே எல்லா கதையும் இதைத்தானே சொல்லுது.'' அப்பா சாதாரணமாய் சொல்ல, சின்னவர் அப்பாவின் கையை எடுத்து தலையில் வைத்துக் கொண் டார். 'அப்பா...அப்பா' என்று பிதற்றினார்.

''நான் ஊருக்கு நல்லது பண்ணனும்னு நினைக்கி றேம்பா.''

''இந்த நினைப்பு இருக்கிற வரைக்கும் உனக்கு ஒரு கெடுதலும் வராது. நீ காசுக்கு ஆசைப்படாதே. காசு உன்னைத் தேடி வரும். நீ பதவிக்கு ஆசைப்படாதே. பதவி உன்னைத் தேடி வரும். நீ புகழுக்கு ஆசைப்படாதே. புகழ் உன்னைத் தேடி வரும்.''

''நான் எதுக்காவது ஆசைப்பட்டா தப்பா...'' சின்னவர் வியப்போடு அப்பாவைப் பார்த்து கேட்டார்.

''நீ எதுக்கு ஆசைப்பட்டு நடவடிக்கை எடுத்தாலும், அதற்கு எதிர்பதமான விஷயம்தான் உன்னை வந்தடை யும். நீ ஆசையே படக்கூடாது.''

''நான் ஆரோக்கியமா இருக்கிறதுக்கு ஆசைப் படுவேன்.'' சின்னவர் பேச, டெலிபோன் மணி ஒலித்தது.

''டெலிபோன் மணி அடிக்கிதுங்களே... போய் பேசிட்டு வாங்க.'' அப்பா சொல்ல சின்னவர் விலகிப் போனார். பேச்சு திசை மாறியது.

அப்பா மறுபடியும் அவரை வாழ்த்த, எல்லோரும் வீட்டுக்கு வந்தார்கள்.

இரண்டரை லட்ச ரூபாய் முதலீடு செய்ததற்கான பத்திரங்கள் மறுநாள் வீட்டுக்கு வந்தது.

''அவரா கூப்பிட்டு கொடுக்கிற வரைக்கும் இதுபத்தி கேக்க வேணாம்.''

சாக்லேட் கம்பெனி ஏஜென்ஸியை வட இந்திய பனியாக்கள் நல்ல விலைக்கு கேட்டார்கள்.

ஆறுலட்ச ரூபாய்க்கு எடுத்த ஏஜென்ஸி அறுபதுலட்ச ரூபாய்க்கு விலை போயிற்று.

அடையாறின் மையப் பகுதியிலிருந்து பெரிதாகப் பிரியும் கிளைத்தெரு ஒன்றில் ரங்கசாமியின் அண்ணன் நிலம் வாங்கினார். 'யாருக்காவது ஆகும்' என்று அகல மாய் வீடு எழுப்பினார்.

''ரெண்டு பொண்ணுப்பா. பெரியவ பேரு ஆண் டாள். பி. ஏ. எக்னாமிக்ஸ் படிக்கிறா. சின்னவ பேரு மரகதம். ரெண்டு பேரும் வம்பு பண்ணி காலேஜ்ல சேந் திருக்காங்க.

மெட்ராஸ் காலேஜ்ல சேந்தா பொண்ணுங்க கெட்டு போயிடும்னு திருச்சி காலேஜ்ல சேத்துவிட்டாங்க. உத் திரமேரூர்லேருந்து மச்சானை கூட்டிகிட்டு திருச்சிபோய், பொண்ணுங்களை ஹாஸ்டல்ல பாத்துட்டு வந்தேன்.

அப்பா இருந்தவரைக்கும் பயந்தா மாதிரி பேசினாங்க அப்பா அன்னாண்ட போனதும், 'அத்தை அத்தை'ன்னு ஒரே குலாவல்.



சமைக்கத் தெரியுமாடின்னு இவ கேட்டா. பெரியவ சுமாரா தெரியும்ங்கிறா. சின்னவ தெரியவே தெரியாதுங் கிறா. அதுவும் தவிர, வயசு வித்தியாசம் அதிகம் இல் லேப்பா. பெரியவனுக்கு நாலு வயசு வித்தியாசம். சின்னவனுக்கு சின்னவளோட மூணு வயசுதான் வித்தியா சம் வருது.''

''அது பரவாயில்லடா...முத்துன பொம்பளை குடித் தனத்துக்கு நல்லது. வயசானபிறகு பிரச்னை வரும். நம்ம பசங்க வேற விதமா சமாளிச்சிப்பாங்க. பொண் ணுங்க நல்ல பொண்ணுங்களா...''

''எனக்கு பிடிச்சிருக்கு. ஆனா, அவங்க அண்ண னைப் பத்திதான் ஊர்ல நல்லபேர் இல்லே...''

''என்னா அது...?''

''கள்ளச்சாராயம் காய்ச்சறானாம். கேட்டா கட்சி பேர் சொல்றானாம்.''

''சரி. உத்திரமேரூர்ல இருக்கிறவன் தொழிற்சா லையா வைக்க முடியும். சாராயம் காய்ச்சி மதுராந்தகம் அனுப்புவான் அதுங்க கடைசி பஸ் பிடிச்சு, விடிகார்த் தால மெட்ராசுக்கு வந்துரும். இதெல்லாம் ஒழிக்க முடி யாது.''

''அந்தக் காசுலதான் வீடு, நிலம் எல்லாம் இருக்கும் போல...''

''அவனை வரச்சொல்லேன். பாக்கலாம்.'' அப்பா தரையைப் பார்த்து பேசி முடித்தார்.

அவன் ரங்கசாமியின் மைத்துனனின் மூத்தமகன். ஆறேகால் அடி உயரமும், இரண்டு ஆள் அகலமுமாய்

உள்ளே நுழைந்தபோது, 'வா ராஜா வா...' என்று அவன் கையை பிடித்துக் கொண்டார்.

அப்பா அடிக்கடி சொல்லும் அரச லட்சணங்கள் அவனுக்கு இருந்தன. ஆனால், அந்த முகத்தில் ஒரு கொடுமையும் இருந்தது.

ஒரு யோசிப்பில் அவன் கைவிரல்கள் இடைவிடாது பரபரத்துக் கொண்டிருந்தன.

''நீங்க குறி சொல்வீங்களாமே ஐயா.''

''கேளு ராஜா.''

''நான் மந்திரி ஆக முடியுமா.''

''முடியும்.''

''தமிழ் நாட்டின் முதல்வராக முடியுமா.''

''டெல்லி வரைக்கும் உன்கொடி பறக்கும்.''

''எனக்கு எதிரிங்க ஜாஸ்தி இருக்காங்களே...''

''அதான் ஒரு ராஜாவுக்கு சந்தோஷம்.''

''சொன்னா சிரிக்கக்கூடாது. உத்திரமேரூர் முழுக்க நான் வாங்கணும்னு ஆசைப்படுறேன். அதானே நம்ம தலைநகரம். அதானே நம்ம நாடாண்ட ஊரு.''

''அதில்லை...அது பக்கத்துல உள்ள ஊர்தான் நாம நாடாண்ட இடம். அது மேடு தட்டிப் போச்சு. அது வேணாம். நீ உத்திரமேரூர் வாங்கு. வாங்குவே...'' அப்பா சொல்ல, அவன் பெரிதும் பரவசப்பட்டு அவர் கால் தொட்டான்.

அவனுடைய இரண்டு தங்கைகளையும் ரங்கசாமியின் மகன்களுக்கு திருமணம் செய்து கொடுக்க சம்மதித்தான்.

அவர்கள் பாக்கு வெற்றிலை மாற்றிக் கொண்டார்கள்.



# 3

''கடைசி வரைக்கும் அவன் சாராயம் காய்ச்சறதைப் பத்தி நீ கேக்கவே இல்லியேப்பா.'' ரங்கசாமி ஆவலோடு கேட்டான்.

''கேட்டா..., அவன் உடனே ஒத்துக்கப் போறானா. அப்படி ஒத்துகிட்டா உனக்கு சந்தோஷமாயிடுமா. எதுக்கு தேவையில்லாத...அவன் வீட்டுக்கு பொண்ணா தரப்போறோம். பொண்ணு எடுக்கப் போறோம். அவனுடைய தொழிலுக்கும், அவன் வீட்டுப் பொண்ணுங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லை.''

''அந்தப் பொண்ணுங்களை நீ பாக்கவே இல்லையேப்பா.''

''எனக்கு நம்ம ஜாதிப் பொண்ணா, நம்ம வம்சத்துப் பொண்ணா இருக்கிறதுல சந்தோஷம், யார் வீட்டு கல்யாணத்துக்காவது வரச்சொல்லு. நாம நம்ம பசங்கள கூட்டிகிட்டுப் போய் பாப்போம்.''

''பொண்ணு பாக்கறாப் போலயா.''

''அது போலதான். ஆனா, அது இல்லை.''

அவர்கள் சொந்தக் காரர்கள் வளைகாப்பிற்கு பெரும் படையாகப் போய் இறங்கினார்கள். அந்தப் பெண்களுக்காக காத்திருந்தார்கள்.

மணிவண்ணன் ஆவலாக இருக்க, சுகவனம் ஒரு வெடுவெடுப்பில் இருந்தான்.

ரங்கசாமி அதை கூர்ந்து பார்த்துவிட்டு மணிவண்ணனை தனியே கூட்டிக் கொண்டு போனார்.

''என்னடா...சுகவனத்துக்கு, பொண்ணு பாக்கறது பிடிக்கலையா. காலையிலேருந்து கடிக்கிறா மாதிரியே பேசறான்.''

''மெடிக்கல் காலேஜில என்னமோ ஓடுது.''

''என்ன ஓடுது.''

''இவன்கூட படிக்கிற பொண்ணு. இவனைவிட ரெண்டு வயசு பெரிசு. எமிலி தங்கம்மான்னு பேரு. சிவகாசி நாடார். லவ்வா... ஃப்ரெண்ட்ஷிப்பா... ஒண்ணும் புரியல ரெண்டு பேரும் சுத்தறாங்க.''

''தாத்தாவுக்குத் தெரிஞ்சா கோபமாயிடுவாருடா.''

''தெரிஞ்சிடுமோ என்ற பயத்துல இவன் கோபமாவு றான்.''

''எதுவா தப்பா செய்திருப்பானா.''

''இருக்கலாம்,''

''என்னடா சொல்றே''

''மெடிக்கல் காலேஜ்ல இதுக்கெல்லாம் வாய்ப்பு இருக்கு.''

''முன்னமே சொல்லிருந்தா நிறுத்திருப்பேன் இல்ல இதையெல்லாம்.''

''இதை நிறுத்திட்டு எமிலிக்கு கட்டிக் கொடுப்பியா. நாம ஒத்துக்கிட்டாலும் அவங்க ஒத்துக்க மாட்டாங்க. அந்தப் பொண்ணுக்கு முறைப்பையனுங்க நாலஞ்சு பேர் வந்துட்டுப் போறாங்க. அவங்களுக்குள்ளேயே போட்டி பொறாமை இருக்கு.''

''தள்ளி நில்லுடான்னு அவன்கிட்ட சொல்ல வேண்டி யதுதானே...''

''அப்பா...இதில் எல்லாம் புத்தி சொன்னா யாருக்கும் ஏறாது. புத்தி சொல்றவன் கெட்டவனாப் போயிடுவான். தானா பட்டு திருந்தணும்.'



''ஊருக்குப் போய் படையல் போடணும்டா,''

''எதுக்குப்பா.''

''கத்தி பிடிச்ச பரம்பரை, இதை சந்தி சிரிக்க வெச்சி டாதேன்னு பெரியவங்கள கேட்டுக்கணும்.''

''அப்பா... இதெல்லாம் தாத்தாகிட்ட சொல்லாதே. எதுக்கு வயசான காலத்துல தேவையில்லாத வேதனை.''

ரங்கசாமியின் அப்பா ஆண்டாளையும், மரகதத்தை யும் தலை தொட்டு ஆசீர்வதித்தார். மல்லிகையை முகர்ந்து, தலையில் வைத்துக்கொள்ள கொடுத்தார். அவர்கள் முழங்கையைத் தடவி விரல்களை கோர்த்துக் கொண்டார்.

'ரொம்ப சந்தோஷம் ரொம்ப சந்தோஷம்' என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

''சமையல் கத்துக்கணும். சமைக்கிறது என் வேலை யான்னு சொல்லாதே. யார் [சமைச்சாலும் பிள்ளை பெறப் போறது பொம்பளைதான். ஆம்பளையில்ல. கடவுள் அல்லது இயற்கை பொம்பளைய பிள்ளை பெறு கிறவர்களா வைச்சிருக்கு.யார் பிள்ளை பெறுறாங்களோ, அவங்களே ஆக்கிப்போடறது நல்லது. வேற யாரு ஆக்கிப் போட்டாலும் பெத்தவ போடற மாதிரி ஆகாது.''

''ஒரு பொம்பளை சோறாக்க கத்துக்கறது பெத்த குழந்தைங்களுக்காகத்தான். அஞ்சு வயசு வரைக்கும் நீ போடற சோறுதான் அவனை நல்லவனாகவோ,கெட்டவ னாகவோ மாத்தும்.''

இங்கே சோறுன்றது வெறும் உணவுமட்டுமல்ல. மனசு. பசி அறிஞ்சு பக்குவமா போடுற மனசுதான் முக் கியம். பெத்தவ இல்லாத வேற யாருக்காவது இந்த அக் கறை வருமா.

பொம்பளை புருஷனுக்கும் சோறு சமைச்சுப் போட ணும். ஏன்னா, அவன் மூலம்தான் அவளுக்கு குழந்தை கிடைக்குது. அவன் சாப்பிடுற சாப்பாடு, அவன் ஜீரணம் பண்ற விதம்தான் அவனை வலிவுள்ளவனா மாத்தும்.

அம்மாகிட்டேருந்து நசர்ந்து பொண்டாட்டிகிட்டே வர்றவனை பொண்டாட்டிதான் அம்மாமாதிரி கவனிச்சுக் கணும். சோறு சமைக்கிறது அவமானமில்லை தாயி. அதுதான் ஒரு குடும்பத்துக்கு அடித்தளம். வேலைக் காரனை வைச்சு சோறு சமைச்சுக்கலாம். குடும்பத் தோட வேர் அறுந்து போயிடும்.''

''தாத்தா. உங்களை ஒரு கேள்வி கேக்கட்டுமா. பொம்பளைய இழிவா நடத்துற ஆம்பளையைப் பத்தி என்ன நினைக்கிறீங்க.''

''போக்கிரிதான் பொம்பளைய இழிவா நடத்துவான். அவனை தரித்திரம் தொடும். நோய் பிடிக்கும். மனம் இருளும். புத்தி பிரளும். அவன் மரணத்தின்போது சொல்ல வொண்ணா வேதனை அனுபவிப்பான். மரண நேரம் சிறிதாக இருந்தாலும் அந்த இடைப்பட்ட நேரத் தில் பயந்து பயந்து அலறுவான். 'மரணம் வேண்டாம் வேண்டாம்' என்று கதறுவான் மறுபடி மிக மோச மான ஜந்துவாக உலகில் பிறப்பான். இது நிச்சயம். சத்தியம்.''

''அவனை ஒருபெண் எப்படி எதிர் கொள்வது.'' ஆண்டாள் கவலையுடன் கேட்டாள்.

''அன்பு செய் தாயே... இடைவிடாது அன்புசெய். இந்த ஆணை ஒரு பெண் எந்த அஸ்திரத்தாலும் அழிக்க முடியாது. வேறு எந்த விதமாகவும் சாய்க்க முடியாது. இது ஆயிரக்கணக்கான வருடங்களாக நடக்கிற உண்மை.

அன்பினால் ஆணை கதறடிக்கலாம். கட்டிப்போட்டு குழந்தைபோல இழுத்துப் போகலாம். ஆத்திரத்திற்கு



ஆத்திரப்படாமல் அன்புசெய்ய ஒரு பழக்கம் வேண்டும். இது கேவலமல்ல. மரியாதை கெட்ட விஷயமல்ல. வேறு எந்த ஆயுதமும் செல்லுபடியாக வில்லை என்பதை தெரிந்து வைத்து அன்பு என்கிற பிரம்மாஸ்திரத்தை ஏவ பெண்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். இதில் தாழ்ச்சியாக நினைக்க ஏதுமில்லை.''

அந்தப் பெண்கள் அவரோடு உலாவினார்கள். அவ ருக்கு அருகே அமர்ந்து சாப்பிட்டார்கள். அவர் தூங்கும் போது விசிறினார்கள். கால்பிடித்து விட்டார்கள்.

மணிவண்ணன் சற்றுநேரம் அவர்களோடு பேசி னான். சுகவனம் எதுவும் பேசவில்லை.

''அப்படியே ஏரிகாத்த ராமர்கிட்டபோ.'' கிழவர் கட்டளையிட கார் திசை திரும்பியது.

''சுகவனம் என்னை கையப் பிடிச்சி உள்ளே கூட்டி கிட்டுப் போடா.''

கோயில் வாசலில் இறங்கி கிழவர் அவனோடு கை பிடித்து, சாமி கும்பிட்டு விட்டு, சுற்றி வந்தார். மண்ட பத்தில் அமர்ந்து கொண்டார்.

''ஒரு ஆம்பளைக்கு வாழ்க்கையில ஒரு பொம்பளை போறும். அப்படி கிடைக்கிற ஒரு பொம்பளை அற் புதமா அமைஞ்சிட்டா, இந்த ஜென்மம் நிறைஞ்சிரும். மனுஷ ஜென்மம் நிறைஞ்சதுன்னா மறுபடியும் பொறக்க வேணாம்.

நான் சொல்றதெல்லாம் கதையில்லை. ஒரு நிலை.

எனக்கு எழுபத்தெட்டு வயசு. நான் திடமா இருக் கேன்னா, அதுக்கு என் பொண்டாட்டி காரணம். இவ மட்டும் போதும்னு நான் இருந்தது காரணம்.

எனக்கும் இவளுக்கும் சண்டையே வந்ததில்லை. அவ இல்லாம நான் இல்லை, நல்ல பொம்பளை கூட

இருக்கிறச்சே, மனசு சுணக்கமோ, உடல் சுகவீனமோ வராது. புத்திதான் நோய்க்கு மூல காரணம். நல்ல மனைவிதான் ஒரு மனுஷனுக்கு புத்தி.

அப்படி வரக்கூடிய மனைவி உன்னை மட்டும் நினைச்சா போறாது. உங்க அம்மாவை ஆதரிச்சாதான் உனக்கு நிம்மதியா இருக்கும். உங்க அப்பாவோட சிரிச்சுப் பேசினாதான் உனக்கு சந்தோஷமா இருக்கும்.

எனக்கு விசிறி கால்பிடிச்சி விட்டாதான் உன்மனசு குழைவாகும்.

அவன் உன் சொத்து இல்ல. இந்த வீட்டு சொத்து. அவதான் இந்த வீட்டு முகம். அவதான் இந்த வீட்ல எல்லாம். அவ சந்தோஷப்பட்டாதான் ராத்திரி நீ நிம்மதியா தூங்க முடியும்.

பொம்பளை ராத்திரி அழுதுகிட்டு உட்காந்திருந்தா, எந்த ஆம்பளையாலும் தூங்க முடியாது. குடிச்சிட்டு தூங்கலாம். அது தூக்கமா. அது துடிக்க வைக்கிற நோயை கொண்டாந்து தரும். புத்தி மாறாட்டம்வரும். ஒருத்தன் பைத்தியம் பிடிச்சா சாகறது...அதை விடக் கொடுமை உண்டா.

ஆண்டாள் ரொம்ப நல்ல பொண்ணு. தனக்கு நல்ல புருஷன் கிடைக்கணும், தான் நல்லபடியா இருக்கணும்னு ஆசைப்படற பொண்ணு, அவளை கல்யாணம் கட்டிக்கிறியா...அவளைவச்சு நல்லபடியா குடித்தனம் பண்ணுவியா.''

சுகவனம் கேள்விக்கு பதில் சொல்லாது வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

''வேணாம்னா வேணாம்னு சொல்லு. பொண்ணை ஆசை காட்டி மோசம் செய்றது ரொம்ப பாவம். பாக்கு



வெத்தலை மாத்தினாலும் பக்குவமாப்பேசி, கல்யாணம் இல்லைன்னு சொல்லிக்கலாம்.

ஒரு பொண்ணு வீட்டுக்கு வந்த பிறகு வேதனைப்படுத்த வேண்டாம். சொல்லு. ஆண்டாளை கட்டிக்கிறியா. இல்லே...'' கிழவர் சுகவனத்தை கொக்கி போட்டு இழுத்தார்.

வீடு முழுவதும் சுற்றி உட்கார்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

''நான் எமிலின்னு ஒரு பொண்ணை லவ் பண்றேன்.' சுகவனம் எல்லோர் முன்பும், எல்லா விவரங்களும் சொன்னான்.

''ராமா...ராமா...ராமா...'' கிழவர் அலறினார்.

சுகவனம் கண்ணீர் சிந்தினான். வீடு வாயடைத்துக் கிடந்தது.

கிழவர் மறுநாள் சுத்தமாய் உடுத்திக் கொண்டு, மெடிக்கல் காலேஜ் ஹாஸ்டல் போய் எமிலி தங்கம்மாளுக்காக காத்திருந்தார்.

அவள் வந்ததும் கை கூப்பினார். ''அம்மா. நீ யாரு...'' பணிவாக கேட்டார். தனியே ஒரு மணி நேரம் பேசினார்.

வீடு வந்து, திண்ணையில் உட்கார்ந்து, குளிரக்குளிர மோர் குடித்தார்.

''அந்த எமிலியும் நல்ல பொண்ணுதான். அவங்க சொந்தக்காரப்பசங்க ஆசையா சுத்தறாங்க. ஆனா யாரும் படிச்சவங்கயில்ல...படிக்காத ஆளைக்கட்டிக்கிட்டா, தன் மேற்படிப்பும் தொழிலும் பாதிக்கப்படுமோன்னு பயம். தன் மேலே மரியாதை வைச்சிருக்கிற பையனை கட்டிகிட்டா நல்லதுன்னு எண்ணம்.

நம்ம பிள்ளைக்கு முதுகு தடவினாலே கண்ணுல ஜலம் வந்துரும். அட இவ நல்லவளா இருக்காளேன்னு லவ் பண்ணிட்டான்.

நான் உண்டாகும் இடைஞ்சலை பட்டியல் போட்டு காண்பிச்சேன். ஆடிப்போய் நின்னுடுச்சு. அதுவும் சின்னக் குழந்தைதானே...

வர்ற ஞாயித்துக்கிழமை சாயந்திரம் மறுபடி போறேன். அந்த நாலு பசங்களும், எமிலியோட முறைப்பசங்க. எல்லாரும் அன்னிக்கி வர்றாங்க. அதிலே யாரை கட்டிக்கிறதுன்னு அவளுக்கு சொல்லணும்,

மூணாவது மூணாவதுன்னு எமிலியை நினைக்கிற போதெல்லாம் ஒரு குரல் கேட்டுகிட்டே இருக்கு. என் னான்னு புரியலை. மூணாவதா வர்ற பையனா, மூணா வது படிச்ச பையனா...யோசிக்கோணும்.

அந்தப் பொண்ணுக்கு நல்லது நடந்தா நம்ம பிள்ளையவிட்டு நகந்துரும். முள்ளுமேல துணி விழுந்து போச்சு. மொள்ளதான் எடுக்கணும்.''

கிழவர் ஞாயிற்றுக்கிழமை மறக்காமல் கார் எடுக்கச் சொல்லி, ரங்கசாமியோடு ஹாஸ்டலுக்குப் போனார்.

அங்கே ஒரு இளைஞன் உட்கார்ந்திருந்தான், எமிலி அவனை அறிமுகப்படுத்தினாள்.

''என் பெற்றோருக்கு நான் மூணாவது பையன் ஐயா. எங்க ரெண்டு அண்ணனுக்கும் கல்யாணமாயி டுச்சு. பெரியவர் மனைவி டீச்சரா இருக்காங்க. ரெண டாவது அண்ணி நர்ஸா இருக்காங்க. எங்க அம்மாவுக்கு எமிலின்னா ரொம்பப் பிடிக்கும்.

அவங்க டாக்டருக்கு படிக்கணும்னு ஆசைப்பட் டாங்க. படிக்க பெரியவங்க விடல. அதனால, நல்லா படிச்ச மருமக வரணும்னு கவனமா இருக்காங்க.



நான் பி. ஏ. தான் படிச்சிருக்கேன். எனக்கு சயின்ஸ் அவ்ளோ நல்லா வரலை. ரெண்டு அண்ணனும் வாத்தி யாராதான் இருக்காங்க. எனக்கு வாத்தியார் வேலை இஷ்டமில்லைன்னு வியாபாரம் செய்துகிட்டிருக்கேன்.

தங்கச்சி ஒண்ணு பத்தாவது படிக்கிது. நடுவுல பொறந்த பொண்ணு ஜுரத்துல செத்துப் போச்சு.

எமிலி சரின்னு சொல்லிட்டா எப்ப வேணா கல்யாணம்,''

''சரின்னு சொல்லு எமிலி. இவன்தான் உனக்கு புருஷன். இவன் உன்னை தலையில வைச்சு தாங்குவான். உன் வாழ்க்கை ரொம்ப நல்லாருக்கும்.''

கிழவர் பிரச்னைசயை தீர்த்து வைத்தார்.

சுகவனம் இருண்டுபோய் கிடந்தான். எந்நேரமும் படிப்பு படிப்பு என்று திசை மாறினான்.

கிழவர் மறுவாரம் வாசற்படி தடுக்கி குப்புற விழுந் தார். படுக்கையானார். சுகவனம் மிக சிரத்தையாக கவனித்துக் கொண்டான். வலிக்காமல் நிரோபியான் ஊசி போட்டான். வேளா வேளைக்கு மாத்திரை மருந்து கொடுத்தான்.

விஷயம் கேட்டு முத்து ஓடிவந்தான்.

''என்னைய பாக்கற போதெல்லாம் சின்னவர் உங்க ளைப் பத்திதான் கேக்கறாரு. நீங்க என்ன இப்படி படுத் துட்டீங்க.''

''போற வேளை வந்துருச்சுடா.''

''நீங்க இன்னும் நாறு வருஷம் இருப்பீங்க. சின்னவரு அரசியல்ல பெரிய ஆளா வருவார்னு சொன்னீங்களே... அதைப் பாக்க வேணாமா நீங்க...''

"அவரு நிச்சயம் பெரிய ஆளா வருவாரு. ஆனா, நான் பாக்க மாட்டேன்."

அன்று இரவு முத்து தோட்டக்கதவு திறந்து கொண்டு ஓடி வந்தான். 'சின்னவர் வர்றாரு சின்னவர் வர்றாரு' என்று கத்தினான்.

சின்னவர் வந்து, அப்பாவின் அருகில் உட்கார்ந்து அவர் கைகளை கோர்த்துக் கொண்டார். அவர் கூடவே மூன்று டாக்டர்கள் வந்தார்கள். சிரித்து சிரித்து பேசிக் கொண்டே சோதனைகள் செய்தார்கள்.

"ஒரு பிரச்சனையும் இல்லே." என்று ஆறுதல் சொன்னார்கள்.

"அப்போ ஏன் சோர்வா இருக்காரு." சின்னவர் கேட்டார்.

"வயசாயிடுச்சு. உடம்பு மெல்ல மெல்ல ஒடுங்குது."

"உள்ளே மனசுல எங்கியோ காயம் பட்டுட்டாரு. 'போறும் போறும்'னு தீர்மானம் பண்ணிட்டாரு.

"நாலும் தெரிஞ்சவங்களுக்கு மனசு வருத்தம் வந்துதுன்னா, அது மரணத்துலதான் முடியும்."

"என்ன மன வருத்தம்." சின்னவர் கேட்டார்.

"எதுவுமில்லை."

"அப்ப ஏன் சோர்வா இருக்கீங்க."

"உலகம் மோசமா போய்கிட்டே இருக்கு. தர்மமே இல்லை. எது நல்லதுன்னு சொன்னாலும் தெரியல. வாழ்க்கை முறை கலைஞ்சு, கலைஞ்சு மாறுது, அரசாட்சி செய்றவன் உத்தமனா இருக்கணும், இல்லை. ஜனங்க கிட்டேயும் நல்ல குணங்கள் இல்லை. ஏமாத்தறதே வாழ்க்கையா போச்சு. லஞ்சமே நியாயமா போச்சு. ஆடம்பரமே இயல்பாயிடுச்சு."



"கடவுள் இருக்காரு. பயப்படாதீங்க." சின்னவர் பொதுவாய் சொன்னார்.

'இல்லேன்னு தோணுது. நாமளா முட்டி, நாமளா கத்துக்கணும். நமக்கு யாரும் கத்துத்தர மாட்டாங்க. அந்த கடவுள் நம்பிக்கை போனதும் நான் கொஞ்சம் ஆடிட்டேன்.

சொர்க்கம் நரகம் எல்லாம் பொய். நம்ம கற்பனை. இது வேற ஏதோ கணக்கு. அந்த கணக்கு நமக்கு கடைசி வரைக்கும் தெரியாது. நாம விதம்விதமா பொய் சொல்லிகிட்டே இருப்போம். உண்மை தெரியாம நாத்திகம் ஆத்திகம்னு பேசிகிட்டிருப்போம்."

"கடவுள் இல்லேங்கறீங்களா. இருக்குங்கறீங்களா." ஒரு டாக்டர் விளங்கிக் கொள்ள முடியாமல் கேள்வி கேட்டார்.

"கடவுள் இருக்கக்கூடும். "கிழவர் பதில் சொன்னார்.

அங்கே ஒரு மெளனம் நிலவியது.

கிழவர் கண்மூடி தூங்க, சின்னவர் ரங்கசாமியோடு தோட்டத்திற்குப் போய், நாற்காலியில் உட்கார்ந்து பேசத் துவங்கினார்.

"ரெண்டரை லட்சம் ஐந்து லட்சமாக உயர்ந்திருக்கிறது. ஆனால், காசு இப்போது தரமுடியாது. அடுத்த படத்துக்கு அந்தத் தொகை உபயோகப் படுத்தப்படும்." சொல்ல, ரங்கசாமி சம்மதம் தெரிவித்தார்.

"ஒருவேளை தனக்கு காசு தேவைப்பட்டால் எவ்வளவு கடன் கொடுக்க முடியும்." என்று அவர் விசாரிக்க, "பத்து லட்சம்வரை உடனே தரமுடியும்.

இன்னொரு பத்து லட்சம் மெல்ல மெல்ல புரட்டித்தர முடியும்'' என்று சொல்லப் பட்டது.

சின்னவர் சந்தோஷமாக கைகுலுக்கி விட்டுப் போனார்.

''நான் உன்னை கேக்கப் போறேனா. நீ தரப் போறியான்னு எனக்குத் தெரியல. ஆனா, தர்றேன்னு சொன்னே பாரு. அந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன். உங்க அப்பா சொல்படி எனக்கு ஒரு நல்ல நிலைமை வந்தா, இந்த வீட்டுக்கு நிச்சயம் செய்வேன்.''

சின்னவர் காரில் உட்கார்ந்தவுடன், ரங்கசாமியிடம் கையடித்து சத்தியம் செய்தார்.

மறுநாள் கிழவர் எழுந்து உட்கார்ந்து கொண்டார். வீடு, தோட்டம், எதிர்கட்டிடம் எல்லாம் சுற்றிப் பார்த்தார்.

''நாம இந்த நல்ல நிலைக்கு வந்த காரணம் தெரியுமா.'' வீட்டில் எல்லோரும் உட்கார்ந்து டிபன் சாப்பிடுகிறபோது, சிரித்தபடியே கேட்டார்.

''தெரியலையே...'' ரங்கசாமியின் அண்ணன் பதில் சொன்னார்.

''என்னுடைய சின்ன வயசுல அதாவது, வாலிபப் பருவத்துல, மதுராந்தகத்திலே இருக்கிற ஒரு தெருவிலே டான்ஸ் ஆடற அம்மா இருந்தாங்க. அவங்க தாசிக் குலம். ஆனா, அந்த முறை அப்போ ஒழிஞ்சு போச்சு, அவங்களுக்கு காசும் இல்லே மரியாதையும் இல்லேங்கிற நிலைமை.

காங்கிரஸ் கட்சி வந்து ஒழுக்கம், பிரம்மச்சர்யம் எல்லாம் அதிகமாக பேசப்பட்ட காலம் அது. ஜனங்க கொஞ்சம் 'உர்ரு'ன்னுதான் இருப்பாங்க.



அந்த அம்மாவுக்கு டான்ஸ்தான் தெரியும், பாட்டு தெரியாது. குரல் இல்லை. அதனால, வாழ்க்கை ரொம்ப சிரமம் அவங்க சின்ன வயசுல, யாரோ ஒருத்தர் அவங்களுக்கு ஒரு சொத்து எழுதி வைக்க, அதை கேள்விப்பட்டு கொடுத்தவன் பையன் வழக்கு போட்டுட்டான்.

அந்த அம்மா புடவையில தூக்குப் போட, உத்திரக் கட்டை உடைஞ்சு, தலையிலே விழுந்துச்சு, உதவி செய்ய யாருமே வரலை. நான் வைத்தியரை கூட்டிகிட்டு வந்தேன். பென்சிலீன் கிடைக்கலே... மெட்ராஸுக்கு வந்து ஆறு ட்யூப் வாங்கிட்டு வந்தேன்.

'செய் செய்... உடம்பு சரியானவுடனேயே திருப்பிக் கொடுத்துருவா'ன்னு ஊர்ல கேலி பண்ணினாங்க.

என்னைவிட பத்து வயசுமூத்தவங்க. எனக்கு தப்பான எண்ணமே வரலை.

மாசாமாசம் நூறுரூபா. உங்களுக்கு ஒரு வருஷம் தர்றேன்னு சொன்னேன். அப்போ நூறு ரூபா பெரிய காசு.

ஒண்ணாந்தேதி காலையில காசு கொடுத்துட்டு வந்துருவேன். அந்த அம்மா, 'நான் என்ன செய்யணும், என்ன செய்யணும்'னு கேட்க, ஒண்ணுமே செய்ய வேணாம்'னு கைகூப்பி சொன்னேன்.

ஆறாவது மாசம் அந்த அம்மாவே கிட்டவந்து, 'வாங்க முதலியார்'னு கூப்பிட்டுச்சு.

''நான் வர்றமாதிரி இல்லேம்மா. இழிவா எடுத்துக்காதீங்க. உங்க சொத்து உங்களுக்கு கிடைச்சுட்டா, அதை வித்துட்டு நீங்க மெட்ராசுக்கு போயிடலாம், மெட்ராஸ்ல இப்போ வசனநாடகம் வந்துருச்சு. அதிலே நடிக்கப் போயிடலாம்னு சொன்னேன்.''

அந்த அம்மா ரொம்ப அழுதுச்சு.

''ஒரு சாமியார் என் வீட்டிலே தங்கி இருந்தாரு. அவர்கிட்டே காசு இல்லே. ஆனா, ஆறுவிதமான மந்திரம் சொல்லிக் கொடுத்துட்டுப் போனாரு. இன்னிக்கி காலை யிலேதான் அவர் எழுதிக் கொடுத்த நோட்டு புஸ்தகம் கிடைச்சுது.

அதிலே, மத்தவங்க நல்லா இருக்கணும்னு சொல்ற மந்திரம் இருக்கிறது. உங்க பேர் சொல்லி தினம் அந்த மந்திரம் சொல்லப்போறேன்.

நீங்க, உங்க குடும்பம் ரொம்ப நல்லா இருப்பீங்க, உங்களுக்கு நோயே வராதுன்னு சொல்லுச்சு.

''நோய் வந்தா... அப்படின்னு கேட்டேன்.''

'உன் கதை முடிஞ்சிபோயிடும்'னு பதில் சொல்லுச்சு.

''அப்புறம்தான் எங்கியோ படிச்சேன். 'தாசியை உபயோகப் படுத்தாமல் அவளுக்கு தானம் கொடுத்தால் அவள் ரொம்ப சந்தோஷமாயிடுவாளாம். வயிறு குளிர, நீ நல்லா இருக்கணும்' என்று வாழ்த்துவாளாம். அந்த வாழ்த்து பலிக்குமாம்.''

''யோசனை பண்ணிப்பாத்தா நான் பண்ணின நல்ல காரியம் இது ஒண்ணுதான். இந்த ஒரு காரியம்தான், எனக்கு நல்ல மனைவி நல்ல குடும்பம், நிறைய செல்வம் எல்லாத்தையும் கொடுத்திருக்கு.

ஒரே ஒரு நல்ல விஷயத்தை ஒழுங்கா பண்ணினாப் போதும். ஒருத்தன் வாழ்க்கை நல்லாயிடும். நல்லது பண்றோமோ இல்லயோ, பிறத்தியார் வயிற்றெரிச்சலை கொட்டிக்கக்கூடாது. 'அடப்பாவி'ன்னு என்னை யாரும் சொல்லும்படியா, நான் வைச்சதே இல்லை. அப்படியாப் பட்ட ஒரு ஆசை எனக்கு வரவேயில்லை.



''எனக்குத் தெரிஞ்சதை உங்களுக்கு சொல்லித்தரேன். அவ்வளவுதான்.''

சுகவனம் தன் இடத்திலிருந்து எழுந்து போய் தாத்தா வின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். அவர் தோளில் சாய்ந்து கொண்டு அவரை கட்டிக் கொண்டான்.

கிழவர் பொக்கை வாயோடு முகம் மலரச் சிரித்தார். எல்லாம் தெரிந்தவரின் சிரிப்பாய், இறைவனின் புன்னகை யாய், குழந்தையின் குதூகலமாய் அவர் முகம் இருந்தது.

''தாத்தா மாதிரி நாம ஆக மாட்டோமா. நல்லது பண்ற ஒரு பக்குவம் நமக்கு வராதா அப்படின்னு நினைக்கிறே இல்லே...''

சுகவனம் ஆமாம் என்று தலையசைத்தான்.

''வரும். நிச்சயமா வரும். டாக்டருக்கு படிக்கிறியே தவிர, இன்னும் சரியா சாவு பாத்தது இல்ல. டாக்டரா இருக்கப்பட்டவன் சாவு பாக்காத இருக்க முடியுமா. சாவு பார்க்க பார்க்க, உன் சாவு உனக்கு அடிக்கடி ஞாபகம் வரும். தன் சாவு தெரிஞ்சவனுக்கு உலகில் எதுவும் முக்கியமாக இருக்காது. இருக்கும் வரை உலகம் என்பது தெளிவாகி விடும். அப்போ, எல்லாத்தையும் மெல்லீசா எடுத்துக்கலாம்.

நான் பண்ணின தானம் உன் வரைக்கும் வந்திடுச்சு. இப்ப நீ ஏதாவது பண்ண வேணாமா.

இல்லாதவன்கிட்டே காசு வாங்காதே. தினம் மூணு ஏழைக்கு வைத்தியம் பண்ணு. இலவசமா மருந்து கொடு. உன் சுக துக்கம் பாக்காதே. உயிருக்கு ஆபத்துன்னா ஓடு. நீ டாக்டர். இருபத்தி நாலு மணி நேரமும் டாக்டர்.

''உதவி செய்றதிலே ஒரு ருசி வந்திருச்சு... உன்னை எங்கியோ தூக்கிட்டுப் போயிடும். நல்லவங்க வார்த்

தையைவிட பெரிய ரெகமண்டேஷன் எதுவும் கிடையாது.''

''அப்பா... நீ பேசறதைக் கேட்டா எனக்கு ஒண்ணு தோணுதுப்பா. ''ரங்கசாமியின் அண்ணன் தொண்டையை செருமிக் கொண்டான்.

''நாங்க சம்பாதிச்சோமே தவிர ஒண்ணும் செய்யலை. உன் பேர்லேயும், அம்மா பேர்லேயும் படிக்கிற பசங்களுக்கு எதுனா செய்யலாம்னு இருக்கேன்.

பிளஸ்டூவில முதல் அஞ்சு ரேங்க் பசங்களுக்கு, பணக்காரனோ ஏழையோ மூணு சவரன் தங்கப் பதக்கம் பரிசு கொடுக்கிறேன். எண்பது சதவிகிதத்திற்கு மேலே வாங்கி, உண்மையிலேயே படிக்கிறதுக்கு வசதியில்லைன்னா, பத்து பசங்களுக்கு ஆளுக்கு பத்தாயிரம் ரூபா படிப்புக்கு காசு கொடுக்கிறேன்.''

''கொடு நல்லா கொடு. எம் பேர்ல பத்து, உங்கம்மா பேர்ல பத்து. ரெண்டு லட்சமெல்லாம் நமக்கு ஒரு காசா... இதிலே ஜாதி வித்தியாசமே கிடையாதுன்னு சொல்லிடு. ரொம்ப தாழ்ந்தவன் வர்றான் பாரு... அவனுக்கு முன்னுரிமை கொடு''.

''பையனுங்க பத்து பேரு, பொண்ணுங்க பத்து பேரா கொடுக்கலாமே'' அண்ணி சொல்ல, கிழவர் கைதட்டி, ஆமோதித்தார்.

சுகவனம் மருத்துவப்படிப்பை டிஸ்டிங்ஷனோடு தேறினான். அரசு பொது மருத்துவமனையில் ஹவுஸ் சர்ஜன் ஆனான். வெளிநாடு மருத்துவப் படிப்பிற்காக, சிங்கப்பூருக்குப் போய், பரிட்சை எழுதி விட்டு வந்தான்,

ஆண்டாளுக்கும், மரகதத்திற்கும் புடவைகள், சோப்பு சீப்பு சாமான்கள் வாங்கி வந்தான். கையடக்கமான டிரான்சிஸ்டர் ரேடியோ பத்து கொண்டு வந்தான்.



ஒன்றை கொண்டு போய் சின்னவருக்கு பரிசளித்தான்.

வாங்க டாக்டர். எப்போ கல்யாணம்.'' சின்னவர் எழுந்து கட்டிக் கொண்டார்.

''இந்த வருஷக் கடைசியில...''

''தாத்தா எப்படி இருக்காரு.''

''உங்களை ரொம்ப விசாரிச்சாரு.''

''வா... போய் பாத்துட்டு வந்துடலாம்.''

அவர் பகலில் வீட்டிற்கு வந்ததேயில்லை. அவர் இறங்கியது தெரிய, தோட்டக் கதவில் ஜனம் தொங்கிக் கொண்டு நின்றது. 'வாழ்க வாழ்க' என்று உரக்கக் கத்தியது. வெளியே வந்து கையசைக்க, குதூகலம் செய்தது.

விடை பெற்றுப் போகும் போது, ரங்கசாமியின் காதோடு சின்னவர் பேசினார்.

''ஒரு வாரத்துக்குள்ள பத்து லட்ச ரூபா புரட்டி, உங்க வீட்டு பீரோவுல வைச்சிடு. நான் கேக்கற போது கொடு.''

''நிச்சயமா தரேன்.''

''ஒண்ணும் கஷ்டம் இல்லியே ரங்கசாமி.''

''எனக்கு கஷ்டமில்லை. அப்படியே கஷ்டம் இருந்தாலும், கஷ்டப்பட நான் தயார்.''

''எங்கியோ எப்பவோ யாருக்கோ நான் தானம் பண்ணியிருக்கேன். அதுதான், எனக்கு நல்ல மனுஷாள துணையா கொடுத்திருக்கு.'' சின்னவர் விடைபெற்றுப் போனார்.

''ஏங்க...தலைவர் அடிக்கடி வருவாராமே...அவரு துட்டெல்லாம் உங்களாண்டதான் கொடுத்து வைச்சிருக்

காராமே...இந்த எதிர்லே இருக்கிற ஆறு மாடிக்கட்டிடம், அவருக்கு சொந்தமாமே...'' ஜனம் இஷ்டத்திற்கு கற்பனை செய்து கொண்டது.

அவர் வந்துவிட்டுப் போன ஒரு வாரத்தில், கட்சியிலிருந்து விலக்கப்பட்டார்.

தமிழகத்தின் பல பகுதிகளில் இதுபற்றிய வாதப்பிரதிவாதம் நடந்தன.

ஒரு நள்ளிரவில் முத்து ஓடிவந்தான்.

''தலைவர் ஏதோ கேட்டிருந்தாராமே...அத்தோட வரச்சொன்னார்.''

ரங்கசாமியும், அவர் அண்ணனும் சுகவனம், மணிவண்ணனோடு காசு எடுத்துக் கொண்டு போனார்கள்.

லாயிட்ஸ் ரோடில் இரண்டு விதமான கூச்சல்கள் இருந்தன. ஆதரவுக் கூச்சலுக்கு நடுவே எதிர்ப்பு கூச்சலும் அவ்வப்போது தலை காட்டியது.

எதிர்ப்பு கூச்சலுக்கு போலீஸார் துணைநின்றார்கள்.

ஒரு மஞ்சள் நிற பழைய கட்டிடத்தில் மாடி ஜன்னல் திரைக்குப் பின்னே நின்று, எதிர்ப்பு கோஷம் போடுகிறவர்கள் யார் யார் என்று சின்னவர் பைனாகுலரில் பார்த்துக் கொண்டிருந்தார்.

''எவ்ளோ இருக்கு.''

''பத்து லட்சம். எண்ணிக்கோங்க.''

''வேண்டாம். அப்படியே வெச்சிட்டு, சீக்கிரம் போயிடுங்க. உங்க அஞ்சுலட்சம் ஒண்ணு எங்கிட்ட இருக்கு. இதோட பதினைஞ்சு லட்சம். இதை மறக்கவே மாட்டேன். இப்போ, இந்த இடத்தை விட்டு காலி பண்ணிடுங்க.''



அவர்கள் வந்த வேகத்திலேயே திரும்பினார்கள்.

ஊர் அமளிப்பட்டது. வீட்டு வாசலில் நாலைந்து பேர் குடித்துவிட்டு, அவருக்கு துணை போகிறவரை அடித்துக் கொல்வோம் என்றார்கள். அந்தத் தெரு ஜனங்கள் அவர்களை அதட்டி அனுப்பினார்கள்.

உத்திரமேரூரிலிருந்து ரங்கசாமி மனைவியின் அண்ணன் வீட்டுக்கு வந்தான்.

''பெண்கள் படிப்பை முடித்து விட்டார்கள். திருமணத்திற்கு தயாராய் இருக்கிறார்கள்'' என்றார் தேதி பார்க்க சொன்னார்.

''பொண்ணுங்கள கூட்டிக்கிட்டு வாடா.'' கிழவர் சொல்ல, மறுவாரம் பெண்களோடு வந்தார்.

கிழவர் பெண்களின் முன் கைகளை தடவித்தடவி சந்தோஷப்பட்டார். அவர்கள் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டார்,

சுகவனத்தையும் மணிவண்ணனையும் அவரவர்களுக்கு பார்த்திருந்த பெண்களிடம் நிற்கச் சொன்னார்.

எழுந்து நின்று கைகளை உயர்த்தி ஆசீர்வதித்தார்.

''அப்பா...கல்யாணம் நடக்கணும்பா. ரங்கசாமி பதறிப் பேசிய போது,

''நடக்கட்டும்டா. நடக்கும்.'' என்றபடி உட்கார்ந்து கொண்டார்.

மயிலாப்பூர் ஜோஸியரை அழைத்து நாள் பார்க்கச் சொன்னார். அவர் குறித்த நாளை தானும் புடம் போட்டார்.

திருமணத்திற்கு அறுபது நாளுக்குள் அடிக்கோடிட்ட தேதியை ரங்கசாமி அண்ணனிடம் காட்டினார்.

''ஏம்பா அவசரப்படுறீங்க. அண்ணன் கண்களில் நீர் தளும்பியது.''

''இத்தினி நாள் எங்கிட்டப் பழகி அழுவறத்துக்குத் தான் கத்துகிட்டியா.''

''நான் அழுவலேப்பா.''

''கண்ணைத் தொடறா. இன்னிலேருந்து தினம் படையல் போடு. காப்பு கட்டிக்கோ. திண்ணைல படு. விரதமிரு. வீட்ல மாமிசம் ஆக்க வேண்டாம். யாரும் வெளியவும் சாப்பிட வேண்டாம். பகல் பொழுதுல எங்கியும் வெளியே போகாதே.''

தைமாதம், வளர்பிறை சுவாதி நட்சத்திரம் காலை ஏழு மணிக்கு தூங்கிக் கொண்டிருந்த கிழவர் எழுந்து உட்கார்ந்தார். எழுந்து பின்பக்கம் போய் வந்தார்.

பூஜையறைக்குப் போய் அங்கு சுவாமிக்குப் போட்டிருந்த துளசியை சிறிது சாப்பிட்டுவிட்டு, காது மடலில் சொருகிக் கொண்டார்.

''சுகவனம் கிளம்பிட்டானா.''

''இல்ல டிபன் சாப்பிடுறான்.''

''அவனை வந்து பாக்கச் சொல்லு.''

ரங்கசாமியின் மனைவி பதறியடித்துக் கொண்டு உள்ளே ஓடினாள்.

கிழவர் உட்கார்ந்தது போல் சரிந்து விழுந்தார்.

தோட்டத்தில் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்த சுகவனம் பாய்ந்து வந்தான். எடுத்து மடியில் போட்டுக் கொண்டான்.

கிழவி சுவர் பிடித்து ஹாலுக்கு வந்தாள். கால் மாட்டில் உட்கார்ந்து, மெல்ல புறங்கால்களை வருடிவிட்டாள்.



ரங்கசாமியும், அண்ணனும் எதிர் பில்டிங்கிலிருந்து ஓடி வந்தார்கள்.

''என்னப்பா பண்ணுது.''

''இன்னும் இருபத்திநாலு மணிநேரம் உசுரோட இருப்பேன்டா. என் உசுரு வேற உடம்பு தேடுது. உல சுத்துல எது நம்ம இடம் அப்படின்னு உலாத்துது.

இங்கு இருந்துகிட்டே, இங்கு இல்லாம இருக்கமுடியும். பெருசா கத்தி கலாட்டா பண்ணாத, சும்மா கூடவே இரு.

உத்திரமேரூருக்கு டெலிபோன் போடு. பொண்ணுங்களை வர வை. யாரும் எங்கியும் போகாத கூடவே இருங்க.

நீ ஏண்டி காலாண்ட உக்காந்து அழுவுறே. போய் படையல்போடு. நிறையபேர் வருவாங்க. அலட்டலா அதிகம் சத்தம் போடாதே. அபசகுனமா பேசாதே. ரொம்ப மரியாதையா நடக்கணும்.

நாளைக்கு ஒரு அஞ்சுநிமிஷம் பவழமல்லி செடியாண்ட இருந்துட்டு, அப்புறம் போகவேண்டிய இடத்துக்கு போயிடுவேன்.''

''எல்லாம் கெடக்க என்னைவிட்டுட்டுப்போறியே...'' கிழவி அழுதாள்.

''வந்து கூட்டிட்டுப் போவேண்டி. உன்னை விட்டுட்டு என்னால இருக்க முடியுமா. எல்லாருக்கும் வணக்கம். ராமராமா...ராமராமா...ராமராமா...''

அவைதான் கிழவர் பேசிய கடைசி வார்த்தைகள்.

அந்த உடம்பில் உயிர் இருந்தது. ஆனால் அந்த முகத்தில் சந்தோஷமும் இல்லை. துக்கமும் இல்லை. சலனமே இல்லாத ஒரு நிம்மதி கிழவரிடம் இருந்தது.

அன்று படையலிட்டு வீட்டில் அனைவரும் கற்பூரம் ஏற்றி ஆயுதங்களை வழிபட்டார்கள். வீடு முழுவதும் தூபப்புகை போட்டார்கள்.

பவழமல்லிக்கு கீழே குமுட்டி அடுப்பு வைத்து, இடைவிடாது அண்ணி சாம்பிராணி போட்டுக் கொண்டிருந்தாள்.

மாலையில் அண்ணன் நாலாயிர திவ்ய பிரபந்தமும், திருவாசகமும் உரக்க படித்தார்.

ரங்கசாமியை ஹாலில் படுக்கச் சொல்லிவிட்டு, அம்மாவை திண்ணைக்குகீழே வழியில் படுக்கச் சொல்லிவிட்டு, தான் மட்டும் அப்பாவிற்கு அருகே கட்டிக்கொண்டு படுத்தார்.

நாலு மணிக்கு யாரோ உலுக்கி எழுப்ப திடுக்கிட்டு எழுந்தார்.

கிழவரின் நெஞ்சு சீராய் துடித்துக் கொண்டிருந்தது.

"போய் குளிச்சுட்டு வாடா" அப்பா சொல்லுவது போல் இருந்தது.

புழக்கடை கிணற்றில் தண்ணீர் இறைத்து குளித்துவிட்டு, தலைதுவட்டி சலவை உடுத்தி, நெற்றிக்கு இட்டு அப்பாவின் அருகே அமர்ந்து கொண்டார்.

'ஓம் நமோ நாராயணாய நமஹ' இடைவிடாது சொல்லத் துவங்கினார்.

விடிகாலை ஆறுமணி. அப்பாவின் உடம்பு தூக்கிப் போட்டது.

அண்ணன் ரங்கசாமியை எழுப்ப எல்லோரும் சூழ்ந்து கொண்டார்கள்.

சுகவனம் ஸ்டெத் வைத்து பார்த்துக் கொண்டே இருக்க, ஹிருதயம் மெல்ல மெல்ல அடங்கியது.



கண் பளிச்சென்று விழித்தது. நிலை குத்தி நின்றது. கண் வழியே பிராணன் போய்விட்டது.

அண்ணி வாய் விட்டு அலறினாள். பவழமல்லி செடிக்கு அருகே போய், குமுட்டி அடுப்பை விசிறி, பிடிப்பிடியாக சாம்பிராணி எடுத்துப் போட்டாள்.

பவழமல்லி மரத்தில் சொருகி வைத்தாற்போல் புகையாய், வாலிபமாய் ஒரு உருவம் நின்றிருந்தது.

மரம் லேசாக ஆடியது அத்தனைப் பூக்களும் தரையில் விழுந்தன.

'ஐயா... ஐயா... ஐயா...' என்று அந்த உருவத்தைப் பார்த்து நெஞ்சில் அடித்துக் கொண்டு அண்ணி அழுதாள்.

மணிவண்ணனும் ரங்கசாமியும் வாசலுக்குப்போய் கை கூப்பினார்கள்.

புகை மேலே எழுந்தது. கலைந்தது. 'டம்' என்று ஒரு வெறுமை அந்த வீட்டை ஒருநிமிடம் சூழ்ந்து கொண்டது.

நூற்றுக் கணக்கில் வீட்டைச்சுற்றி யார்யாரோ இருக்கிறார்கள் என்கிற உணர்வு வந்தது. சரேலென்று ஒரு வெளிச்சம் வர அந்த இடம் சாதாரணமாகியது.

அண்ணன் குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தார்.

தெரு ஜனம் வீட்டிற்குள் ஓடிவந்தது.

சின்னவருக்கு டெலிபோனில் தகவல் சொல்ல. அவர் ஊரில் இல்லை என்று மறு தகவல் வந்தது.

நேர்த்தியான பூப்பல்லக்கில் கிழவர் அன்று பிற்பகலிலேயே பயணப்பட்டு விட்டார்.

ஒரு சகாப்தம் அமைதியாய் முடிந்தது. ஒரு நிறைவான வாழ்க்கை இனிதே முடிந்தது.

உத்திரமேரூர் பெண்களும், ஆண்களும் பெரியவர் செத்த ஒருமணி நேரத்தில் உள்ளே நுழைந்து எல்லா வேலைகளையும் முன் வந்து செய்தார்கள்.

அந்தப் பெண்களின் அண்ணன் நவநீதக்கிருஷ்ணன் தாரைதப்பட்டை எக்காளத்திலிருந்து, நடைபாவாடை பெண்கள் வரை, அதிர் வேட்டிலிருந்து ஆறுகோழி பலி வரை வெகு துரிதமாய் ஏற்பாடு செய்தான் அவனுக்குப் பின்னே மிகப் பெரிய பட்டாளம் இருப்பதை அந்த வீடு புரிந்து கொண்டது.

# 4

''நான் என்னங்க செய்துட்டேன். எனக்குப் போய் மாலை மரியாதையெல்லாம்,''

கிழவர் இறந்து ஒரு மாதம் கழித்து, அதாவது துக்கச் சுவடு மொத்தமும் அடங்க மனம் குளிர்ந்து வந்து துக்கம் கேட்டவரை, மீண்டும் அழைத்து, பூந்தி லட்டு, பாயசம் கிழவருக்குப் பிடித்த வெள்ளை அப்பம். நெய் கத்தரிக்காய் பிறட்டல். அப்பளம் உருளைக்கிழங்கு வறுவல் போன்ற வைகளோடு விருந்து பரிமாறி, உபசரித்தார்கள்.

சாப்பிட்டு முடித்தபிறகு தனித்தனியே கும்பிட்டு வேட்டி மேல்துண்டு கொடுத்தார்கள். கைகளைப் பிடித்து வணக்கம் சொன்னார்கள்.

''நாங்க துக்கப்பட்ட போது, நெஞ்சு கழண்டு கிடந்த போது, ஓடி வந்து நின்னீங்களேய்யா. கூப்பிடாம வந்து உதவி செஞ்சீங்களே ஐயா... அந்த குணத்துக்கு நாங்க எவ்வளவோ செய்யணும். எங்களால முடிஞ்சது இந்த விருந்து, வேட்டி மேல் துண்டு, பெரிய மனசு பண்ணி ஏத்துக்கணும்.'' சொல்லாமல் சொல்வார்கள்,



ஆனால், நவநீதகிருஷ்ணனை கூப்பிட்டு, எல்லோரும் வாய் நிறைய பேசினார்கள்.

''மாமா இல்லே. செத்துட்டார்னு தெரியறதுக்கு எனக்கு ஒரு மணி நேரம் ஆச்சு. என்னென்னவோ யோசனை. அவரு மட்டும் தனியா போறாரே...நாமும் கூடப் போயிடலாமான்னு யோசனை.'' அண்ணி பேசும் போதே விம்மினாள்.

''எனக்கு அப்பா அம்மா கிடையாது பதினாறுவயசுல கல்யாணம் பண்ணி, இந்த வீட்ல நுழைஞ்சபோது, 'இந்த வீட்ல யாரைக் கண்டும் பயப்படாதே. எது வேணாலும் கேளு. எங்கிட்டேயும், எம் பொண்டாட்டிகிட்டேயும் என்ன வேணாலும் பேசு.எனக்கு மகள், மருமகள் எல்லாம் ஒண்ணுதான்.. அப்படின்னாரு.

அது நினைச்சு நினைச்சு துக்கம் பொங்கிச்சு. ஐயோ. மேற்கொண்டு காரியம் ஆகணுமே... எல்லாரும் அல மலந்து கிடக்காங்களே...ன்னு திரும்பினேன். நீங்க புயல் மாதிரி உள்ளே நுழைஞ்சீங்க.

இந்த நேரத்துல சம்பந்தி வீட்டுக்காரங்கதான் வந்து செய்யணும். நீங்க சம்பந்தி ஆவறதுக்கு முன்னாடியே செய்தீங்க.

நீங்க மட்டும் வராத, வீட்டுப் பொம்பளைங்களும், வேலையாட்களுமா இருவது பேர் வந்தீங்களே...அந்த புத்திக்குத்தான் பாராட்டணும்.

சொன்ன நேரத்துல தூக்கி, மொத்தமா கழுவிவிட்டு எல்லாத்துக்கும் சுத்தமா செலவுக் கணக்கு எழுதி... எப்படி பாராட்டுறதேன்னு தெரியல.'' அண்ணி தொடர்ந்து பேசினாள்.

"எல்லாம் ஒரு சுயநலம்தான்." நவநீதகிருஷ்ணன் வேகமாய் கை ஆட்டி மறுத்தான்.

"பெத்தவங்க ரங்கசாமி பொண்டாட்டியா இருந்தாலும், நீங்கதான் இங்கே மாமியாருன்னு எனக்குத் தெரியும். நான் நினைச்ச மாதிரியான வாகனம் எனக்கு கிடைக்கலை. இல்லேன்னா, இன்னும் இருபது பேர் வந்திருப்பாங்க. வராத வரைக்கும் நல்லதுக்குத்தான். வந்தவங்களுக்கு சோறு போட்டே திணறியிருப்போம். நான் நாட்டுப்புறத்தான். குரல் கொஞ்சம் பெருசு. சொல் கொஞ்சம் பதட்டம், உத்திரமேரூர்ல எல்லாரும் அப்படித் தான். செய்த வேலையில தப்பு இருந்தா தயவு செய்து மன்னிச்சுக்கணும்."

"ஒண்ணு சொல்றேன் நவநீதம். எங்க அப்பா ஒரு நல்ல ஆத்மா. அவருக்கு ஒரு சின்ன உதவி செய்தாக்கூட, பதிலுக்கு பல நூறு செய்யணும்னு ஆசைப்படுவாரு பல்வேறு விதமா உதவி செய்வாரு. அவரை ரொம்ப அழகா கரையேத்திருக்கீங்க. இந்த புண்ணியத்துக்கு பெரிய பலன் நிச்சயம் கிடைக்கும்."

அவனுக்கு வேட்டியை கையில கொடுத்து, மேல் துண்டை உதறி போர்த்தினார்கள். கட்டை அடுக்கிய கைக்கு ஒரு பவுன் மோதிரம் போட்டார்கள், அவன் வெட்கபட்டு வாங்கிக் கொண்டான்.

"இப்ப எதுனா நல்லது பேசணுங்க." கை கூப்பி கேட்டான்.

"கல்யாணத்துக்கு சத்திரம் பாத்துட்டீங்களா. புடவை துணிமணி எங்கே எடுக்கப் போறீங்க. யார் யாருக்கு எவ்வளவு நகை என்ன சாப்பாடு. எத்தினி பேர் கூப்பிடலாம். உத்திரமேரூர்ல வைச்சு, ஒவ்வொண்ணுத் துக்கும் வெளியே ஓடறதை விட, இங்கனயே கல்யாணம் முடிச்சா நல்லதா இல்லையா."



"ஒரு வாரத்துக்கு கல்யாணச் சத்திரம் பக்கத்துல ஒரு வீடு, வாடகைக்கு பிடிச்சுத் தர்றேன். உங்க ஆளுங்கள அங்கே கூட்டிட்டு வந்து உக்கார வையுங்க." அவர்கள் தொடர்ந்து பேசினார்கள்.

கல்யாணத்திற்கு பத்து நாள் முன்பு ஒரு பழைய பங்களாவை சுத்தம் செய்து, வெள்ளையடித்து உத்திரமேரூர் ஆட்கள் தங்கினார்கள். தோட்டத்தில் கூரை போட்டு பெரிய ஜமுக்காளம் விரித்தார்கள், காலையில் இட்லி, மத்தியானம் கதம்பசாதம், மாலையில் காஃபி, கைமுறுக்கு, இரவில் பரோட்டா குருமா என்று வேலை செய்பவர்களுக்கு விருந்து தரப்பட்டது.

பம்பாய்க்கு விமானத்தில் போய் நூற்று நாப்பது பேருக்கு பத்திரிகை வைத்து விட்டு வந்தார்கள்.

உத்திரமேரூரிலிருந்து மூன்று பஸ்கள் நிறைய ஆட்கள் வருமென்று எதிர்பார்க்கப்பட்டது.

சின்னவருக்காக ஒரு மணி நேரம் காத்திருந்து வந்த வுடன் பத்திரிகை கொடுத்தார்கள்.

சின்னவர் முகம் கவலையாலும், களைப்பாலும் சோர்ந்து கிடந்தது.

"நிச்சயம் வருவேன். எப்போ வருவேன்னு சொல்ல முடியாது. வர்றதுக்கு முன்னாடி தகவல் அனுப்பறேன். இப்போ விசாரிக்கலாமா... தெரியலை உங்க அப்பா தவறின செய்தி கேட்டதும் நான் அழுதேன். உள்ளே போய், ஷவரைத் திறந்து விட்டுட்டு அழுதேன், இந்த கல்யாணம் நல்லா நடக்கும். அவரு நடத்தி வைப்பாரு.

உனக்கு காசு தேவைப்படுதா ரங்கசாமி. எப்பவோ வாங்கின காசு. நான் இப்பவாவது கொடுக்கணும். நீ அவசியம்னு சொல்லு. நான் எதையாவது அடமானம் வைச்சுக் கொடுக்கிறேன்."

அட... நீங்க ஒண்ணு. நான் பத்திரிகை வைக்க தாங்க வந்தேன்.''

''காசு கேக்க வரலியா...''

''இல்லீங்க. நான் மறந்துட்டேன்.''

''இல்ல... நான் மறக்கல. மறக்கவே மாட்டேன்.''

''கல்யாணத் தேசிய மறக்காத வந்துட்டிங்கன்னா போறும். அது எங்களுக்கு பெரிய மரியாதை.''

''இந்த நவநீதகிருஷ்ணன் எங்க கட்சி ஆளாச்சே... உங்களுக்கு ரொம்ப பழக்கமா''

''எங்க மச்சினன் பையன்.''

''நான் இவனைப்பத்தி பலதும் கேள்விப்பட்டிருக்கேன்.'' சின்னவர் பெயரை சுண்டிச் சுண்டி பேசினார்.

''ஆமாங்க...சாராயம் காய்ச்சுறாரு.''

''ஏதோ பண்ணிட்டுப் போறான். பொண்ணுங்க எப்படி.''

''ரொம்ப நல்ல மாதிரியான பொண்ணுங்க. அப்பா பாத்து சம்மதிச்சுட்டுப் போனாரு.''

''அப்போ சரியாத்தான் இருக்கும்.''

பத்திரிகை கொடுத்த இரண்டாம் நாள் சின்னவர் தனியே பிரிந்தார், புது வியூகம் ஒன்று அமைத்தார்.

அவர் பக்கம் தொண்டர்கள் குவித்தார்கள்.

நவநிதகிருஷ்ணன் ஓடி வந்து, 'அவரை கல்யாணத்துக்கு கூப்பிட்டிருக்கீங்களா' என்று கேட்டான்.

ஆமாம் 'என்ற போது' வேணாங்க. வம்பாயிடும்' என்று கத்தினான்.



''எங்களுக்கு அரசியல் கிடையாது. அரசியல் தெரியாது. அவரு எங்க குடும்பத்துல ஒருத்தர். நிச்சயம் கல்யாணத்துக்கு வருவாரு.''

''இந்த நேரத்துல அவரு வந்தா வம்பாயிடுங்க. எனக்கு கெட்ட பேர் வரும்.''

''அப்போ, நீங்க வராதீங்க.''

நவநீதகிருஷ்ணன் ரங்கசாமியின் இந்தப்பேச்சுக்கு உஷ்ணமானான்.

''என்னை யாருன்னு தெரியாத பேசறீங்க.''

''நீ யாருன்னு ரொம்ப நல்லாத்தெரியும். ஆனா. நாங்க யாருன்னு நீ புரிஞ்சுக்கலை. நாங்க ரொம்ப அமைதியா இருக்கோம்,எதிர்க்கறதுன்னுஎழுந்துட்டோம் இருக்கிற இடம் தெரியாத அழிச்சிட்டுதான் உக்காருவோம்.''

''என்னை அழிச்சிருவியா...என்னை அழிச்சிருவியா... என்று சட்டையை மடக்கிக் கொண்டு வர,முத்து மஞ்சள் தடவிய கல்யாண உலக்கையை எடுத்துக்கொண்டு குறுக்கே நின்றான்.

''என்னை கொன்னுட்டுதான், எங்க முதலாளியை நீ தொடமுடியும்'' என்று கத்தினான்.

ரங்கசாமியின் அண்ணன் அவனிடமிருந்து உலக்கையை பிடுங்கி வைத்தார். நவநீதகிருஷ்ணனை பின்பக்கம் தள்ளிக் கொண்டு போனார்.

''நீ எந்தப் பக்கம்.''

''சின்னவர் பக்கம் இல்லை.''

''அப்ப, அவர் வர்றபோது நீ வெளியே போயிடு.''

''போனாலும் எனக்கு கெட்டபேர் வரும்ங்க.''

"போகாதேன்றேன். சின்னவர் பக்கம் சேந்துடுங்கிறேன். எங்க ஐயா அவரைப்பத்தி 'ஆகா...ஓகோன்னு சொல்லிருக்காரு. அவருதான் ராஜான்னு சொல்லிருக்காரு அவருதான் முதல்வர்னு சொல்லிருக்காரு. இது ஒரு நல்ல சந்தர்ப்பம். யாராவது கேட்டா, 'நான் கூப்பிட்டு வந்தார்னு சொல்லிடு. அதே சமயம் கிட்ட வந்து, சின்னவரை தொட்டு கும்பிடு."

"அவரு ஆட்சியில இல்லியே...அவரைத் தொட்டா ஆட்சியில இருக்கிறவங்க தொந்தரவு பண்ணுவாங்களே. சாராயம் விக்கிறதை நாசம் பண்ணிடுவாங்களே..."

"சாராயத்தை நிறுத்து."

"சாப்பாட்டுக்கு வேறவழி இல்லீங்களே."

"நான் பாம்பே கனெக்ஷனை ஏற்படுத்திதரேன். நிதானமா பேசு. உண்மையா இரு. படபடன்னு முன்னுக்கு வந்துருவே..."

"கட்சி மாறச்சொல்றீங்களா.'.

"ஆமாம். அதனால உன் வாழ்க்கையே மாறும்."

"என்னை !உத்திரமேரூர்ல அடிச்சிக் கொன்னுடுவாங்க."

"போகாதே. மெட்ராஸ்லேயே இருந்துடு. இங்கியும் தொந்தரவுன்னா பாம்பே போயிடு. போய் ஹிந்தி கத்துக்கோ. வியாபாரிக்கு எல்லாமொழியும் தெரியணும். எல்லா மனுஷாளும் வேணும்."

முகூர்த்தம் முடிந்து, விருந்து முடிந்து சத்திரம் அலுப்பாக இருந்த வேளை, சின்னவர் காரில் வந்து இறங்க, ஜீப்பிலும் வேனிலும் அவரைத் தொடர்ந்து ஆட்கள் வந்தார்கள்.



தனியே உட்கார்ந்து மொய் கணக்கை பார்த்துக் கொண்டிருந்த நவநீதகிருஷ்ணன் துள்ளி எழுந்தான். வேட்டி நழுவ, வாங்க வாங்க' என்று கைகூப்பினான். நழுவாதிருக்க இடுப்பில் அங்கவஸ்திரம் கட்டிக் கொண்டான். இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டதாலேயே, அவன் விழுந்து காலில் கும்பிட்டான்.

கேமிராக்கள் மின்னின.

சின்னவர் நவநீதகிருஷ்ணனை அணைத்துக்கொண்டு போஸ் கொடுத்தார். மறுபடியும் கேமிராக்கள் மின்னின.

பெரிய வெள்ளிக்குடம், பெரிய வெள்ளி தேங்காய், பெரிய வெள்ளி மாவிலைகள் பத்து என்று வெளியே எடுத்து, இரண்டு ஜோடிகளுக்கும் தனித்தனியே இரண்டு வெள்ளிக்கலசங்கள் எடுத்து பரிசளித்தார்.

ஒரு கப் பாயசம் குடித்தார். கொஞ்சம் பூந்தி சாப்பிட்டார். வந்த வேகத்தில் திரும்பினார்.

அன்று மாலையில் அவர் சார்புள்ள பத்திரிகையில் நவநீத கிருஷ்ணனும், அவரும் இருக்கின்ற புகைப்படம் வெளியானது.

உத்திர மேரூரில் நவநீத கிருஷ்ணனுக்கு உதவியாக இருந்த ஆட்கள் உடனே கைது செய்யப்பட்டார்கள். சாராயம், விபச்சாரம், கஞ்சா என்று பல வழக்குகள் போடப் பட்டன.

நவநீத கிருஷ்ணன் லாரி ஏறி பம்பாய்க்கு ஓடிப் போனான்.

'உங்க பேச்சைக் கேட்டு மோசம் போயிட்டேங்க, என்று அழுதான்.

''என் பேச்சு கேட்டவங்க மோசம் போனதே இல்லை. அங்கேயே ஒரு வருஷம் இருங்க. அங்கேருந்து அஹமதாபாத் போங்க. கோதுமை, கடலைப் பருப்பு, கப்படா, பிளாஸ்டிக் எல்லாம் கத்துக்கோங்க. நாங்க செய்ற வியாபாரத்தை உத்துப் பாத்துக்கங்க போறும்.''

அவன் மட்டுமில்லை. அவன் வீட்டு மனிதர்களும் உத்திரமேரூரில் இருக்க முடியவில்லை.

எதிரிகள் இழித்துப் பேசினார்கள்.

நவநீத கிருஷ்ணன் சென்னைக்கு வந்து, சின்னவருக்கு ஆதரவாக அறிக்கை விட்டான். மீண்டும் பம்பாய் போனான். பம்பாயிலும் எதிர்ப்பு வரவே, அகமதாபாத் போனான்.

சுகவனத்திற்கு லண்டனில் மேற்படிப்பு படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. மனைவியோடு விமானம் ஏறினான்.

மணிவண்ணனுக்கு தாமிர உலோகம் பற்றி படிக்க ஜெர்மனியில் வாய்ப்பு கிடைத்தது.

மூன்று மாதத்திற்கு ஒருமுறை வீடுவந்து, பத்து நாட்கள் தங்கிவிட்டு, மறுபடியும் படிக்கப் போனான்.

ஆண்டாள் சூலுற்று சென்னை வந்தாள். அவரது அப்பாவும், அம்மாவும், மற்ற உறவுகளும் உத்திரமேரூரை உதறி அடையாறில் குடியேறினர். ஆண்டாளை அங்கே வரவழைத்தனர். அடுத்தவளும் அதே வீட்டில் சீராடப் போனாள்.

பிள்ளைகள் மேல் நாடும், பெண்டுகள் தாய் வீடும் போனதும் வீடு மறுபடியும் வெறிச்சென்று ஆயிற்று.

ரங்கசாமியின் அண்ணன் இனி, 'வியாபாரத்தில் ஈடுபடுவதில்லை, சட்டை அணிவதில்லை, சிகை மழிப்ப



தில்லை, தான் யார் என்று அறியாமல் சாகப்போவ தில்லை' என்று நான்கு முடிவுகள் எடுத்தார்.

அறைக்குள் கதவு மூடி வெகுநேரம் தனித்திருந்தார்.

அப்பா அண்ணன் உருவத்தில் இருப்பதை ரங்கசாமி கண்டு கொண்டார்.

சுகவனம் லண்டனிலிருந்து சென்னை திரும்பினான். ஆறு மாதம் ஒரு நண்பனின் நர்ஸிங்ஹோமில் காசு வாங்காமல் வேலை செய்தான்.

ஹிருதய வால்வு சிகிச்சை கற்றுக்கொள்ள அமெரிக்கா பயணமானான்.

சின்னவர் பலமானார். தொண்டர்கள் அவர்முன் குவிந்தார்கள். இரண்டு பக்கமும் அறிக்கைகள் பறந்தன.

நவநீத கிருஷ்ணன் உத்திரமேரூர் சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு லாயிட்ஸ் சாலையில் வீடு வாங்கினான். சின்னவரின் பின்னாலேயே அலைந்தான்.

ஆண்டாளுக்கு, பெண் குழந்தையும், மரகதத்திற்கு ஆண் குழந்தையும் பிறந்தன.

சுகவனம் மூன்று வருடபயிற்சியை முடித்துவிட்டு, 'இனி இந்தியாதான்' என்று வந்தான். அவனால் தன் மகளை விட்டுவிட்டு இருக்க முடியவில்லை.

எதிர்பக்க கட்டிடத்தின் இரண்டாவது தளம் முழுவதும் அவனது கிளினிக்காக மாற்றப் பட்டது.

மணிவண்ணன் எலெக்ட்ரானிக் உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்க எண்ணினான். கோயம்புத்தூரே அதற்கு ஏற்ற இடம் என்று தீர்மானம் செய்து, வேறு ஒரு இன்ஜினியரை பாகஸ்தராக சேர்த்து, அங்கே குடியேறினான்.

கல்யாண சுந்தரமய்யரின் மகளும், மருமகனும் இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பினார்கள்.

சுகவனத்திற்கும், மணிவண்ணனிற்கும் பெருந் தொகை கடனாக கொடுக்க முன் வந்தார்கள்.

இன்னும் சில டாக்டர்களோடு சேர்ந்து சுகவனம் மிகப்பெரிய ஆஸ்பத்திரியை கட்டத் துவங்கினான். சின்னவரை அழைத்து அவர் கையால் அடிக்கல் நாட்டினான்.

சின்னவரைச் சுற்றியுள்ள மேகங்கள் விலகி விட்டன. ஆனால், பனித்திரை கிழியவில்லை. எதிர் பக்கத்திலிருந்து அவர் பக்கத்திற்கு ஆட்கள் வந்த வண்ணம் இருந்தார்கள்.

ஒரு நாள் இரவு சின்னவர் ரங்கசாமியையும், சுகவனத்தையும் கூப்பிட்டு அனுப்பினார்.

சுகவனத்திடம் ரத்த அழுத்தம் பரிசோதித்துக் கொண்டார்.

''இதுல பதினைஞ்சு ரூபா இருக்கு.'' மூட்டையை காட்டினார்.

''நான் இப்போதைக்கு அசலை திருப்பித்தர்றேன், வட்டி பின்னால தர்றேன்.''

''நான் ஒண்ணும் கேக்கலையே...''

''பெருசா ஆஸ்பத்திரி கட்டிருக்கே. வாங்கின கடனை இப்போக்கூட கொடுக்கலைன்னா அது மரியாதை இல்லை. உனக்கு காசு தேவைப்படுதுன்னு எனக்குத் தெரியும். மறுக்காத எடுத்துட்டுப்போ. நல்ல காரியம் பண்றே. இந்தக் காசை உபயோகப்படுத்து. எங்க அம்மா பேர்ல எப்பவோ ஒரு சொத்து வாங்கினேன். அதை வித்து வந்த காசு இது ஏதாவது கருவிகள் வாங்கறா மாதிரி



உபயோகப்படுத்து. வெளி நாட்டுல எப்படி ஆஸ்பத்திரி இருக்குமோ, அதே தரத்துல ஆஸ்பத்திரி இருக்கணும். அதே விதத்துல ஆஸ்பத்திரி நடக்கணும். என் ஹார்ட் நல்லா இருக்கா.''

''ரொம்ப நல்லா இருக்கு ஆனா, நீங்க உணர்ச்சி வசப்படாம இருக்கணும். ரத்த அழுத்தம் கொஞ்சம் கூட இருக்கு.''

''அப்படிதான் இருக்கும். உங்க நவநீதகிருஷ்ணன் ஒருத்தன் போதுமே. என் ரத்தக் கொதிப்பை அதிகப் படுத்தறுத்துக்கு.''

''ஏன் அவர் உங்கப்பக்கமேதானே இருக்காரு.''

''ஏண்டா சேத்தோம்னு யோசிக்க வைக்கிறான்.''

''என்ன ஆச்சு.''

''உத்திரமேரூர் ரவுடித்தனத்தை எங்கிட்டே காட்றான். அவன் கைய காலை உடைச்சாஉங்களுக்கு ஒரு வருத்தமும் இல்லியே...''

''இல்லை.'' ரங்கசாமி தெளிவாய் சொன்னான்.

''உனக்கு சுகவனம்.''

''யாரு நவநீதன்.''

''தயவு செய்து உங்க அண்ணாகிட்ட சொல்லிடு. நான் கதையையே முடிச்சிருப்பேன். உங்க அண்ணன் முகத்துக்காக விட்டேன், அண்ணன் பேசறதை நிறுத்திட்டாராமே...உண்மையா.''

''வாரத்துக்கு ரெண்டு நாள் பேசறாரு. சனிக்கிழமை யும் ஞாயிற்றுக்கிழமையும். மத்த நாளெல்லாம் மௌனம் தான்.''

''என்ன சாப்பிடுறாரு.''

''சில நாள் நீராகாரம், சில நாள் பச்சைக்கீரை பழம் சில நாள் ஊறவைச்ச அவல்,மோர். சில நாள் ஒருவேளை ரசஞ்சாதம் ஆனா, நல்லா தெம்பா இருக்காரு. ரொம்ப அமைதியா இருக்காரு தலைமுடி நடுமுதுகு வரைக்கும் வந்திருச்சு. சுகவனம் பொண்டாட்டி ஆண்டாள் தான் தினம் குளிப்பாட்டி,தலை துவட்டி,சாம்பிராணி போட்டு விடுறா, அந்த சாம்பிராணிக்கு நடுவுல கண்ணுமுடி உக்காந்தா, மத்தியானம் தான் கண்ணு திறக்கிறாரு.''

''கடவுளே...எனக்கு இப்படி வாழணும்னு ஆசை ஆனா, நான் எப்படி வாழறேன் பாரு...ரத்தக்கொதிப்பும் தலைவலியுமா இருக்கேன் பாரு.''

''நீங்க ராஜா...தலைவலி இருக்கத்தான் செய்யும்.''

''தன்னை ஜெயிக்கிறவன்தான் ராஜா. மத்தவன் எல்லாம் கூஜா. உங்க அண்ணனுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லு.'' சின்னவர் மானசீகமாய் வணங்கினார்.

நவநீதகிருஷ்ணன் பாத்ரூமில் சறுக்கி விழுந்து உடம் பெல்லாம் பட்டைபட்டையாய் அடிபட்டுக் கொண்டதாக யாரோ சொன்னார்கள்.

முத்து வீட்டிற்கு வந்தான். அண்ணனை விழுந்து வணங்கினான்.

''மொத்தம் மூணு கம்பு முறிஞ்சி போச்சு. கை ஓயுற மட்டும் அடிச்சாரு.''

''யாரு யாரை அடிச்சது.'' அண்ணி கேட்டாள்.

அவள் கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.

ஆஸ்பத்திரி கட்டிடம் வளர்ந்தது.

தேர்தல் வந்தது.



''எல்லோரும் ஆச்சரியப்படும்படி நவநீதகிருஷ்ண னுக்கு உத்திரமேரூரில் டிக்கெட் கிடைத்தது.

ரங்கசாமி சின்னவரை போய் பார்த்து, 'காசு வேண்டுமா' என்று கேட்டார்.

தன்னைச்சுற்றி இருந்த கூட்டத்தையெல்லாம் விலக்கி ரங்கசாமியோடும்,சுகவனத்தோடும் டிபன் சாப்பிட்டார்.

''இனிமே உன்காசு எதுக்கு ரங்கசாமி. காசு கொண்டு வந்து கொட்ட யார் யாரோ காத்திருக்காங்க. உனக்கு எதுனா காசு வேணுமா, சொல்லு, தர்றேன்.''

''வேண்டாம். இருக்கு.''

''நான் வட்டி தரணும். ஞாபகம் இருக்கு. தேர்தல் முடியட்டுமேன்னு பாக்கறேன்.''

''ஆஸ்பத்திரி இப்பமே ரெடி. அடிக்கல் நாட்டின நீங்களே திறக்கவும் வரணும்.''

''ரெண்டு மாசம் பொறுத்துக்கோ. முதலமைச்சரா வர்றேன். அதுவரைக்கும் சின்ன லெவல்ல நடத்திகிட்டு இரு.''

''இல்லை. ரெண்டு மாச இடைவெளியில ஆஸ்பத்திரியை பக்காவா ரெடி பண்ணிடுறேன்.''

ஹிருதயம், சிறுநீரகம், விபத்து என்று மூன்று தளங் கள் ஒதுக்கப்பட்டு, நாலாவது தளம் ஜெனரல் வார்டாக ஒதுக்கப் பட்டது.

அமெரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கு மருத்துவ மனை பற்றி பலவண்ண நிறத்தில் புகைப் படங்களோடு ஒரு அறிமுகப் புத்தகம் அனுப்பப் பட்டது.

டாக்டர்கள் பலர் முதலீடு செய்ய இந்தியாவின் அமைதியான பிரதேசமான தமிழ் நாட்டில் பல இந்தியர்களும் முதலீடு செய்தார்கள்.

ஹிருதய அறுவை சிகிச்சைக்கு பல அற்புதமான கருவிகள் வந்திறங்கின. அதன் நவீனம் பற்றி எல்லா பத்திரிகைகளும் பேசின,

பிரச்சாரத்திற்கு வீட்டுப் பக்கம் வரும்போது, சின்னவர் விடிகாலை மூன்றுமணிக்கு வீட்டுக்குள் வந்தார். காரை தெருமுனையிலேயே நிறுத்திவிட்டு, சில நண்பர்களோடு தெருவில் நடந்து வந்தார்.

நவநீத கிருஷ்ணனை மட்டும் உள்ளே அழைத்துக் கொண்டு போனார்.

தர்ப்பைப்பாயில் சலனமில்லாமல் அமர்ந்திருக்கிற அண்ணனைப் பார்த்து கைகூப்பினார். கண்ணீர் விட்டார். உற்று முகம் பார்த்தார். முன்பு பார்த்த அண்ணனை நினைவு கூர்ந்தார்.

''இது எப்படி.'' ஆச்சர்யத்தோடு வினவினார்.

அண்ணன் மேலே கைகாட்டி சிரிக்க, சின்னவரும் சிரித்தார்.

''நான் ஜெயிக்கணும்.'' சின்னவர் அண்ணனிடம் கேட்டார்.

''எதை ஜெயிக்கணும்.'' அண்ணன் கேட்டார்.

''தேர்தல்ல ஜெயிக்கணும்.'' நவநீத கிருஷ்ணன் அவசரமாய் பதில் சொன்னான்.

சின்னவர் அவனை சீறி முறைத்தார். அவன் பயந்து பின் வாங்கினான்.

அண்ணன் மெல்ல சிரித்தார்.



வாசியும் மூசியும் பேசி வகையினால்

பேசி இருந்து பிதற்றிப் பயன் இல்லை

ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்

ஈசன் இருந்த இடம்எளி தாகுமே.

''ஆசை தப்பு. அன்பு தப்பா.'' சின்னவர் கேட்க, அண்ணன் சிரித்துவிட்டு சும்மா இருந்தார்.

சின்னவர் கும்பிட்டுவிட்டு வெளியேறினார்.

''ரங்கசாமி. நான் சொல்லல...அவருதான் ராஜா. அந்த நீள தலைமுடியும், தாடியும் தாமரைப்பூ மாதிரி முகமும், கடவுளே...அவருதான் ராஜா. உங்க அப்பாவுடைய ஆசீர்வாதம், அப்படியே உங்க அண்ணன் மேலே இறங்கியிருக்கு. உங்களையெல்லாம் தெரியும்ங்கிறதே கர்வமா, சந்தோஷமா இருக்கு. இந்த வீட்டுக்கு எதுனா நான் செய்தாகணும். உங்களுக்கு எதுனா நான் பண்ணியாகணும்.''

அதிகம் பதறாத சின்னவர் குரலில் அன்று அதிகம் பதட்டமிருந்தது.

சின்னவர் தன் படைகளோடு வெளியேறினார்.

அவர் கட்சி அபாரமாய் தேர்தலில் ஜெயித்தது. அட்டகாசமாய் ஆட்சியைப் பிடித்தது.

சின்னவர் முதல்வரானார். மந்திரி சபை அமைத்தார். கடைசி ஆளாய் கைத்தறி இலாகாவாய் நவநீதகிருஷ்ணன் பதவியேற்றான்.

உத்தரமேரூரில் அவனை முரசும், எக்காளமும், பேரிகையுமாய் வரவேற்றார்கள். தேரில் பவனி வரச் செய்தார்கள். 'முத்தரையனே, எங்கள் தளபதியே' என்று பேனர்கள் எழுதினார்கள். வாளும் கேடயமும் பரிசளித்தார்கள்.

''நம்ம வீட்ல நம்ம ஜாதி ஜனங்களோட கத்தி இருக்கு தாமே...தங்கச்சி சொல்லுச்சு.''

''ஆமாம்.''

''அதை எல்லாத்தையும் எங்கிட்டே கொடுத்தா, நான் கண்ணாடி கேஸ்ல போட்டு வைச்சுக்குவேன். ஆயிரம் வருஷத்து வாளாமே...''

''ஆமாம். ஆனா, தர்றதாயில்லே.''

''நாம அரசாண்ட பரம்பரைன்னு வெளியே தெரிய வேணாமா.''

''வெளியே தெரிஞ்சு என்ன...''

''மறுபடி அரசாள வந்துட்டோமே... நான் அமைச்ச ராயிடலை... இப்போ அமைச்சர்தானே ராஜா. தலைவர் சக்கரவர்த்தி. நாங்கள்ளாம் குறுநில மன்னர்கள். அந்த கத்தியெல்லாம் எனக்கு வேணுமே...''

''இப்படி கேட்டேனு தெரிஞ்சாக்கூட அண்ணன் கோபப்படுவாரு—பேசாத போயிடு.''

''அண்ணன்கிட்டே ஏதாவது சத்தி இருக்குதா.''

''நவநீதகிருஷ்ணன். இது சரியில்லை, தொந்தரவு பண்றேன்னு தலைவர்கிட்ட சொல்லிடுவேன்.

''ஐயோ அண்ணா... நான் வரலை. எனக்கு கத்தியும் வேணாம் கபடாவும் வேணாம். வேற எங்கனா பழசு வாங்கி, எங்க தாத்தாவுக்கு தாத்தா கத்தின்னு டுப்பு விட்டுக்கறேன். இதெல்லாம் போய் தலைவர்கிட்ட சொல்லாதீங்க, என்னால அடிதாங்க முடியாது. ''கிட்டத் தட்ட அழுகைக் குரலில் பேசினான். வீட்டை விட்டு ஓடினான்.

முத்து ஒரு நாள் காரில் வந்து இறங்கினான். அண்ணனை வணங்கினான்.



''தலைவர் எனக்கு காசு கொடுத்திருக்காரு. மகாபலி புரம் ரோடுல நிலம் கொடுத்திருக்காரு. நான் நீச்சல் குளத்தோட ஹோட்டல் கட்டப்போறேன். அந்த பொம்பளையோடதான் இன்னமும் குடித்தனம் பண்றேன் தலைவர் கல்யாணம் பண்ணிக்கோங்கிறாரு. உங்கள ஒரு வார்த்தை கேட்டுட்டு செய்யலாம்'னு இருக்கேன்.

அண்ணன் அவன் தலையில் கை வைத்து ஆசீர்வதித் தார்.

பதினாறு ஏக்கர் நிலப்பரப்பில் மிக அற்புதமான ஹோட்டல் ஒன்றை தனித்தனி குடில்களாக, நிழல்தரும் மரங்களோடு முத்து உருவாக்கினான்,

காம்பவுண்டு சுவர் முழுவதும் சைக்கிள் ரிக்ஷா டிசைன் பதித்தான்.

'முன்னேற முடியும் தம்பி' என்று வாரப் பத்திரிகை யில் அற்புதமான தொடர் எழுதினான்.

செயல்பட்டு ஒரு வருடத்திற்கு பிறகு ஆஸ்பத்திரியின் ஐந்தாவது தளத்தையும் சின்னவர் திறந்து வைத்தார். சுகவனத்தை பாராட்டி கையில் தங்கச்சங்கிலி அணிவித் தார் 'நம்மிடையே வாழும் ஞானி' என்று அண்ணனை போற்றினார்.

பத்திரிகைகள் பேட்டிக்கு வீட்டுக்கு வந்தன. அண்ணன் யாரையும் பார்க்கவேயில்லை.

வருடங்கள் ஓடின.

சுகவனம் இந்தியாவின் தலை சிறந்த டாக்டர்களுள் ஒருவனாக மாறினான்.

மணிவண்ணனின் எலெக்ட்ரானிக் கருவிகள் வெளி நாடு போயின.

சுகவனத்திற்கு இரண்டு பெண் குழந்தைகள் தவிர இரண்டு ஆண் குழந்தைகளும், மணிவண்ணனுக்கு அந்த ஆண்குழந்தையைத் தவிர இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தன.

''பெரியப்பா இவங்க எதிர்காலம் எப்படி இருக்கும்.'' அண்ணன் பேசும் நாளில் சுகவனம் கேட்டான்.

''சாதாரணமா இருக்கும்.''

''ஏன் பெரியப்பா.''

''உன்னோட அரச பரம்பரை முடியுது.''

''இவங்க கஷ்டப்படுவாங்களா.''

''அப்படி அர்த்தமில்லை. படிப்பாளியா இருப்பாங்க. ஆர்ப்பாட்டம் இல்லாத, அரசியல் கலக்காத இருப்பாங்க வெளிநாடு போய் அங்கே தங்கிடுவாங்க, இதுங்க பேர் அங்கே பரவிடும்.''

''அப்போ கத்தி... படையல்''

''நினனுபோகும், கத்தி திருடு போகும்.''

''எதுனா தப்பு பண்ணிட்டோமா.'' மணிவண்ணன் கவலையோடு கேட்டான்.

''ஞான மார்க்கத்துல திரும்பிட்டோம். மூணு தலை முறையா பெண் போகத்தை குறைச்சிட்டோம். அறிவு விருத்தி ஆகியிருக்கே தவிர, ஆளுமை விருத்தியகலை.''

''கத்தியை யார் திருடுவா.''

''நவ நீதகிருஷ்ணன்.''

''நவநீதனா...இப்பமே சின்னவர்கிட்டே சொல்லி...'' சுகவனம் ஆத்திரப்பட்டான்.



''சும்மா இரு. நடக்கிறது நடக்கட்டும்.''

''எப்போ திருட்டு போகும்.''

''இந்நேரம் போயிட்டிருக்கும்.''

''ஐயோ...'' மணிவண்ணன் கீழிறங்கி ஓடினான். சுகவனம் மாடியிலிருந்து எட்டிப்பார்த்தான்.

தோட்டக்கதவு திறந்திருந்தது.

கத்திகள் வைக்கப்பட்டிருந்த மரப்பெட்டி காணாமல் போயிருந்தது. ஈட்டி இல்லாத கம்பு மட்டும் மூலையில் இருந்தது,

'டாய்...' என்று கூச்சலோடு மணிவண்ணன் கதவு திறந்தபோது, சரசரவென்று கற்களும், சோடா பாட்டில் களும் வீட்டிற்குள் விழுந்தன.

மணிவண்ணன் பயந்து பின்னடைந்தான்.

''நாம மாறிட்டோங்கிறதுக்கு நீ ஒரு உதாரணம். கல்லுக்கே பயந்துட்டியே...நீ எப்படி கத்தியை சந்திக்கப் போறே...நமக்கு அரசு மறந்து போச்சு. ஆட்சி மறந்து போச்சு. அரசியல் மறந்து போச்சு, அடிதடி மறந்து போச்சு. ஆளுமை குறைஞ்சு போச்சு. நாம மாறிட் டோம்.''

''பாவி...திருடிட்டுப் போறானே...'' அண்ணி பதறி னாள்,

''தப்பில்லை. அது ஒருவகை யுத்தம். முடிஞ்சா அவனை அடிச்சு, இழுத்துட்டு வரணும், முடியாது. அதனால, அந்த சொத்து அவன்கிட்டயே இருக்கட்டும்.'

''இது அவனுக்கு நல்லது தருமா. இந்த சொத்து அவனை உயர்த்துமா. இதுக்கு அவன் ஒழுங்கா படையல் போடுவானா'' அண்ணி பொருமினாள்.

''மாட்டான். உயர்த்தாது. அழிக்கும். இந்நேரம் அழிவு ஆரம்பிச்சிடும். வெளியே சொல்லமுடியாதபடி விதவிதமா கஷ்டப்படுவான். வயசான காலத்துல ஜெயிலுக்குப் போவான். நோய்ப்படுவான். சொந்தக்காரங்களை தலையில் கல்லுபோட்டு கொன்னுடுவான்.''

''எனக்கு மனசே சரியில்லை பெரியப்பா.''

''இங்க வா. என் எதிர்க்க உக்காரு. இடது மூக்கு துவாரம் வழியா காற்று இழுத்து, வலது மூக்கு துவாரம் வழியா விடு.''

''அடுத்தது என்னை தயார் பண்றீங்களா.'' மணிவண்ணன் வேதனையோடு கேட்டான்.

ஆமாம். நீ ஒரு ஆயிரம் பேரை தயார் பண்ணு. கோயம்புத்தூர்ல பெருசா ஒரு தியான மண்டபம் கட்டு. நாம மண்ணை ஆண்டது போதும். மனசைஆள கத்துக்குவோம். இனி, மண்ணுக்கும், காசுக்கும் மதிப்பே இல்லாத காலமாயிடும். மண்ணு வாங்கறவங்க ஏகப்பட்ட அநியாயங்களை பண்ணப் போறாங்க. உன் பசங்களும் சுகவனம் பசங்களும் இந்த மண்ணுக்கு சம்பந்தம் இல்லாத ஆகப்போறாங்க. வசதியா வெளி தேசத்துல குடியேறப் போறாங்க. வேறு தேசத்து ஆளை கல்யாணம் பண்ணிக்கப் போறாங்க.

''அந்த கத்தி அவங்களுக்கு வேண்டாம், படையல் போடாத ஆயுதம் பழிவாங்கும். மறுபடி நம்ம ஐயா



பண்ணுல பொறந்து, அந்த கத்தியை கையிலே எடுப்பாரு. அதுக்கு இன்னும் ரொம்ப நாளு இருக்கு.''

அடுத்த வாரம் ஒரு வாரப் பத்திரிகையில் தான் நாடாண்ட பரம்பரையில் வந்தவரென்றும் தன்னிடம் ஆயிரம் வருடத்து கத்தி, கவசம், ஈட்டி எல்லாம் இருக்கிறது என்றும் விவரம் சொல்லி, அரச உடையோடு சிங்காசனத்தில் அமர்ந்து, முத்து தலைப்பாகை அணிந்து, கையில் வாள் பிடித்து நவநீதகிருஷ்ணன் போஸ் கொடுத்தான்.

அதற்கு அடுத்த வாரம் சின்னவர் ஆட்சி கலைக்கப்பட்டது.

அன்றிரவு அவரை சோதித்த சுகவனம் அவர் உடம்பில் எதிர்ப்பு சக்தி குறைவதை கண்டுபிடித்தான், கவலைப்பட்டான்.

''என்ன கவலையா இருக்கே...உனக்கு ஏதாவது உதவி செய்யணுமா.''

''ஒண்ணும் வேண்டாம். எப்போ வந்தாலும் உங்களை பாக்கறதுக்கு அனுமதி கொடுங்க. அது போதும். உங்களுக்கு கடைசி வரைக்கும் நான்தான் டாக்டரா இருக்கணும். அந்த அனுமதியும் வேணும்.''

''நிச்சயம்.'' சின்னவர் அவன் கைபிடித்து எழுந்திருந்தார்.

அவர் கேட்டு தான் எந்த உதவியும் பெறாததே. சுகவனத்திற்கு பரம திருப்தியாய் இருந்தது.

அவர் வீட்டைவிட்டு ராஜநடை நடந்து காரில் ஏறினான்.

நவநீதகிருஷ்ணன் அந்த வீட்டு வாசலில் கைகட்டி நிற்பதை பார்க்க பிடித்தது.

கார் மெல்ல வெளியே நகர்ந்தது.

''யாருப்பா அது. மந்திரியா...''

''மந்திரி இல்லே...டாக்டர், மந்திரியெல்லாம் பவிஷு அழிஞ்சவங்க. காரை வெளியே நிறுத்திட்டு உள்ளே நடந்துதான் போவாங்க. இவரு சொந்த டாக்டர். கடைசிமுட்டும் கார்ல போவாரு. நேரா வாசப்படியில போய் இறங்குவாரு.'' வாசல் ஜனம் பேசியது.

சுகவனத்தின் மனசும், முகமும் தாமரையாய் மலர்ந்தன. நிறைய ஜனங்களுக்கு வைத்தியம் செய்யும் தெம்பு உள்ளே கிளற ஆரம்பித்தது. கார் ஓட்டியபடியே சுகவனம் தன் மூதாதையர்களை வணங்கினார்.

முற்றும்